அறைவு 03
இயம் 40
April 18-24, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20
விலை : 30.00

சம்பூர் மக்களைக் குடியேற்ற இன்னும் இருப்பது
countdown 12 start
நாட்கள்
நிறைவேறுமா? ஏமாறுமா?...

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# கிழக்கிலும் தனித்துப் போட்டியிடுவோம்



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

கிழக்கில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தயாராகி விட்டது என அக் கட்சித் தலைவர் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளை வைத்துக்கொண்டு தமிழர்களின் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாதுள்ள நிலையில் தமிழருக்கான தனியான தேசம் என்ற கருப்பொருளுடன் எதிர்வரும் தேர்தலில் களமிறங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் விடயம் 17

## "தமிழருக்கென்றொரு தனியான தேசம் அமைந்து சமஷ்டி முறை உருவாக வேண்டும்"

## கிழக்கில் பல்கலைக்கழக மலையக மாணவருக்கு சைக்கிள்கள்

கிழக்கில் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவரும் மலையக மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளதாக கல்வி இராசாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். 17

## இனத்திற்காய்ப் பாயும் இராயப்பு நதிக்கு இன்று அகவை 75



பொன் காந்தன்

நீண்ட காலத்துக்குப்பிறகு
நெருப்பொன்றுக்கு வாழ்த்துப்பாட வாய்த்த நாளிது
வெள்ளையுடுத்த வீரனுக்கு
மன்னாரில் இருந்து தமிழருக்காயத்
தன்னையுருக்கும் மெழுகுக்கு
கண்ணை மூடிக்கொண்டு எழுதலாம்- கவிதை
மண்ணை நேசிக்கிறவனுக்காக
வருகிற வரிகளில் - எப்பொழுதும்
வண்டுகள் துளைத்த ஓட்டைகள் இருப்பதில்லை.
கர்த்தர் எம் மண்ணை
ஆசீர்வதிக்க அனுப்பிய
ஒருவரின் பெயர்தான் இராயப்புயோசப்பு
இன்றைக்கு அந்த மேன்மையருக்கு அகவு எழுபத்தைந்து.
மனத்தையும் இனத்தையும் நேசிக்கின்றவோர்
இமயத்தின் வயசுதான்
இந்த எழுபத்தைந்து.
உள்ளே கொழுந்துவிட்டெரியும்
நெருப்போடு - நித்தியபூசைகளை நிறைவேற்றும்
மதகுருக்களில் மாமனிதன் இராயப்பு ஜோசப்.
இவரின் கிளைநதிகள் பலவற்றை பார்த்திருக்கின்றேன்.
கடவுளின் தோத்திரங்களுக்கு மேலாய்
விடுதலைத் தாகமடங்கிய வேண்டுதல்கள் பொங்கிப்
பிரவாகிப்பதை கேட்டிருக்கின்றேன்.
பிரார்த்தனைகளில் கலக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களில்
தீக்குளித்த நேரத்தில் இருந்துதான்
திரும்ப யிருக்கின்றேன்.
வெறும் பங்குத்தந்தைகளாய் அல்ல
இனத்தின் இன்னல்கள் துன்பங்களில் பங்கெடுக்கும்
தந்தைகளாய் பல பேர் எங்கிருந்து என்று சிந்திக்கும்போது
இது இராயப்புயோசப்பு எனும் ஊற்றில் இருந்தும் என
உணர்ந்துகொண்டேன்.
ஆண்டவன் என்ன நினைக்கிறான் என ஏங்கும்
மானுடத்துள் - நீ என்ன நினைக்கிறாய் என்று
ஆண்டவன் விரும்பி அபிப்பிராயம் கேட்கும்
ஒரு சில மனிதரில் இராயப்புயோசப் உள்ளடக்கம்
என்பேன்.
ஆயர் கதிரை அழகாய் இருப்பதை பார்க்கின்றேன்.
அர்த்தமுள்ள கதிரைகளை காணும்போதெல்லாம்
நெஞ்சத்தை ஒருமுறை கழுவிக்கொள்ள முடிகின்றது.
இப்பொழுது தமிழனுக்கு என்ன பலம் என்று கேட்டால்
அதில் ஆண்டகையின் அவதாரமும் ஒன்று. 17

## வர்த்தமானி அறிவிப்பு வெளியாகவில்லை

சம்பூர் மக்களின் காணிகளை மீண்டும் சம்பூர் மக்களிடம் கையளிக்கும் வர்த்தமானி அறிவிப்பானது நேற்று வெளியிடப்படும் என மக்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் அவ் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளிவரவில்லை எனத் தெரிகின்றது.

## "கிழக்கில் சட்டவிரோதக் கைதுகள் தொடர்கின்றன" - பொன் செல்வராசா



கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத கைது நடவடிக்கைகள் தொடர்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பின்னரும் கைது நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். 17

# திருமலை நகரசபை முதல்வருக்கு எதிராகப் போராட தொழிலாளர்கள் முடிவு




திருகோணமலை நகரசபைத் தலைவருக்கு எதிரான போராட்டமொன்றை முன்னெடுக்கப்போவதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கம் அறிக்கையிட்டுள்ளது.

எதிர்வரும் 22.04.2015 அன்று அடையாள வேலை நிறுத்தமொன்றை முன்னெடுக்கப்போவதாக அறிவித்துள்ள இச் சங்கம் அதற்கான முன்னறிவிப்பை கிழக்கின் முதலமைச்சருக்கு விடுத்துள்ளதுடன் அவ்வறிவிப்பின் பிரதிகளை கிழக்கு மாகாண ஆளுனர், பிரதம செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், பொதுச்சேவை ஆணைக்குழு, நகரசபைச் செயலாளர் மற்றும் காவல் துறையினருக்கு இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# தேசிய கீதத்தை இசைக்கும் மொழி?

**ஸ்ரீ**லங்காவின் தேசிய கீதத்தைப் பாடுகின்ற மொழி தொடர்பான சர்சைகள் புதிய அரசின் கீழ்ப் பரிணாமம் எடுத்துள்ள வேளையில் அதனைத தவிர்ப்பதற்காகத் தாராள, மிதவாத புதிய அரசின் தலைவரின் அறிவிப்பானது ஸ்ரீலங்காவின் தேசிய கீதத்தைத் தமிழிலும் பாடலாம் எனத் தெரிவிக்கின்றது.

தேசிய கீததைத் தமிழில் பாடுவதற்கான தடைகள் ஏற்படத்தப்பட்டது 2010ம் ஆண்டளவில்தான்.

ஆயுதப் போராட்டம் நிறைவிற்கு வந்ததை அடுத்து பௌத்த சிங்களப் பேரினவாதப் போக்கில் தமிழர்களுக்குத் இரகசியமாகத் தடுக்கப்பட்ட விடயங்களுள் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதும் ஒன்றாக இருந்தது.

எனினும் அன்றைய காலகட்டத்தில் இருந்த கடும் போக்கு நாட்டுத் தலைவர் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாடுவதையே ஊக்குவிததார். எனினும் அவரது வீழ்ச்சியின் பின்னர் அதே சிந்தனை வீச்சைக் கொண்ட காவியுடை தரித்த சிலரால் தற்போது தேசிய கீதத்தின் மொழி சிங்களம் மட்டுமே என வாதிடப்படும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறு தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் மட்டுமே இசைக்க வற்புறுத்துவது அல்லது தமிழ் மொழியில் இசைக்கத் தடுப்பது தமிழர்களை ஒரு தேசிய இனம் என்ற வரையறையில் இருந்து இல்லாமற் செய்ய எடுக்கப்படும் பல்வேறு உத்திகளின் ஒரு வடிவமாகவே பார்க்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டில் வாழ்கின்ற பல்வேறு தேசிய இனங்கள் தமது மொழியில் அந்த நாட்டின் தேசிய கீதத்தை இசைக்க முடியும். அதே போல தேசிய இன அந்தஸ்த்தைப் பெறாத இனங்கள் தமக்கான மொழியில் தேசிய கீதத்தைப் பாடுவதை நாம் தற்போது வரை அறிந்திருக்கவில்லை. ஆயுதப் போராட்ட நிறைவின் பின்னர் தமிழர் ஒரு தேசிய இனம் என்பதைச் சிதைக்கும் நடவடிக்கைகள் பெருமெடுப்பில் நிகழ்வதைக் காணலாம்.

அதன் ஒரு வடிவமாக முன்னைய அரச அதிபரால் அறிமுகப்படுத்தப்பட்ட "ஒருநாடு, ஒரு தேசம்" என்ற வாசகம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு தேசிய இனம் ஒரு மொழியின் அடிப்படையிலேயே உருவாக்கம் பெறுகின்றது. அதனால் தேசிய கீதத்தைத் தமிழில் இசைத்தல் என்பது தமிழத் தேசிய இனத்திற்கான இருப்பை உறுதிப்படுத்தும் ஒரு நிகழ்வாக பார்க்கப்பட வேண்டுமேயொழிய அதனை வெறும் சடங்காகப் பார்க்கவோ அவ்விடயம் தொடர்பாக ஏதேனும் வி[illegible]க் கொடுப்புக்களுக்கு முனையவோ கூடாது.

இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் தேசிய இனம் என்பதனை இல்லாது ஒழித்து அவர்களைச் சிறிலங்கர் என மாற்றுவதன் ஊடாக "ஒரு நாடு, ஒரு தேசம்" என்ற வரையறையை உருவாக்கும் முயற்சிகள் வெற்றிபெறுமாயின் அதுவே ஈழத் தமிழரின் .ருப்பைக் கேள்விக்குறியாக்குமேயொழிய கடந்த முப்பதாண்டுகளாக நடைபெற்ற ஆயுதப் போரில் நிறைவு அல்ல என்பதை நாம் அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும்.

சுவிட்சலாந்து, கனடா, கெமரூன்,தென்ஆபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளில் தேசிய கீதமானது அந்தந்தப் பிரதேசத்திலுள்ள தேசிய இனங்களில் மொழிகளிலேயே மொழிபெயர்க்கப்பட்டுப் பாடப்படுகின்றன. எனவே தேசிய கீதத்தில் மொழி என்பது எத்துனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் புரிந்துகொள்வோமா?

## புல்மோட்டைக்கு அமைச்சர் வருகை

**வ**ணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் புல்மோட்டைப் பிரதேசத்திற்கு கடந்த 16ம் திகதி வருகை தந்திருந்தார்.

அதன்போது புல்மோட்டைக் கனியமணல் கூட்டுத்தாபனத்திற்குச் சென்றிருந்த அவர் அக் கூட்டுத்தாபன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள மருத்துவசாலையைத் திறந்துவைத்தார். சனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தன்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாக பல நிறுவனங்களைத் தமது அமைச்சின் கீழ் தந்திருப்பதாக அங்கு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ரவி)

## கள்ள மாடுகள் கைப்பற்றப்பட்டன

**கி**ண்ணியா வாணாறு பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட பதினைந்து மாடுகளும் அறுக்கப்படத் தயாராக இருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15ம் திகதி வரைக்குமான காலப்பகுதியில் பதினைந்து மாடுகள் காணாமல் போயிருந்தன.

அதனைத் தேடிய உரிமையாளர்கள் அவை வான்எல பிரதேசத்தில் அறுவைக்குத் தயாராக இருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

விபரம் காவல்துறைக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மாடு கடத்தல் சந்தேக நபர்கள் இருவர் அங்கிருந்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன. (தன்யா)

## "இணைந்து செயற்பட வாருங்கள்"

### கிழக்கின் கல்வி அமைச்சர் அழைப்பு

**முன்** பள்ளிப் படிப்பையும், யிற்சியையும் நிறைவு செய்த திருக்கோணமலை கிண்ணியா முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 12.04.2015 அன்று கிண்ணியா விஷன் மண்டபத்தில் நடைபெற்றது .

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் திரு.சி தண்டாயுதபாணி முன்பள்ளி அபிவிருத்தில் ஈடுபட்டுள்ள அரச அரச சார்பற்ற நிறுவனங்களைை தம்மோடு இணைந்து செயல்பட வருமாறு கூறினார். மற்றும் தன்னுடைய அமைச்சுக்கு கீழ் முன்பள்ளி செயல்படுவதனால் அதனை அபிவிருத்தி செய்வதற்கு தன்னால் முடிந்த முயற்சிகளை எடுப்பேன் எனவும் கூறினா

இந்நிகழ்வில் சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.



## A6 வீதியில் விபத்து



**க**ண்டி திருமலை நெடுஞ்சாலையில் யக்காவங்குவ பகுதியில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற விபத்தொன்றில் சொகுசு வான் கடும் சேதமடைந்துள்ளது.

உயிர் சேதங்களை ஏற்படுத்தாத இவ் விபத்தின் போது சிவனொளிபாத மலையிலிருந்து திருமலை நோக்கிப் பயணித்த இவ்வாகனத்தில் மிகுந்துபுர பாடசாலை ஆசிரியரொருவரின் குடும்பம் பயணித்துள்ளது.

காயமடைந்த இருவர் பொலனறுவை வைத்தியசாலையில் சிக்கிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை பாலம்போட்டாறு பகுதியில் கடந்த 14ம் திகதி பத்துச்சகரப் பார ஊர்தியொன்று பாலமொன்றின் பாதுகாப்பு தடைகளுடன் மோதி விபத்தடைந்துள்ளது.



கடந்த 10ம் திகதி 99வது மைல்கல்லில் கட்டாக்காலி மாட்டுடன் மோதிய சொகுசு வான் வீதியை விட்டு பள்ளத்தினுள் வீழ்ந்துள்ளது.

இவ்விபத்தில் பயணம் மேற்கொண்டவர்கள் காணமடைந்து கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். மாடு பலியாகியுள்ளது. (கதிரவன்)



## மாவட்டச் சாரணர் கூட்டம்

**தி**ருமலை மாவட்டச் சாரணர் சங்கத்தின் பொதுக் கூட்டம் 03.05.2015 காலை 9.00 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## காவல்துறையினர் கோணேசருக்குப் பூசை

**தி**ருகோணமலைக் காவல்துறைப் பிரிவினர் கோணேசர் கோவிலில் கடந்த 15ம் திகதி புதுவருடப் பூசைகளை நடாத்தினர் (கதிரவன்)



## சம்பூர் ஸதீஸ் எழுதிய "கொட்டியாபுரச் சிங்கம்" வரலாற்றுக் குறுநாவல் வெளியீடு




**வை**த்திய கலாநிதி சம்பூர் அ. ஸதீஸ்குமார் எழுதிய "கொட்டியாபுரத்து சிங்கம்" என்ற வரலாற்று குறுநாவல் நூல் வெளியீட்டு விழா 25.04.2015 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நிங்களும் எழுதலாம் சஞ்சிகையின் ஆசிரியர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணியும், கௌரவ விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் டபிள்யு.ஏ.எல் விக்ரம ஆராய்ச்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரலாற்று குறுநாவலின் அறிமுக உரையை மலைமுரசு பத்திரிகையின் ஆசிரியர் இரா. ஸ்ரீஞானேஸ்வரன் நிகழ்த்த, மூத்த எழுத்தாளர். ச. அருளானந்தம் நயவுரை நிகழ்த்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## நிரந்தர நியமனம் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 180 நாட்கள் தற்காலிக மற்றும் அமைய தொண்டர் அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்களுக்கு புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ், கமநல அபிவிருத்தி அமைச்சு நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளது. 41 ஊழியர்கள் நிரந்தர நியமனங்களை கடந்த புதன்கிழமை பெற்றுக்கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் அதன் மாவட்ட பிரதி ஆணையாளர் கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விற்பனை எழுதுநர், பண்ணை உதவியாளர், காவலாளி ஆகிய பதவிகளுக்கு நிரந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

## வைத்தியசாலையில் சிறுவர் பூங்கா

பெரியகல்லாறு, ஆதார வைத்தியசாலையில் சிறுவர் பூங்கா கடந்த வியாழக்கிழமை வைத்திய சாலையின் வைத்திய பணிப்பாளர் டாக்டர் எஸ்.ருதேசன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா "மக்களுக்கான சேவையாற்றுவதற்கு ஆளும் கட்சியில்தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் பல சேவைகளையாற்றலாம்" என தெரிவித்தார்.



வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் சிறுவர்கள் பொழுதினைக் கழிக்கும் வகையில் இந்த சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில் ௦௬ சிசுக்கள் பிரசவிப்பு

கிரான் பிரதேசத்தைச் சேர்ந்த டினோரஞ்சி முத்துக்கிருஸ்ணன் என்ற தாய் மூன்று பிள்ளைகளையும், தன்னாமுனையை சேர்ந்த மேகானந்தி சுதாகரன் என்ற பெண் மூன்று குழந்தைகளையும் பிரசவித்துள்ளனர். இந்த சிசுக்கள் ஆரோக்கியமான நிலையில் உள்ளதாக குழந்தைகள் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி சித்திரா கடம்பநாதன் தெரிவித்தார்.

தன்னாமுனைய சேர்ந்த மேகானந்தி சுதாகரனின் குடும்ப நிலைமை மிகவும் வறுமையான நிலையில் உள்ளதால் அவருக்கு உதவுமாறு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

## இஸ்லாத்திலிருந்து இந்து மதம் நோக்கி

பொத்துவில் அல் நஜாத் வீதியில் வசிக்கும் அஸ்கார் லெப்பை என்பவர் இஸ்லாமிய மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மாறி மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி காளி கோயில் வீதியில் வசிக்கும் சுதாராணி என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

இவர்கள் செங்கலடி வர்த்தக சங்கத் தலைவர் செல்லம் மோகனின் தலைமையில் திருமணம் செய்து கொண்டனர். இது பற்றி மோகன் தெரிவிக்கையில், நமது சமூகத்திற்கு ஒரு கட்டுப்பாடு நியதி உள்ளது. அதன் பிரகாரம் அவர்களுக்கு எமது சம்பிரதாய முறைப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றார்.

## மோட்டார் குண்டு கண்டுபிடிப்பு



மட்டக்களப்பு நகரில் சனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியான கூழாவடி புகையிரத தண்டவாளத்துக்கு அருகில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு காவல் துறையினர் தெரிவித்தனர். பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சென்ற காவல் துறையினர் குறித்த பிரதேசத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து 231 படைப் பிரிவின் பொறியியல் இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு குண்டு பாதுகாப்பான முறையில் திராய்மடு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

## மோசடி செய்த நபர் பிணையில்

ஏறாவூரைச் சேர்ந்த அப்துல்லாஹ் (11 மாதம்) என்ற வறிய நிலையிலுள்ள குழந்தை ஒன்றுக்கு இருதய வால்வு மாற்று சிகிச்சை மேற்கொள்வதற்காக சமூக ஆர்வலாரான நஸீரினால் அவரது முகநூல் மூலம் நிதி திரட்டப்பட்டது. அக் கணக்கிலக்கத்துக்கு நாளாந்தம் கொடையாளிகள் தர்மம் செய்யும் நிதியிலிருந்து இளைஞன் ஒருவன் இரண்டு இலட்சத்து ஐயாயிரத்து ஐம்பது ரூபாய் பணத்தை தனது நண்பர்கள் இருவரின் கணக்குக்கு மாற்றி பணத்தைப் பெற்று வந்துள்ளான். இது தொடர்பாக விசாரணை செய்த ஏறாவூர் கால்துறையினர் மோசடியில் ஈடுபட்ட நபரைக் கைது செய்தனர்.

பரிசீலித்த மட்டக்களப்பு மாவட்ட நீதவான் "குழந்தையின் சத்திரசிகிச்சைக்குத் தேவையான ஏழு இலட்சம் ரூபாவையும் சம்பந்தப்பட்டவர் செலுத்தி பிணையில் செல்லலாம்" என அறிவித்ததன் படி ஏழு இலட்ச ரூபாய் செலுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## கழகங்கள் மறுசீரமைப்பு - 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ்




மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள இளைஞர் கழகங்கள் மற்றும் பிரதேச சம்மேளனங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுவரும் நிலையில் மாவட்ட சம்மேளனத்தை மறுசீரமைக்கும் பணிகள் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"கனவு காண்பதற்கல்ல வழிகாட்டுவதுக்கு" என்னும் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 388 இளைஞர் கழகங்களையும் உள்ளடக்கியதான இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் விசேட செயலமர்வு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.எல்.ஏ.எம்.நைரூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

## தந்தையை கொலை செய்த மகன் தற்கொலை



திருப்பெருந்துறை, மயான வீதியில் உள்ள ஞானமுத்து விஜயன் (60) என்பவர் அவரின் மகனால் கடுமையான முறையில் தாக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தந்தைக்கும் மகனுக்கும் இடையில் இடம்பெற்ற பணப்பிரச்சினை தொடர்பான வாக்குவாதம் காரணமாக தந்தை மகனால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். இதனைத்தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறிச்சென்ற மகன் மதுஅருந்திய நிலையில் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்ற புகையிரதத்தில் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார் என விசாரணை நடாத்திய காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## குறைந்த வீதத்தில் சமுர்த்தி கடன்

ஏறாவூர் கிழக்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா தலைமையில், சமுர்த்திப் பயனாளிகள் 35 பேருக்கு சுயதொழில் முயற்சிக்காக தலா ஒரு இலட்சம் ரூபாய் சுயதொழில் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வறுமையைப் போக்கி சுபீட்சத்தை உருவாக்குவதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சமுர்த்தித் திட்டத்தின் நோக்கமாகும். இலங்கையிலே அதிகூடிய சமுர்த்தி உணவு முத்திரை பெறுகின்ற நாலாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. இம்மாவட்டத்தில், சுமார் 79 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் சமுர்த்தி உணவு முத்திரை பெறுகின்றார்கள்.

சமுர்த்தி நிதியை மக்களுக்குக் கொடுத்து சுழற்சி நிதியில் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற புதிய அரசாங்கத்தின் சிந்தனையின் அடிப்படையில்தான் ஆகக்கூடிய கடன் தொகையாக வருடாந்த நான்கு வீத வட்டியில் ஒரு இலட்ச ரூபாய் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.



## சுதேச வைத்திய சங்கம் உருவாக்கம்

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயுர்வேத சுதேச வைத்தியர்களின் சங்கமொன்று கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் புதிய திட்டத்தின் கீழ் ஆயுர்வேத திணைக்களத்தின் சுற்றுநிருபத்துக்கு அமைய காத்தான்குடி பிரதேச செயலாளரின் ஆலோசனையுடன் இந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று இந்தச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## நுண்கடன் பெறுவதில் கவனம் தேவை

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் நுண் நிதி செயற் திட்டப்பிரிவினால், கடன் வாழ்வில் சுமை எனும் பதாதைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பொது இடங்களிலும் சில அரச காரியாலயங்களுக்கு முன்பாகவும் தொங்க விடப்பட்டுள்ளன. விழித்தெழு எனும் தலைப்பில் கடன் வாழ்வில் சுமை, நுண்கடன் கவனமாக சிந்தித்து செயற்படுங்கள் என அந்த பதாதையில் எழுதப்பட்டுள்ளன.




## கிழக்கில் சாதனைகள் வலுப்பெற வேண்டும்

வடமாகாணம் கல்வியில் பல சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கின்றது. அந்த நிலைமை கிழக்கு மாகாணத்திலும் வலுப்பெறவேண்டும் என்று கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ்.மனோகரன் தெரிவித்தார். மட்டக்களப்பு, சமூக மேம்பாட்டு மையம் நடத்திய விருந்தளிப்பு விழா கடந்த சனிக்கிழமை மட். குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
# தேசிய செய்திகள்

## தீ வைத்ததாக இலங்கைப் பெண் கைது

பஹ்ரைனில் இலங்கைப் பணிப் பெண் ஒருவர், தான் பணி புரிந்த வீட்டை விட்டு தப்பிச் செல்லுமுன், வீட்டுக்கு தீ வைத்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துள்ளார். 48 வயதான குறித்த இலங்கை பணிப்பெண் வீட்டு உரிமையாளர்கள் உறங்கிக் கொண்டிருந்த போது, தனது அறையில் பெற்றோலை ஊற்றி தீ வைத்துவிட்டு ஓடிவிட்டார் என இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எஜமானர்களின் கொடுமை காரணமாகவே வீட்டை விட்டு தப்பி ஓடியதாக கூறியுள்ள அவர், தனது எஜமானி தன்னை மோசமாக நடத்தியதாகவும் அதிகளவு வேலை கொடுத்ததாகவும் கூறினார்.

## தலைவர் பிரபாகரனே சொன்னாலும் பதிவு செய்ய மாட்டோம் - மாவை

சுவிற்சர்லாந்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளிற்கிடையில் இணக்கத்தை ஏற்படுத்தி, தமிழ்தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. "இப்போதைக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பை பதிவு செய்யும் எண்ணமில்லை" என ஒரேபோடாக போடாக போட்டு முடித்துள்ளார் மாவை சேனாதிராஜா.

கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென அவர்கள் உறுதியான நிலைப்பாட்டில் இருந்ததால், தமது இறுக்கத்தை படிப்படியாக அதிகரித்து, மாவையை வற்புறுத்தியுள்ளனர். ஒரு கட்டத்தில், கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமென மிரட்டல் பாணியில் கூறியுள்ளனர். இதனால் அலமலந்துபோன மாவை, "என்ன நீங்கள் இப்பிடி கதைக்கிறியள்?.. தலைவர் கூட என்னோட இப்பிடி கதைச்சதில்லை" என முறையிட்டுள்ளதுடன், இறுதியில், தமிழ்தேசிய கூட்டமைப்பை இப்போதைக்கு பதிவு செய்யும் எண்ணமில்லை. கூட்டமைப்பை பதிவு செய்யுமாறு உருவாக்கியபோதே சொல்லவில்லை. அதனால் உங்கள் தலைவர் வந்து சொன்னாலும் பதிவு செய்யும் திட்டமில்லையென மாவை அடித்து கூறிவிட்டார். இந்த விடயம் தோல்வியில் முடிந்ததன் பின்னர், தமிழ்தேசிய மக்கள் முன்னணியை கூட்டமைப்பிற்குள் இணைத்துக் கொள்ள வேண்டுமென அந்த பிரதிநிதிகள் வலியுறுத்தினார்கள்.

அந்தக்கட்சி ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறி சென்றது. மீண்டும் அப்படி செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம் என மாவை கேட்டார். எனினும், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் செல்வாக்கு புலம்பெயர் நாடுகளில் அதிகரித்து செல்வதை சுட்டிக்காட்டி, அவர்களை வெளியில் விட்டால் உங்களிற்குத்தான் பாதகம். எதிர்வரும் தேர்தல்களில் அவர்களும் பலமான சக்தியாக வெளியில் நிற்பார்களே என்றார்கள். எனினும், அவர்களை மீண்டும் இணைப்பது தொடர்பில் கட்சிக்குள் ஆலோசித்து விட்டுத்தான் முடிவு சொல்லலாம் என மாவை கூறியுள்ளார் என தீபம் செய்தி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது

## மே இல் பா.ம கலைப்பு - இனி குடும்ப ஆட்சிக்கு இடமில்லை

: பாராளுமன்றத்தை எதிர்வரும் மே மாதம் கலைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், இருக்கின்ற அதிகாரங்களை பலப்படுத்துவதற்கு இந்த பதவிக்கு வரவில்லை. மாறாக எனது கரங்களில் இருக்கின்ற அதிகாரங்களை வழங்குவதற்கே வந்துள்ளேன். ஒரு நாட்டின் அதிகாரங்கள் மத்தியில் குவிந்திருப்பது அந்நாட்டுக்கு பாரிய பிரச்சினையாகும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியின் கீழ் இலங்கை ஒரு குடும்பத்தின் கரங்களுக்குள் சிக்கிய நாடாக இருந்து வந்தது. இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்படும் அரசியலமைப்பு மாற்றங்களுடன் எதிர்காலத்தில் எந்தவொரு தனிக் குடும்பமும் இவ்வாறு நாட்டை மீண்டும் கட்டுப்படுத்தும் நிலைக்கு இடமளிக்கமாட்டோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டைம்ஸ் சஞ்சிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளதாக தீபம் செய்தி தெரிவிக்கின்றது



## லண்டன் விருது பெற்ற இலங்கைத் தமிழர்



இலங்கையைச் சேர்ந்தவரான கலாநிதி. சுந்தர் மகாலிங்கம் (சுந்தரவதனன் மகாலிங்கம்) பொருளறிவியல் தொடர் பில் மேற் கொண்ட ஆய்வுக்காக சர்வதேச இளம் ஆராய்ச்சியாளர் களுக்கான விருதை வென்றுள்ளார். மேற்படி விருதானது உயிரியல் விஞ்ஞானம், பொருள்சார் பொறியியல் தொடர்பான ஆய்வியல் மற்றும் கோட்பாடுசார் விடயங்கள் பற்றிய சிறப்பு ஆராய்ச்சிகளை அடையாளங்கண்டு அவற்றை அங்கீகரிக்கும் பொருட்டு, 35 வயது அல்லது அதற்கு குறைவான தனிநபர்களுக்கு லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியினால் வழங்கப்படுகின்றது.

சுந்தர் தனது கலாநிதி பட்டத்தை லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் அவர் முன்னெடுத்த இலத்திரனியல் மற்றும் நீர் இயக்கவிசை தொடர்பான ஆராய்ச்சி யொன்றுக்காக பெற்றுக்கொண்டார்.

## சோமவங்ச வருவாரா?

ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளருமான சோமவன்ச அமரசிங்கவை மீண்டும் கட்சிக்குள் இணைந்துகொள்வதற்காக முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது,

அக்கட்சியின் அரசியல் சபை கூட்டத்திலேயே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்சியில் தான் வகித்த சகல பதவிகளிலிருந்தும் சோமவன்ச அமரசிங்க நேற்று வியாழக்கிழமை இராஜினாமா செய்திருந்தார்.

இதேவேளை புதிய கட்சியொன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கட்சி தொடர்பில் கிளம்பியுள்ள வதந்திகளில் எந்த விதமான உண்மையும் இல்லை என அக்கட்சியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பல்கலைக்கழக பத்திரங்கள் மே மாதம் வெளியாகும்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவம் அடங்கிய கைநூல் எதிர்வரும் மே மாதத்தில் வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை எதிர்வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்க உத்தேசித்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மாணவர்களுக்கு தேவையான புதிய பாடநெறிகள் மற்றும் ஏனைய பாடநெறிகள் தொடர்பான அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்டு இந்த கைநூல் விநியோகிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

## திறந்தவெளி மிருகக் காட்சி சாலை

இலங்கையின் முதலாவது திறந்தவெளி மிருகக்காட்சிசாலை, நேற்று (17) பின்னவல பிரதேசத்தில் திறந்துவைக்கப் பட்டது. பின்னவல யானைகள் சரணாலயத்தை அண்மித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மிருகக்காட்சிசாலையே, இலங்கையின் இரண்டாவது மிருகக்காட்சி சாலையும் ஆகும்.

மிருகங்களை கூண்டுகளில் அடைத்து காட்சிப்படுத்தும் கொள்கையிலிருந்து மாறுபட்ட நிலையில், சுதந்திரமாக மிருகங்கள் நடமாடக்கூடிய வகையில் இந்த மிருகக்காட்சிசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த மிருகக்காட்சிசாலையின் நிர்மாணப் பணிகளின் முதற்கட்டமாக, இலங்கையில் மாத்திரம் காணப்படும் பாரியளவிலான மிருகங்களை சுமார் 140 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட திறந்தவெளியில் விடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு இலங்கைக்கு மாத்திரமே உரித்தான சிறுத்தைகள், கரடிகள், மான்கள், மரைகள் என பல்வேறு வகையான மிருகங்கள் காணப்படுகின்றன.

இவை, "மான்கள் ஆரணியம்", "கரடிகள் ஆரணியம்", சிறுத்தைகள் ஆரணியம்", "முதலைகள் ஆரணியம்" என பல்வேறு ஆரணியங்களாக பிரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.



படங்கள் - லங்காதீப

## கட்டுநாயகாவில் தமிழ் இளைஞன் கைது

போலி ஆவணங்களை சமர்ப்பித்த குற்றச்சாட்டில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மற்றுமொரு தமிழ் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நாடு கடத்தப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலைய புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துர்க்கி ஊடாக இத்தாலிக்குச் செல்லும் முயற்சியில் இவர் ஈடுபட்டிருந்த நிலையில் அங்கிருந்து மீண்டும் நாட்டிற்கு நாடு நடத்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## இந்திய - பாகிஸ்தான் சமூக உறவு

இந்திய மற்றும் பாகிஸ்தானுக்கிடையில் நெருங்கிய உறவு ஏற்படும் வாய்ப்பு ஒன்று உருவாகி வருகின்றது. யேமனின் போர் நடைபெறும் பகுதியிலிருந்து 11 இந்தியர்கள் பாகிஸ்தானிய கடற்படையால் மீட்கப்பட்டதை தொடர்ந்து 3 பாகிஸ்தானியர்கள் இந்திய கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர். யேமனில் தோன்றியுள்ள நெருக்கடிநிலை காரணமாக இரு நாடுகளும் மனிதாபிமான அடிப்படையில் மீட்புபணிகளில் ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதுவர், இந்நடவடிக்கை இருநாடுகளுக்கு மிடையிலான உறவுகளை சீராக்க உதவும் என குறிப்பிட்டுள்ளார்.



## பிரதமரை திக்குமுக்காட வைத்த சிறுமி

இங்கிலாந்தில் வரும் மே மாதம் 7ம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அந்நாட்டு பிரதமரான டேவிட் கேமரூன் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பாக மீண்டும் போட்டியிடுகிறார். இந் நிலையில் தேர்தலை முன்னிட்டு சூறாவளி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வரும் கேமரூனிடம் ரீமா என்ற 10 வயதான இந்திய வம்சாவளி சிறுமி, உங்களைத் தவிர்த்து வேறு ஒருவர் பிரதமராக வேண்டும் என்றால் நீங்கள் யாரை தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன் அவரை தேர்ந்தெடுப்பீர்கள்? என்று கேட்டு திகைக்க வைத்துள்ளாள்.

இந்த கேள்வியால் சில நிமிடங்கள் செயலிழந்து போன பிரதமர் கேமரூன், இந்த கேள்விக்கு பதிலளிப்பது மிகவும் கடினமானது. வேறொருவர் பிரதமராக வர வேண்டும் என்று நினைத்திருந்தால், நான் இந்த தேர்தலில் போட்டியிட்டிருக்க மாட்டேன் என்று பதிலளித்துள்ளார். மேலும், தேர்தல் பிரச்சாரத்தின் போது என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளிலேயே தலை சிறந்த கேள்வி இதுதான் என சிறுமி ரீமாவின் சாமர்த்தியத்தைப் பாராட்டியுள்ளார்.

## சுகாதார கேடாக உள்ள அகதி முகாம்கள்

அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரச் சென்றவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பப்புவா நியூகினியின் மனுஸ்தீவு அகதி முகாமில் மிகவும் கஷ்டமான சூழ்நிலை காணப்படுவதாக, அங்கு சென்று தகவல் சேகரித்துள்ள ஊடகவியலாளர் இயன் பிளாக்வெல் கூறுகிறார்.

மனுஸ் தீவில் உள்ள இந்த அகதிகள் தடுப்பு முகாமில் ஆயிரத்துக்கும் அதிகமான புகலிடக் கோரிக்கையாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அது சுகாதாரக்கேடான ஒரு இடமாக உள்ளதுடன் இந்தத் தடுப்பு முகாம் வெப்பம் தகிக்கும் இடமாகவும், அடிப்படை வசதிகளற்ற இடமாகவும் உள்ளது. இங்கு மலேரியா தாக்கத்தால் மிக மோசமான சுகாதார நிலைமை காணப்படுகிறது. சிறிய அறைகளில் அளவுக்கு அதிகமானோர் திணிக்கப்பட்டுள்ளனர். எனவும் தடுப்பு முகாமுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்ட ஊடகவியலாளர் மேலும் கூறுகிறார்.

## மீன் பிடிக்கத் தடை விதித்துள்ளது - இந்தியா

தமிழகத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு 15.04.2015 முதல், 45 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலம் என்பதால் இந்திய மத்திய வேளாண்மை அமைச்சு இந்த தடையை விதித்துள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. இதனால் மீன் வளத்தை பாதிக்கும் வகையில், இழுவை படகுகளையும், விசைப் படகுகளையும் எதிர்வரும் மே 29 ஆம் திகதிவரை கடலுக்கு கொண்டுசெல்வதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. மீன்பிடி தொழிலுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளதால் தமிழக மீனவர்களின் 15,000 படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



## தாய்வான் வரட்சியில்

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் வரட்சியை நிவர்த்தி செய்யும் வகையில், ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட வீட்டுப் பாவனையாளர்களுக்கு நீர் பங்கீட்டு கொடுக்கும் முறைமையை தாய்வான் தொடங்கியுள்ளது. நாட்டின் வடக்கு பகுதி நகரங்களில், வாரத்துக்கு இருமுறை நீர் விநியோகம் சுழற்சி முறையில் முற்றாக நிறுத்தப்படுகிறது. இப்பருவ காலத்தில் தாய்வானுக்கு கிடைக்கும் மிகக் குறைந்த மழைவீழ்ச்சியே இதற்கு பிரதான காரணமாகும்.

கடந்த 1947ஆம் ஆண்டுக்கு பின், தற்போதே மிகக்குறைந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. உலகில் மிகக்குறைந்த விலையில் தண்ணீர் கிடைப்பதால் தாராளமாக நீர் வீணாக்கப்படும் தாய்வானுக்கு இவ்வரட்சி ஒரு விழிப்பு அழைப்பாகும். வரட்சியால், தலைநகர் தாய்பேய் இன்னும் பாதிக்கப்படவில்லை. எனினும் அதற்கருகிலுள்ள நகரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

## பாலியல் வதைக்குட்படுத்தி சிறுமி படுகொலை



வட பிரான்ஸில் கலெயிஸ் நகரிலுள்ள தனது வீட்டிற்கு அண்மையில் விளையாடிய 9 வயது சிறுமியொருவர் கடத்தப்பட்டு சில மணி நேரத்தில் காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சலோ என அழைக்கப்படும் மேற்படி சிறுமி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். தனது வீட்டுக்கு அருகில் நண்பர் ஒருவருடன் விளையாடிக் கொண்டிருந்த சிறையிலிருந்து அண்மையில் விடுதலையான சிறுமியை போலந்தைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர் காரொன்றில் கடத்திச் சென்றதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளதை அடுத்து, காவல்துறையினர் அந்நபரை கைது செய்துள்ளனர்.

சிறுமியின் மரணத்தையடுத்து கலெயிஸ் நகரின் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

## அமெரிக்காவில் நீதிபதியாகிய தமிழ்ப் பெண்

அமெரிக்காவின் நியூயார்க் நகர குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராஜ ராஜேஸ்வரி (43) முதல்முறையாக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னையில் பிறந்த இவர், தனது 16 வயதில் அமெரிக்காவுக்குச் சென்றார். ராஜ ராஜேஸ்வரி இதற்கு முன்பு ரிச்மோண்ட் கவுண்டி மாவட்டத்தில் அரசுத் தரப்பு வழக்கறிஞராக 16 ஆண்டுகள் பணி புரிந்தார். அவரை நியூயார்க் நகர மேயர் பில் டி பால்சியோ, நியூயார்க் நகர குற்றவியல் நீதிமன்ற நீதிபதியாக நியமித்துள்ளார்.

அவ்வகையில் கொல்லப் பட்டவர்களின் உடல் உறுப்புகள் அதிர்ஷ்டமும் செல்வமும் தரும் என்ற நம்பிக்கையில் பாரம்பரிய நாட்டு வைத்தியர்கள் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

## அரச ஆவணத்தை கசிய விட்ட ஊடகவியலாளர் கைது

சீனாவில் அரசு ரகசிய ஆவணங்களைக் கசிய விட்ட முன்னணி பெண் பத்திரிகையாளருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. காவோ யூ, சீனாவில் வசிக்கும் முன்னணி பெண் பத்திரிகையாளர் ஆவார். இவர் கசியவிட்டதாகக் கூறப்படும் அந்த ஆவணம் "டாக்குமென்ட் நம்பர் 9" என்று பெயர் கொண்டதாகும். அதில் மேற்கத்திய அரசியலமைப்பு ஜனநாயகம் மற்றும் மனித உரிமை, கருத்துரிமை போன்ற "உலக விழுமியங்கள்" உள்ளிட்ட ஏழு விஷயங்களை ஒடுக்க வேண்டும் என்று தனது கட்சித் தொண்டர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருப்ப தாகக் கூறப்படுகிறது.

காவோ இவ்வாறு சிறைப்படுத்தப்படுவது இது முதல்முறை அல்ல. இதுகுறித்து காவோ கூறும்போது, "நீங்கள் மலைகளையும், நதிகளையும் மாற்றலாம். ஆனால் ஒருபோதும் ஒருவரின் இயல்புகளை மாற்ற முடியாது. ஏற்கெனவே நான் அனுபவித்த ஏழு ஆண்டு சிறைத் தண்டனை, அரசுக்கு எதிரான செய்திகளை எழுதுவதற்கான எனது ஊக்கத்தை எந்த விதத்திலும் குறைத்துவிடவில்லை" என்றார்.

## 50 ஆண்டுகளின் பின் முக்கிய சந்திப்பு

50 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக உயர்மட்ட சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது. பனாமாவில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டுக்கு சென்றுள்ள அமெரிக்க வெளிவிவகார செயலர் ஜோன் கெரிக்கும் கியூப வெளிவிவகார அமைச்சர் புருனோ ரொட்ரிகாசுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றன. இதேவேளை, கியூபாவை பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்குவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் பரிந்துரைத்துள்ளது. மேற்படி நடவடிக்கையானது இரு நாடுகளுக்குமிடையில் உறவுகளை புதுப்பிப்பதுக்கு வழிசமைப்பதாக உள்ளது.

இதேவேளை பனாமாவில் இடம்பெறவுள்ள அமெரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் கியூப ஜனாதிபதி ராவூல் காஸ்ரோவும் வரும் நாட்களில் தமக்கிடையே முதலாவது சந்திப்பை நடத்தவுள்ளனர்.



## தீவிரநிலையில் உள்நாட்டுப் போர்

ஏமனில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருகிறது, சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தி வருவதால் பல நகரங்கள் தீக்கிரையாகி வருகின்றன. வான்வழி தாக்குதல் பலனளிக்காத நிலையில் தற்போது தரைப்படையை களத்தில் இறக்க சவுதி அரேபியா ஆயத்தமாகி வருகிறது. இந்நிலையில் ஏமனின் அல் முக்காலா நகரில் உள்ள மிக முக்கியமான விமான நிலையத்தை அல்கொய்தா தீவிரவாதிகள் கைப்பற்றி உள்ளனர்.

இதற்கு முன்னதாக சிறையை தகர்த்து முக்கிய தீவிரவாத தலைவர் உட்பட 300க்கும் மேற்பட்ட நபர்களை தப்பிக்க செய்தனர். அதுமட்டுமின்றி எண்ணெய் நிலையம் மற்றும் துறைமுகம் ஒன்றையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வினையடி நீ எனக்கு...

11

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–



ஒரு செடியை பிடுங்கினேன்
கைகளில் இரத்தம்
நாயின் வாலாய்
நினைவுகள்
மீண்டும்
மீண்டும்
வளைந்து கொண்டே
உன்னை நினைத்த படி
இந்த நினைவுகள்

நிவேதாவும் தன்னுடன் ஒரு கறுத்த பைலை எடுத்து வந்திருந்தாள். அத்துடன் அவளிடம் பிறவுன் நிறத்தில் அழகிய தோள் பை ஒன்று இருந்தது. பார் வீதியில் இருந்து புகையிரத நிலைய வீதிக்கு திரும்பி வின்சென்ட் மருத்துவ மனையைக் கடந்து தொலைத்தொடர்பு நிலையத்தையும் கடந்து திருமலை வீதிக்கு வந்து சேர்ந்தனர். வீதியில் வரும் போது அவர்கள் அதிகம் கதைத்துக் கொள்ளவில்லை. எங்கே வீதியில் தாம் இருவரும் கதைத்துப் போவதை சீனியர்கள் யாராவது கண்டு விட்டால் பிரச்சினை வருமே என்ற பயம் ரதனுக்கு இருந்தது,.

ராக்கிங் சமயத்தில் ஜுனியர் மாணவர்களை ஜோடி சேர்ப்பதில் அலாதி பிரியம். ரதனையும் கூட ஒரு பெண்ணுடன் ஜோடி சேர்த்து விட்டிருந்தனர். ஆனால் அவள் சயின்ஸ் பெக்கல்டி என்ற படியால் அவனுக்கு அதிகம் தொல்லை இருக்கவில்லை. ஒரே பெக்கல்டியில் ஜோடி சேர்க்கப்பட்டவர்கள் படும்பாட்டை அவன் கண்ணால் கண்டிருக்கி றான்.

இருவரையும் சேர்த்து வைத்து பாட்டு பாடுவதும், அவர்களுக்கு திருமணம் நடப்பதைப் போல் ஏனைய மாணவர்களைக் கொண்டு மேளம் கொட்டச் சொல்லி.... ஒரு கல்யாண நிகழ்வையே அவர்கள் அரங்கேற்றி விடுவார்கள். அவன் பல முறை பல சந்தர்பங்களில் தப்பியிருக்கிறான்.

தனது விரிவுரைகள் முடிந்ததும் உடனடியாக டவுனுக்கு பஸ் எடுத்து வந்து விடுவதால் பல முறை பல தொல்லைகளில் இருந்து தப்பியிருக்கிறான். அப்பிடியிருந்தும் சில தடவைகள் சரியான முறையில் ராக்கிங் வாங்கிய அனுபவமும் உண்டு.

ஒரு முறை "கொமன்ரூமில்" வைத்து தான் உட்பட பல மாணவர்கள் அகப்பட்டதும் "பிசிக்கல் டிரெய்னிங்" என்று பல சிரமமான உடற்பயிற்சிகளை செய்வித்து அவர்களை வாட்டி எடுத்தனர்.

'கம்பஸ் 'கள்' குடிப்பமா? "எனக்கேட்டு ஒரு சீனியர் அவனது வலது கை ஆட்காட்டி விரலை நெற்றியில் வைக்கச் சொல்லி குனிய வைத்து அப்படியே சுத்தினான். நான்கைந்து முறை சுற்றியவுடனே அவனுக்கு தலையை சுற்றியது. நிமிரவும் பயமாக இருந்தது அப்படியே சுற்றிக் கொண்டிருந்தான்.

பதினைந்து முறைக்கு மேல் சுற்றவும் அப்படியே தலை சுற்றி கீழே விழுந்தான். 'என்ன தம்பி "கள்" குடிச்சு போதை ஏறிட்டா?" என்ற படி சிரித்துக் கொண்டிருந்தான் அந்த சீனியர். இன்னுமொரு முறை இப்படித்தான் அது வேறொரு சீனியர் இவனைப் பிடித்து விட்டான்.

'நீ அதிகம் லைப்ரரி பக்கம் தான் திரிகிறாய் உன்னை அடிக்கடி அங்கு கண்டிருக்கேன்... ஒரே பேப்பர் வாசித்து கொண்டிருப்பாய் என்ன....?' அவன் கேட்கவும் ரதனுக்கு பயமாக இருந்தது தான் ராக்கிங்கில் இருந்து தப்பிக்க வாசிக சாலைக்கு அடிக்கடி போவதை இவன் கண்டு விட்டான் என்று நினைக்க ஒரு மாதிரி இருந்தது.

"சரி சரி இங்க வந்து பேப்பர் வாசி என்ன" என்றபடி ரதனை இரு கைகளையும் விரிக்கச் சொல்லி பேப்பர் பிடிப்பது போல் பாவனை செய்ய வைத்து முகத்துக்கு முன்னே பிடிக்க வைத்தான். இப்போ நான் சொல்லும் வரைக்கும் இந்த கதிரையில் இருந்து வாசி என ரதனை பின்பக்கம் கதிரையில் உட்கார வைப்பது போல் அமர்த்தினான். பின்னால் கதிரை இல்லை. ஆனால் ரதன் கதிரையில் அமர்வது போல் இருக்க வேண்டும். சில நிமிடங்களுக்குள்ளேயே ரதனுக்கு கால்கள் வலிக்கத் தொடங்கி விட்டன. கையும் தூக்கி வைத்திருந்தது வேதனையைக் கொடுத்தது. அந்த சீனியர் அவனைப் பார்த்து சிரிதப்படி பத்திரிகை வாசிக்க தொடங்கி விட்டான். நேரம் சென்று கொண்டிருந்தது. நல்ல வேளையாக அந்த பக்கம் ஒரு விரிவுரையாளர் வர அந்த சீனியர் எழுந்து அவனுக்கருகில் வந்து "டே எழும்பிப் போடா" என சொல்லியபடி தானும் வேறு பக்கம் சென்று விட்டான். இப்படி பல முறை ரதனும் ராக்கிங்கில் மாட்டியிருந்தான்" ரதன் பஸ் எத்தன மணிக்கு வரும்....?

ரதனின் சிந்தனையை கலைத்தாள் நிவேதா...

"நிவேதா கம்பஸ் பஸ் 7.10 க்கு வரும். இப்ப மணி 7.00 நாம் கம்பஸ் பஸ்ஸில் போகாது அதோ வருகிற வேனில் ஏறி போவம்.... ஏனென்றால் பஸ்ல சீனியர்கள் வருவாங்க பஸ்சில் வைத்தும் ராக்கிங் பண்ணுவாங்க... ராக்கிங் முடியும் வரைக்கும் நாம் வேனில் போவம்.... ரதன் கூறி முடிக்கவும் அந்த சிறிய வேன் அவர்கள் நின்ற இடத்துக்கு வரவும் சரியாக இருந்தது. "நிவேதா ஏறுங்க" என்ற படி தானும் ஏறிக்கொண்டான் ரதன்

வாழைச்சேனை என்ற பெயர் பலகையுடன் வந்த அந்த சிறிய வேன் கொத்துக் குளத்து மாரியம்மன் கோயிலைத் தாண்டி சென்று கொண்டிருந்தது. சிறிய வேனாக இருந்த படியால் அதற்குள் நிமிர்ந்து கூட நிற்க முடியவில்லை. ரதனும் அவனைப் போலவே அதற்குள் ஏற்கனவே நின்றிருந்த ஒரு சில ஆண்களும் தமது விதியை நொந்தவர்களாகவோ என்னவோ தலையை குனிந்தபடி தமது உடலை வளைத்து ஏதோ சாமாளித்துக் கொண்டிருந்தனர். அதற்குள் இருந்த பெண்களுக்கு பிரச்சினை இருக்கவில்லை, அவர்கள் வேனில் இருந்த இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். ஓரிருவர் மட்டும் நின்றபடி வந்தனர். அவர்களும் குறுகிய தூர இடங்களில் இறங்கவேண்டியவர்கள்.



ரதனுக்கும், நிவேதாவுக்கும் இடம் கிடைக்கவில்லை. ரதனுக்கு நிற்பதற்கு கூட கஷ்டமாக இருந்தது. ஆனால் சீனியர்சின் ராக்கிங் தொல்லையை விட இது எவ்வளவோ பரவாயில்லை போல் தோன்றியது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

நிவேதாவுக்கு அது புது அனுபவம். இப்படியாக நெருக்கு வாரபட்டு அவள் ஒரு முறையும் பயணம் செய்ததில்லை. அந்த பயணம் அவளுக்கு நரக வேதனையாக இருந்தாலும் அதிலும் ஒரு சுகம் இருந்தது. வேனுக்குள் இருந்த இட நெருக்கடியில் ஒருவர் மேல் ஒருவர் முட்டி மோதியே பயணம் செய்து கொண்டிருந்தனர். நிவேதாவும் இதனுடன் முட்டுப்பட்ட படியே இருந்தாள்

ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையில் தொடுதல் சுகம் என்பது அலாதியானது. ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணில் அதுவும் தான் நேசிக்கும் பெண்ணின் ஸ்பரிசத்தில் கிறங்கிப் போகிறான். அவள் மூச்சுக் காற்று கூட அவன் உடம்பில் பல புதிய இரசாயன மாற்றங்களை நிகழ்த்தி விடுகின்றது.

அதே போன்றுதான் பெண்மையும் தான் நேசிக்கும் அந்த ஆண் மகனின் சிறிய தொடுதல் கூட அவளுக்குள் புதிய புதிய அர்த்தங்களை விரிக்கிறது. அந்த அனுபவ உணர்வுதான் நிவேதாவுக்கும் ஏற்பட்டது. ரதனுக் கும் ஏற்பட்டது. இது இரண்டாவது அனுபவம்.

அன்று கல்லோயா ரயில்வே நிலைய பிளாட்பாரத்தில் வைத்து 'கல்' இடறி விழப் போனவளை ரதன் தாங்கிப்பிடித்த போது அவனது கரங்களில் ஒரு சிறு குழந்தையை போல் விழுந்த உணர்வுக்கு பின்னர் இப்போது மீண்டும் ஒரு முறை. ரதனின் உடலுடன் முட்டி மோதும் அனுபவம் அவளுக்கு. அவனுக்கும் மனசில் ஏதேதோ நினைவுகள் வந்து போயின.

நிவேதா பாவித்திருந்த "கொலோனின்" மென்மையான மணம் ரதனின் மனசை என்னவோ செய்தது. ஒரு பெண்ணுக்கு மிக அருகில் அதுவும் அவளை உரசியபடி நின்ற அனுபவம் அவனுக்கு புதுசு. அவன் மனசுக்குள் கவிதை ஓடியது.

**'உடல்கள் உரசும் போது**
**மனசு தீப்பற்றி எரியும்**
**இது –**
**அணைக்க முடியாத தீ.**
**அணைக்க அணைக்க**
**கொழுந்து விட்டெரியும் தீ...**
**இது –**
**எரிக்கும் தீ அல்ல**
**மனசுக்குள் எரியும் தீ'**

வேன் பிள்ளையாரடி சோதனைச்சாவடியில் நின்றது. "செக்கிங் இறங்கிப் போங்க... இறங்கிப்போங்க..." வேனில் வந்த கண்டக்டர் பொடியன் கத்திக் கொண்டிருந்தான். வேனில் வந்தவர்கள் ஒவ்வொருவராக இறங்கி அந்த பொலிஸ் சோதனைச் சாவடிக்கு சென்று தமது அடையாள அட்டையை காட்டிவிட்டு அப்பால் சென்றனர். அந்த சோதனைச் சாவடி வீதிக்கு பக்கத்தே தென்னங்குற்றிகள் நடப்பட்டு மேலே தகரம் அடிக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு முனையில் நின்று ஒரு போலீஸ்காரன் அடையாள அட்டைகளை பரிசோதித்துக் கொண்டிருக்க இன்னொருவன் வேனுக்குள் ஏறி சோதனை செய்து கொண்டிருந்தான்.

பயணப் பொதிகள் கொண்டு வந்தவர்களின் பொதிகளும் சோதனையிடப்பட்டது. ரதன் தனது சோதனை முடிந்து முன்னே சென்றான். ஏற்கனவே தமது சோதனை முடிந்தவர்கள் பிள்ளையார் கோயி லின் அருகே சென்று வேனுக்காக காத்திருந்தனர். நிவேதாவும் அங்கு நின்றிருந்தாள். அவளருகில் வந்த ரதன் அந்த பிள்ளையார் கோயில் உண்டியலுக்குள் சில சில்லறைகளைப் போட்டான்.

"ரதன் ஞாபகமிருக்கிறதா? நீங்கள் ஒருமுறை ஏதோ ஒரு சஞ்சிகையில் கவிதை எழுதி யிருந்தீர்கள்

**கைகளில் கற்பூரத்தோடு**
**அந்த பிள்ளையார் கோயிலின்**
**முன்னே நான் –**
**எரிந்து கொண்டிருக்கிறது கற்பூரம்**
**சில்லென்ற சலங்கையின்**
**சில்லிடும் சத்தத்துடன்**
**நீ –**
**என்னைக்**
**கடந்து போகிறாய்.**
**காற்றில் கரைந்து போகும்**
**கற்பூரத்தைப் போலவே**
**நான் உன்னில்**
**கரைந்து போகிறேன்**

எனக்கு இந்த பிள்ளையார் கோயிலைப் பார்த்ததும் அந்த கவிதைதான் ஞாபகத்திற்கு வருகிறது".

நிவேதா சொல்லவும் ரதன் சிரித்துக் கொண்டான்.

தான் என்றோ எழுதிய கவிதை வரிகளைக் கூட அவள் எவ்வளவு ஞாபகமாக வைத்திருக்கிறாள் என்ற வியப்பு அவனுள் எழுந்தது.

"தாங்ஸ் நிவேதா நானே மறந்து போன கவிதை வரிகள் ... உங்கள் ஞாபக சக்தி அபாரம்தான்..."

"ரதன் நான்தான் முதல்ல சொரி சொல்ல வேண்டும், நேற்று உங்களிடம் வாசிக்க எடுத்த கவிதைப் புத்தகத்தை உங்களிடம் சொல்லாமலேயே வீட்டுக்கு கொண்டு போய்ட்டன்..."

அதற்கென்ன நிவேதா... என் பிரிய ராஜகுமாரிக்கு கவிதைப் புத்தகம் தானே... அது உரியவர்களிடமே போயிருக்கு..." ரதன் சொல்லவும் நிவேதாவின் மனசு சில்லிட்டது. "அப்படியென்றால்... உனது பிரிய ராஜகுமாரி நான் தானா...? என் பிரிய ராஜ குமாரனே ..சொல் உன் ராஜ குமாரி கேட்கிறேன்...."

காதலை இவ்வளவு மென்மையாகவும் அதே வேளை இவ்வளவு மறைமுகமாகவும் வெளிப்படுத்த முடியும் என்று அவள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

அந்தக் கவிஞன் தனது காதலை கவிதைப் புத்தகம் மூலமே வெளி ப்படுத்திய விதமும் அது வெளிப்படுத்தப் பட்ட இடமும் முக்கிய மாகப்பட்டது.




பிள்ளையாரடி சோதனைசாவடியில் அதுவும் பிள்ளையார் கோயில் வாசலில் வைத்து ஒரு காதல் காவியத் திற்கான முன்னுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்தது.

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள் வாசிப்பு...

– மாயன் –

எனது மண்ணிற
மேசையின் மீது
நான்காய் மடிந்து
மின்விசைக் காற்றில்
படபடத்துக் கிடக்கிறது
உன் கடிதம்.

என் மனம் போல்
படபடத்துக் கிடக்கிறது.

வாசித்த பின் கிழித்தெறிய வேண்டியது அது..

எனினும் மீண்டும் ஒரு முறை
படிக்கும் பேரவாவால்

நீள்வதும் மீண்டும் மடிவதுமாய்க் கை...

முதலாவது வாசிப்பின் பின்
நாவில் எதுவுமின்றியே தித்திக்கும் உணர்வுகளும்
இறக்கைகளின்றியே பறக்கும் எண்ணங்களும்
இன்னும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதாய்
நினைவும்.. .

வாசித்தபின் கிழித்தெறிய வேண்டிய அது.

நீள்வதும் மீண்டும் மடிவதுமாய்க் கை. . .

அப்படி எதைத்தான் எழுதிவிட்டாய் நீ ?

என் மீதுள்ள காதலை
வெறும் வார்த்தைகளுக்குள்
அடைக்க முனைந்த உனது
முயற்சியைத் தவிர
வேறு எதுவுமில்லை அது.. ..

எனினும் மீண்டும் வாசிக்கும் பேரவாவால்

என் மேசையின் முன்னே கிடக்கிறது
அக்கடிதம்.

பெண்ணே... முதல் முறை வாசித்த
உணர்வுகள் அழிந்த பின்னே
மறுமுறை வாசிக்கும் பெருவிருப்புக் கொண்டே

முன் கிடக்கிறது கடிதம்.

என் மானுட வாழ்வின் கடைசி
நிமிடத்தின் போதும்
முதல் முறை வாசித்த உணர்வுகளை மீட்டும்
மனம். . . எண்ணம் . . எல்லாமுமே

மீண்டும். .மீண்டும் முதல் முறை வாசித்த
உணர்வுகளையே மீட்டும்

மீள் வாசிப்பென்பது
உன் கடிதத்திற்கும்
என் காதலுக்கும்
எப்போதுமேயில்லை.

என் முன்னே கிடக்கிறது
நான்காய் மடித்த
உன் கடிதம்.. .. .. ..

இரண்டாவது வாசிப்பிற்காய்



## உண்டடா!

தாமரைத் தீவான்
மூச்சந்தீவு, கிண்ணியா.

தற்போதுதான் படிக்கிறேன்,
தாய் மொழியாம் தமிழினை!
முற்போது யான் படித்தவை
முழுவதுமே கலப்படா!

அதிகம் படித்தல் கடினமே,
அகமே கூடிப்போனதால்!
எதையும் மனதில் இருத்திட
இயலவில்லை- மறதியே!

கலப்பைக் கற்று முடித்ததும்
கற்றோம் தமிழை என்கிறார்!
இலக்கு முற்றும் கலங்கினால்
எழுத்தில் முழுமைத்தெளிவிர

கனிச்சுவை கற் கண்டு பால்
கலப்பினிலே இல்லையே!
தனித்தமிழில் உண்டடா,
தற்போதுதான் படிக்கிறேன்!



## – கல்லறைக் காவியம் –

பொன்நிலா
திருகோணமலை
நூல் : பொன்நிலா

கல்லறையில் துயிலும்
கருவறை தந்த மயூரனே. . .

கருவானம் சிவந்தது அன்று
கதிரவனைக் காணவில்லை
கண்ணீர் வழிந்தது என் கண்களில்
உறங்கிய உன் விழிகளை கண்டு
கதிரோனும் வர மறுத்தான்
கண்களால் அக் காட்சிதனை
காண முடியாதென்று . . .
புதை குழியில் விதையாய் வீழ்ந்து
கல்லறையில் மயூரலிங்கேஸ்வரனாயன
கமல லக்ஷ்மி அம்மாவின் திருமகனிற்கு
அனுப்புகின்றேன் என் கவிதையை
கண்ணீர்த் துளிகளுடன் . . .

# கவி முரசு

## "பதவி வரும்போது"

பதவி வகிக்க உயர்
தகுதி படைத்திருக்க வேண்டும்
பதவி வகிக்கும் போது அவசியம்
பணிவும் பரிவும் வேண்டும்

உதவி புரிய வேண்டும்
பதவியால் பொல்லாத
ஊழலை ஒழிக்க வேண்டும்

நால்வகை மதத்தர்க்கும்
நடுநிலை காட்டவேண்டும்
இனமத வேறுபாட்டை
இல்லாமல் செய்ய வேண்டும்

வேலை வழங்குவதில்
தகுதிநிலை பார்க்க வேண்டும்
வீடு காணியற்றோருக்கு
வாழ வழிசெய்ய வேண்டும்

கலைஞர்களை கௌரவிக்க
முனைய வேண்டும் மாகாணமையம்
ஊடகத்துறையினர்க்கும்
உதவவேண்டும் அதிகாரம்!

கவிக்குயிலன்
சேனையூரான்

# கம்பளைக்கால முருகன்
## கோயில் எம்பக்க



கண்டி நகர் நோக்கி நெடுஞ்சாலையில் பிரயாணம் செய்பவர்கள் பிலிமத்தலாவை நகரை அடைந்ததும் "எம்பெக்க" தேவாலயம் என்ற பெயர்ப் பலகையை கண்டு கொள்வர். அவ்விடத்திலிருந்து செல்லும்போது 1370 ஆம் ஆண்டைச் சேர்ந்த இலங்கை வரலாற்றில் கம்பளைக் காலம் என்று அழைக்கப்ப டுவதும் 3ஆம் விக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத் தப்பட்டதுமான "எம்பெக்க" தேவாலயம் காணப்படுகின்றது.

**வரலாற்று ஐதிகம் (புனைவு)**

இந்த தேவாலயம் உருவானது தொடர்பான கொஞ்சம் புனைவுகளுடன் கூடிய கதை ஒன்று உள்ளது. முன்பு ஒரு காலத்தில் எம்பெக்க கிராமத்துக்கு அருகாமையில் பெர வாத்தியக்காரன் ஒருவன் கடுமையான குஷ்ட ரோகத்தால் அவதியுற்றபோது தன்னை இந்த நோயின் அவலத்திலிருந்து மீட்டெடுக்கும்படி அவன் கதிரமலைக் கந்தனிடம் தவஞ்செய்து நேர்த்திக்கடன் வைத்தான். அதனைத் தொடர்ந்து அவனுக்கு அந்த நோயில் இருந்து சுகம் கிடைத்தது. அதனால் மகிழ்ச்சியடைந்த அவன் வருடந்தோறும் கதிர்காமத்துக்குச் சென்று பூஜை வழிபாடுகள் செய்து கந்தப் பெருமானை வழிபட்டு வந்தான். எனினும் வயதாக வயதாக தன்னால் கதிர்காமத்துக்குச் சென்று கந்தப் பெருமானை வழிபட முடியுமா? என்ற கவலை அவனை வாட்டியது. ஒரு நாள் இத்தகைய கவலையுடன் அவன் கந்தப் பெருமானை வணங்கி விட்டு கோயிலுக்கருகாமையில் இருந்த கதிர மரத்தடியில் உறங்கிப் போய் விட்டான். அன்றிரவில் அவன் கனவில் வந்த முருகன் கவலையை விட்டு ஊருக்குப் போகும் படியும் ஊரில் நல்ல தகவல் கிடைக்குமென்றும் அருளிச் சென்றார்.

கந்தப் பெருமானில் நம்பிக்கை கொண்டிருந்த அவன் நிம்மதியுடன் ஊர் திரும்பினான். ஊர் திரும்பியவனுக்கு ஒரு விசித்திரமான செய்தி கிடைத்தது. "எம்பக்க" என்ற கிராமத்து தச்சன் ஒருவன் கதிர மரம் ஒன்றை தரிசித்தபோது ஐந்தாறு அடி உயரத்துக்கு அதில் இருந்து இரத்தம் சீறிப் பாய்ந்ததாம். உடனே அவ்விடத்துக்குச் சென்ற வாத்தியக்காரன் கதிர்காமக் கந்தன் தனக்கு காட்சியளித்து சொன்ன செய்தியைக் கூற தச்சன் அறுசுவையுடன் உணவு படைத்தான். வாத்தியக்காரன் பெர வாத்தியம் இசைத்து வழிபடத் தொடங்கினான். இன்றும் கூட இங்கு மூன்று வேளை பூசை வழிபாடுகள் உணவுப் படையலுடனும் பெர வாத்திய இசையுடனுமே நடைபெறுகின்றது. கோயிலின் பிரதான மண்டபம் விசாலமாகவும் பெர வாத்தியம் இசைக்கவும் ஆடிப்பாடவும் ஏற்ற விதத்தில் வசதியாக அமைக்கப் பட்டுள்ளது.

**வரலாறு**

கி.பி. 1370 ஆம் ஆண்டு கம்பளை இராச்சியத்தை 3 ஆம் விக்கிரமபாகு மன்னன் ஆட்சி செய்தபோது மேற்படி எம்பெக்க என்ற இடத்தில் கதிர்காமக் கந்தனுக்கு வழிபாடு இடம்பெற்று வருவதைக் கண்ணுற்று அங்கு ஒரு தேவாலயத்தை அமைக்க நன்கொடையும் உதவி உபகாரங்களும் செய்துள்ளான். பின்னர் இத்தேவாலயத்தைக் கண்டு களிக்க மன்னன் தனது பல்லக்கில் ஏறி அவ்விடத்துக்கு விஜயம் மேற்கொண்டான். எனினும் அவன் திரும்பிச் செல்ல முற்பட்டபோது பல்லக்கு ஒரு பக்கம் ஒடிந்து சாய்ந்து கொண்டதால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. இதனை வெறுமனே சாதாரண நிகழ்வாகக் கருதாத மன்னன் யானைத் தந்தங்களுடனும் வெள்ளிப் பூச்சுக்க ளுடனும் கூடிய அந்த விலையுயர்ந்த பல்லக்கினை மேற்படி தேவாலயத்துக்கே அன்பளிப்புச் செய்தான் என்று சொல்கிறது இக்கோயிலின் இன்னுமொரு வரலாறு.

இப்பல்லக்கு இன்றுவரையும் பூஜைப் பொருளாக இருந்து வந்துள்ளதுடன் இன்று இக்கோயிலின் அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது

தொடரும்.....

செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 07

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

மாயன்

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

இரண்டாவது நாள் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னராக ஆணைக்குழுவினர் அரச அலுவலர் ஒருவரின் ஊடாக வெளியே குழுமியிருந்த எமக்குச் செய்தியொன்றை அனுப்பியிருந்தனர்.

அவர் காவி வந்த செய்தி அனைத்து மக்களையும் உள்ளே வந்து ஆணைக்குழுவின் முன் தமது முறைப்பாடுகளைப் பதிந்தாலே தம்மால் குறித்த காயாமற் போனோர் தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பதே அச் செய்தி.

அச் செய்தியைத் தாங்கி வந்த தமிழ் அரச அலுவலரிடம் மடை திறந்த வெள்ளமாகப் பிரவகிக்கும் கண்ணீருடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சொந்தங்கள் தமது ஆண்டாண்டு காலமாகத் தொடரும் தமது காத்திருப்புக்களையும் தம்மை அனைவரும் கண்டும் காணாது அலைக்கழிப்பதையும் தெரிவித்ததுடன் தமது சொந்தங்களைக் கடத்திச் சென்றவர்களைத் தாம் பெயர் உட்படப் பதிவு செய்துள்ள வேளையிலும் தற்போது வரை அக் கடத்தியவர்களிடம் விசாரணைகளைச் செய்யாமல் எம்மிடம் மீண்டும் மீண்டும் பதிவு செய்யச் சொல்லிக் கோருவது எதற்காக என்றொரு கேள்வியையும் தொடுத்தனர். வந்த அலுவலர் அமைதியாகத் திருப்பிச் சென்றுவிட்டார்.

குச்சவெளி ஆர்ப்பாட்டத்தின முதலாவது நாளில் எம்முடன் இணைந்திருந்த முஸ்லிம் மற்றும் சிங்களப் பெற்றோர் இரண்டாவது நாளில் வருகை தந்திருக்கவில்லை. ஆனால் புதிதாக சில முஸ்லிம் பெற்றோர் எம்முடன் இணைந்திருந்தனர்.

எமது புறக்கணிப்பு தொடர்ந்து சென்றுகொண்டிருந்த வேளையில் காலை சுமார் 10.30 மணிக்கு ஆணைக்குழுவின் இரு அலுவலர்கள் வெளியே வருகை தந்தார்கள். அதனை நாம் எதிர்பார்க்கவேயில்லை.

குச்சவெளி பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக கூடியிருந்த மக்களுடன் நானும் வண.அடிகள் பிரபாகரும் சம்பாசனைகளை நிகழ்த்திக்கொண்டிருக்க வண.அடிகளார் கோகேஸ்வரன் மற்றும் காணாமல் ஆக்கப்ட்டோரின் சங்கத் தலைவி ஆஷா ஆகியோர் கிரவல்பாதையின் முன் குழுமியிருநத மக்களுடன் பேசிக்கொண்டிருந்த போதே அந்த அலுவலர்கள் இருவரும் வருகை தந்து வண.யோகேஸ்வரன் அடிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடத் தொடங்கினர். அக்கலந்துரையாடலானது சிறிது நேரத்தின் பின்னர் அவ்விரு அலுவலர்களாலும் மற்றொரு திசை நோக்கி நகர்த்தப்படுவதை உணர்ந்து கொண்ட வண. பிரபாகர் அடிகள் என்னை வண. யோகேஸ்வரன் அடிகளாருக்கு அருகில் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

அவர்களுடைய சம்பாசனையில் நானும் புகுந்துகொண்டேன். அப்போதுதான் விளங்கியது வண.யோகேஸ்வரன் அடிகளார் அவ்வலுவலர்களுக்கு இம் மக்கள் ஏன் ஆணைக்குழுவைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்துள்ளார்கள் என தெளிவாக விளங்கப்படுத்திக் கொண்டிருந்த போதும் அதனைச் செவிமடுத்து நியாயத்தைப் புரிந்துகொள்ள அவர்களுடைய மனம் இடங்கொடுக்கின்ற போதும் புத்தி அரசாங்கக் கட்டளைக்கு ஏற்ப நடக்க முற்படுவதால் முரண்பாடான கருத்துக்களை முன்மொழிய முனைகின்றார்கள் என்பதனை.

ஒரு கட்டத்தில் சம்பாசனைக்குள் எனக்கொரு இடத்தைப் பெற்றுக்கொண்டு ஆரம்பத்தில் அமைதியாகவும் பின்னர் சற்றுக் காட்டமாகவும் நான் அவ்வலுவர்களுடன் தர்க்கப்பட்டுக் கொண்டேன்.

ஒரு கட்டத்தில் எம்முடன் பேசுவதால் பயின்லலை எனப்புரிந்துகொண்ட அவ்வலுவலர்கள் எம்மிடமிருந்து அகன்று உள்ளே சென்று விட்டார்கள்.

அன்றைய ஆர்ப்பாட்டத்திற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தும் முகமாக மதியமளிவில் வடக்கின் மாகாண சபை உறுப்பினர்களுள் ஒருவரும் தனது கணவனைப் போரின் பின்னர் இராணுவத்திடம் கையளித்து இன்று வரை அவரைத் தேடிவருபவருமான அனந்தி சசிதரன் வடக்கில் இருந்து வருகை தந்திருந்தார். அதேவேளை தமிழச் சிவில் சமூக சமாயத்தின் உறுப்பினரொருவரும் வடக்கில் இருந்து வந்து எம்முடன் இணைந்திருந்தார்.

அன்று மதிய உணவு தொடர்பாக எவ்வித கடினத்தையும்



நாம் எதிர்கொள்ளவில்லை. முதல்நாள் பட்ட அனுபவத்தை அடுத்து சில முனனேற்பாடுகளை கலந்து கொண்டிருந்தவர்களுடன் இணைந்து நாம் மேற்கொண்டிருந்தோம்.

மதியம் வெய்யில் எழும்பப் பசியும் கனத்தது. மரவள்ளகிகிழங்கு அவியலும் சம்பல் துவையலுமாக அன்றைய மதியம் நிறைவானது.

மாலை 3 மணியளவில் அடுத்த நாளுக்கான பகிஷ்கரிப்புத் திட்டமிடலுடன் நாம் அனைவரும் கலைந்து செல்ல முடிவெடுத்தோம்.

எனினும் நானும் வண. அடிகள் யோகேஸ்வரன் அவர்களும் மறுநாள் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ள பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகத்தின் முன்றலையும் சுற்றுச்சூழலையும் மறுநாள் தயார்ப்படுத்தலுக்காக நோட்டமிடச் சென்றோம். அங்கு எமது மற்றை அணியினரான வண.பிரபாகர் மற்றும் வண. சுஜிதர் ஆகியோரும் அதே பணியை முன்னெடுத்துக் கொண்டிருந்தனர்.

மூன்றாவது நாளான அன்று திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலகத்தின் முன்பாக காலை 7மணிக்கு நாம் வருகை தந்தோம்......

நகரும்....

## போராளியில் இருந்து இலக்கியவாதியாக....

அண்மையில் மறைந்த ஈழவிடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான கி.பி அரவிந்தன் அவர்களின் 2006ல் வெளியான நேர்காணல்

வைத்துக்கொண்டு தமிழ்பேசும் மக்களுக்குட் தீர்வைப்பெற்றுத் தர முயற்சித்தாலும் தோல்விதான் ஏற்பட்டது.

1965இல் தமிழரசுக் கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கிறார்கள். அதில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர் அமைச்சராகிறார். ஆனால் பாராளுமன்றத்தில் அடையாள அட்டை மசோதா போன்று மிக மோசமான சட்டங்களைக் கொண்டு வருகிறபோது தமிழரசுக் கட்சிக்குள் இருந்த தீவிரமான கருத்துக் கொண்டவர்களுக்கு இடையில் பெரிய முரண்பாடு தோன்றியது. தேசிய ரீதியிலான தீவிர நிலை எட்டும் அதே வேளையில்தான், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முனைப்பாக முன்னெடுக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி.

1968 ஆம் ஆண்டு முக்கியமான காலகட்டம். மாணவர்கள் உலகில் எழுச்சிகளும், போராட்டங்களும் நிகழ்ந்தன. 65-70 காலகட்டத்தில் பார்த்தீர்கள் என்றால் வியட்நாம் போர், சேகுவாராவின் கொலை என உலகம் முழுவதும் வெவ்வேறான நிலைமை. 1970ல் இலங்கையில் புதிய ஆட்சி. ஸ்ரீலங்கா சுதந்திரா கட்சியும் எல்எஸ்பியும் கம்யூனிஸ்ட் கட்சி எனச் சிறு சிறு கட்சிகள் சேர்ந்து ஆட்சிக்கு வருகிறார்கள்.

உடனடியாக அவர்கள் வந்து கல்வி பற்றியதான ஒரு கொள்கையை வெளியிடுகிறார்கள். அது தமிழ் மாணவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வி'யம். தரப்படுத்துதல் என்ற முறையில் சொல்லப்பட்டது. இதை எதிர்த்து மாணவர்கள் அணிதிரண்டு வீதிக்கு வருகிறார்கள். அது கல்வி அடிப்பையில் கொண்டு வரப்படவில்லை. இன ரீதியான ஒடுக்குமுறை என்று சொல்லி போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இன்றைக்கு முக்கியமாக இருக்கிறவர்களின் அரசியல் பயிற்சிக்கான தொடக்கநிலையாக அதைச் சொல்லலாம். "நானும் மாணவர்களின் அந்தப் பேரணியில் கலந்து கொண்டேன்" என்று பலரும் சொல்லுமளவிற்கு அது ஒரு தொடக்கப்புள்ளியாக இருந்தது.

மணா:

உங்கள் குடும்ப அளவில் ஏதும் பாதிப்பு நிகழ்ந்ததா?

கி.பி. அ-ன்:

என் தந்தைக்கு பெரியார் கருத்துகளின் மீது ஈடுபாடு உண்டு. வீட்டில் நிறையப் புத்தகங்கள் வைத்திருந்தார். என்னுடைய சிறுவயதில் அவர் திராவிட கருத்துக் கொண்டவராக இருந்தார். ஆசைத்தம்பி, மு.கருணாநிதி, மதியழகன், சி.பி.சிற்றரசு, இப்படி பலரின் புத்தகங்கள் அவரிடம் இருந்தன. ஒரு பெட்டிக்குள் வைத்திருந்தார். பதினைந்தாவது வயதில் புத்தக வாசிப்புத் தொடங்கும்போது பெரியார் மீது எனக்கு விருப்பம் வந்தது. அன்றைக்கு பெரியாரின் சிந்தனைகளை சரியாகப் புரிந்துகொண்டிருப்பேனா என்று தெரியவில்லை. ஆனாலும் வீட்டிற்குள் ஒரு கலகக்காரன் மாதிரி மாறினேன். கிறிஸ்துமஸசிக்கு எல்லோரும் புது உடுப்புப் போடுவார்கள். நான் போடமாட்டேன். இப்படி அந்த வயதுக்கேற்ற சின்னச்சின்ன கலகங்கள்.

அப்பா நூலகத்திற்குச் சென்று புத்தகங்கள் எடுத்து வந்து வாசிப்பார். கல்கி, அகிலன் என அந்தக் காலத்து எழுத்தாளர்கள்ன் நாவல்களை வாசிப்பது பழக்கம். வீட்டில் எப்போதும் பேப்பர் வாங்குவார்கள். நெடுந்தீவில் என்னுடைய அம்மாவின் பெரிய அண்ணர் வீட்டில் தங்கிக்கொண்டு படித்தேன். அந்த ஊருக்கு வள்ளம்(படகு) வந்தால்தான் பேப்பர் வரும். அதை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அந்த பேப்பரை வாசித்தபிறகுதான் மற்ற வேலைகளைப் கவனிப்பார்கள்.

நான் மதத்தால் ஒரு கத்தோலிக்கன். கத்தோலிக்க மத வெளியீடுகள் நிறைய வந்தன. எப்படியோ பத்திரிகைகளை வாசிக்கும் பழக்கம் தொடர்ந்தது. அதேவேளையில் யாழ் மத்தியக் கல்லூரியில் இரண்டு பேராசிரியர்கள் முக்கியமானவர்கள். எனக்கு வரலாறு படிப்பித்தவர் தமிழ்நாட்டில் உள்ள பச்சையப்பன், கிறித்தவக் கல்லூரிகளில் படித்தவர். திராவிட இயக்கக் கொள்கைக்காரராக இருந்தார். அண்ணாவின் திராவிட நாடெல்லாம் படித்தவர். அவர் பிரெஞ்சுப் புரட்சி பற்றியெல்லாம் சொல்லித் தரும்போது வெகு ஆர்வத்துடன் சொல்வார். எங்களுக்கு நெப்போலியன் பற்றி நிறைய கற்பனைகள் வரும்.

யூசுப் மாஸ்டர் என்று ஒருவர். அவர் ஜனநாயகம், வாக்களிப்பது எல்லாம் பொய் என்பார். என்ன ஜனநாயகம் என்பார். நாங்கள் படிக்கும்போது இலங்கை கல்வி அமைச்சகம் "சியவச" என்ற பரிசுத் திட்டத்தை அறிவிக்கிறது. இதை எல்லா மாணவர்களும் வாங்க வேண்டும் என்கிறார்கள். அது சிங்களத்தில் இருந்தது. தமிழர்கள் வாங்கக்கூடாது என்று புறக்கணித்தோம். கல்லூரித் தேர்வுகளை ஒரு மண்டபத்தில் எழுதிக்கொண்டிருக்கும்போது ஒரு ஆள் வந்து ஒவ்வொரு டேபிளிலும் டிக்கெட் வைத்துவிட்டுப்போனார். "பரீட்சை எழுத மாட்டோம் டிக்கெட் வாங்க மாட்டோம்" என்று மறுத்தோம். இப்படி எங்களை முடுக்கி விட்டது அந்த வாத்தியார்தான்.

நான் மாணவர் நிலையில் தமிழரசுக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்தேன். அவர்கள் புரட்சிகரமாக எதாவது செய்வார்கள் என்று நம்பினேன். பகத்சிங் பற்றியெல்லாம் படித்திருக்கிறேன். ர.சு.நல்லபெருமாளின் "கல்லுக்குள் ஈரம்", போராட்டம் நாவல்களைப் படித்த அனுபவம். இதெல்லாம் சேர்ந்து எண்ணங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தன.



எனக்கு இப்பவும் ஞாபகம் இருக்கிறது. அப்போது நாங்கள் அயர்லாந்துப் போராளி தான்பிரீன் பற்றிய புத்தகத்தை ரகசியமாக வைத்திருந்து வாசிப்போம். ஒவ்வொருவராக ரகசியமாகப் பரிமாறிக்கொள்வோம். "எரிமலைத் தியாகிகள்" என்ற புத்தகத்தை அப்படித்தான் படித்தோம். எல்லாம் தனிச்சுற்றுகளாகச் சுற்றி வரும். கீழ் இயக்கம் ஒனறைத துவக்குவதற்கான மனோநிலை அப்போதே தொடங்கியது. இப்படி ஒரு சூழல் உருவாகத் தொடங்கியது.

1972-இல் இலங்கை அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்குகிறார்கள். இதுவரை பிரிட்டி'ரால் வரையப்பட்ட அரசியலமைப்பை இவர்கள் தங்களுக்கானதாகச் செய்யவேண்டும் என்று புதிய அரசு அறிவிக்கிறது. இந்தப் புதிய அரசியலமைப்பு எப்படி இருக்கப்போகிறது, அதில் இங்கே வாழும் தமிழ் பேசும் மக்களுக்கான நிலைமை என்ன, இவர்களுக்கான அதிகாரங்களை எப்படிப் பங்கிடப் போகிறார்கள்? என்பது போன்ற விவாதங்களை எல்லாக் கட்சியினரும் பேசத் தொடங்குகிறார்கள். இதை எதிர்கொள்வதற்காக ஒரே தலைமையாக ஐக்கிய முன்னணியாக இணைய வேண்டும் என்று கருத்தெல்லாம் தமிழ் பேசும் மக்களிடம் இருந்தது.

1972-ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்படுவதற்கு முன்பு தமிழர் கட்சிகளெல்லாம் சேர்ந்து ஒரு கோரிக்கையை வைக்கிறார்கள். அது நிராகரிக்கப்படுகிறது. 1972, மே 22ஆம் தேதி இலங்கை குடியரசாக பிரகடனம் செய்யப்படுகிறது. இலங்கை சிலோன் என்ற பெயரில்லாமல் ஸ்ரீலங்கா என்ற புதிய பெயர் அறிவிக்கப்படுகிறது.

அந்த நாளை தமிழர்களின் கரி நாள் (கறுப்பு நாள்) என்று தமிழர்களின் ஐக்கிய முன்னணி அறிவிக்கிறது. மக்கள் வேலைக்குச் செல்லக்கூடாது. கறுப்புக் கொடி ஏற்றி துக்க நாளாக கொண்டாட வேண்டும் என்று 15ஆம் தேதியிலிருந்தே அதற்கான ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன. "மாணவர்களே பள்ளிக்குச் செல்லாதீர்கள்! ஊழியர்களே அலுவலகங்களுக்குச் செல்லாதீர்கள்!" என்று ஒரு துண்டுப்பிரசுரத்தை ஐக்கிய முன்னணி வெளியிட்டது. நாங்கள் மாணவர்களாக இருந்தபோது அந்தப் பிரசுரத்தை விநியோகித்தோம். அப்போது போலீஸ் என்னையும் சேர்த்து மூன்று பேரைக் கைது செய்கிறது. அதற்குப் பிறகு தலைவர்கள் "எங்களையும் கைது செய்யுங்கள்" என்றார்கள். அதெல்லாம் ஒரு துவக்கம்.

நினைவுகள் தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

## MOBILE

## இலகு மின்கல கவசம்



ஸ்மார்ட் கைப்பேசிகளில் விரைவாக சார்ஜ் இறங்குவதுடன், இவற்றில் பயன்படுத்தப்படும் சேமிப்பு சாதனங்களில் சேமிப்பு வசதியும் அதிகளவில் தேவைப்படும். இதனை நிவர்த்தி செய்வதற்காக நவீன கைப்பேசி கவசம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. Mophie Space Pack எனப்படும் இக்கவசம் 3,300mAh, 2,600mAh வகையான மின்கலங்களைக் கொண்டதாகவும், 32GB, 64GB மற்றும் 128GB சேமிப்பு வசதிகளைக் கொண்டதாகவும் கிடைக்கப்பெறுகின்றது.

## Galaxy J5

சம்சுங் நிறுவனத்தின்' புதிய Samsung Galaxy J5 கைப்பேசியானது, 5 அங்குல அளவு, 1280 x 720 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளது. இது 1.2GHz வேகத்தில் செயல்படக்கூடிய Qualcomm Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 1.5GB RAM, 8GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் கொண்டுள்ளது.

## 3.8மில் தொலைவு மாத்திரமே



சூரியனுக்கு மிகவும் அண்மையில் செலுத்தப்படவிருக்கும் "சோலர் புரொப் பிளஸ்" எனும் விண்கல ஏவுகை திட்டத்தின் கீழ் சூரிய காற்று மற்றும் சூரியனின் மேற்பரப்பிலிருந்து வெளிப்படும் துணிக்கைகள் என்பன தொடர்பில் 4 பரிசோதனை செயற் கிரமங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. இதன்போது விண்கலம் சூரியனை நெருங்கிச் செல்கையில் சுமார் 2,500 பாகை பரனைட் அளவான வெப்பநிலையை எதிர்கொள்ள நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. இது சூரிய மேற்பரப்பிலிருந்து 3.8 மில்லியன் தொலைவில் நடைபெறவுள்ளதாக தெரிய வருகின்றது.

## OTHER

## ஒரே நிமிடத்தில் மின்னூட்டலாம்



ஒரே நிமிடத்தில் முழுமையாக சார்ஜ் செய்துகொள்ளும் மொபைல் போன்களுக்கான பேட்டரியை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். லித்தியம் பேட்டரிகள் அவ்வப்போது வெடித்து தீவிபத்துகள் ஏற்படுகின்றன. அலுமினியம் தீப்பிடிப்பதில்லை, அலுமினியத்தின் விலை மிகவும் குறைவு என்பதால், இந்த பேட்டரிகள் மலிவானவை. மேலும், மின்சாரத்தைத் தேக்கி வைத்துக்கொள்ளும் தன்மையும் அலுமினியத்துக்கு அதிகம். அத்துடன் இந்த பேட்டரி இதுவரை இல்லாத வேகத்தில் மின்னூட்டத்தினை பெறுகிறது.

## கூட்டாக வேலை செய்யும் ரோபோ

மனிதனின் உள்ளங் கை அளவில் இருக்கும் எறும்பு மாதிரியான ரோபோ, தொழிற்சாலை பயன்பாட்டுக்காக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட ரோபோக்களில் மிகச் சிறந்தது. அதன் கால்கள் மிகவும் நுட்பமாகவும் நேர்த்தியாகவும் பணிகளை செய்து முடிக்கும் வகையில் 6 தனித்தனி பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன. எனவே, பணியின் தேவைக்கு ஏற்ப ரோபோவால் தன்னை மாற்றிக்கொள்ள முடியும். இந்த ரோபோக்கள் கூட்டாக ஒரு பணியில் ஈடுபடும்போது தங்களுக்குள் ஒருங்கிணைப்புடனும், ஒத்துழைப்புடனும் நடந்து கொள்ளும் சிறப்புத் திறனுடையவை.



## கை எழுத்திலும் அனுப்பலாம்




கை விரல்களால் எழுதி, அதனை மெசேஜாக அனுப்பும் கையெழுத்து உள்ளீடு அப்ளிக்கேஷனை கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ் மொழி உள்ளீடு மூலமாகவும் இனி மெசேஜ் அனுப்பலாம் என்பதே இதன் சிறப்பம்சம். உலக அளவில் மொத்தம் 82 மொழிகளில் மெசேஜ்களை கைப்பட எழுதி அனுப்பக் கூடிய வகையில் இந்த புதிய அப்ளிகேஷன் ஆண்ட்ரோய்ட் செல்போன்களுக்காக தயாரிக்கப் பட்டுள்ளது. எழுத்துக்களை ஸ்டைலஸ் எனப்படும் எழுத்தாணியுடனும் அல்லது வெறும் விரல்களாலும் எழுத முடியும்.

## அப்பிள் watch இன் தகவல்கள்



அப்பிள் நிறுவனத்தின் புதிய கருவியான அப்பிள் வாட்ச் பற்றிய சில முக்கிய மான தகவல்கள் :

- அப்பிள் வாட்ச் வடிவமைப்பில் ஹாரோலோஜி பாரம்பரியம் கலந்திருப்பதோடு பார்க்க தனித்துவம் வாய்ந்ததாக காட்சியளிக்கின்றது.
- அப்பிள் வாட்சில் உள்ள கஸ்டம் ஃப்ரன்ட் தொழில்நுட்பம் சிறிய டிஸ்ப்ளேவில் வார்த்தைகளை துள்ளியமாகவும் தெளிவாகவும் காண்பிக்கும்.
- புதிய வகை வடிவமைப்பின் மூலம் ஆப்பிள் வாட்ச் சூரிய புகைப்படத்தை கொண்டு அதற்கேற்ப நேரத்தை காண்பிக்கும்.
- அப்பிள் வாட்ச் டிஸ்ப்ளேவில் ஒவ்வொரு முறை உங்களது மணிக்கட்டை தூக்கும் போதும் அழகிய பூ மலர்வது போன்ற வீடியோ படம் தெரியும்.
- அப்பிள் வாட்சில் 2 பொத்தான்கள் மட்டுமே உள்ளன. மற்ற படி அனைத்துமே தொடுதிரையாக அமைந்துள்ளது.
- அப்பிள் வாட்சை ஒரு முறை முழுவதும் சார்ச் செய்தால் போதும், 18 மணிநேரம் பயன்படுத்த முடியும்.
- அப்பிள் வாட்ச் மூன்று வடிவமைப்புகளில் (Apple Watch Sport, the Apple Watch, Apple Watch Edition) கிடைக்கிறது.

## கட்டண அறவீடு YouTube

வீடியோ கோப்புக்களை பகிர்ந்து கொள்ளும் வசதியினை இலவசமாக வழங்கி வரும் முன்னணி இணையத்தளமான YouTube ஆனது கட்டணம் செலுத்தப்பட்ட சேவை ஒன்றினையும் அறிமுகம் செய்யவுள்ளது. இச்சேவையானது இணைய இணைப்பு அற்ற நிலையிலும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் விளம்பரங்கள் அற்ற சேவையாக காணப்படுகின்றது.

## ஆரோக்கியம் பேண கைப்பட்டிகள்



ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் ஸ்மார்ட் கடிகாரங்களைப் போன்று உடல் ஆரோக்கியத்தை கண்காணிக்க ஸ்மார்ட் கைப்பட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளமை அறிந்ததே. இந்நிலையில் தற்போது குறைந்த விலையில் புதிய கைப்பட்டி ஒன்றினை Wowl Tech நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. அகன்ற OLED திரையினைக் கொண்ட இந்தக் கைப்பட்டியில் பேஸ்புக், டுவிட்டர், வாட்ஸ்அப் போன்ற சமூக வலைத்தள அப்பிளிக்கேஷன்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

# குறுக்கெழுத்து புதிர் 056

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | 15 | 2 | | 16 | | | 18 |
| 3 | | ங் | | | | ■ | ■ | |
| 4 | | 5 க | | | ப | | 21 | |
| ல் | ■ | | 6 க | 7 | | 17 | | ர் |
| 8 | | | | ■ | ■ | | 19 இ | |
| | ■ | ■ | 9 | 20 | | | | ■ |
| ■ | 10 | | | | ■ | ர் | | ■ |
| 11 | | | த | | ■ | ■ | 12 | |
| | ■ | ■ | 13 | | மா | | | |

விடையை அனுப்ப வேண்டிய முகவரி :

முடிவுத்திகதி : 23.04.2015

மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

## இடமிருந்து வலமாக

1. எதிரியை தாக்கப் பயன்படுத்தப்படும் ஆயுதம்
2. சிவப்பு நிறத்தில் தோல் போர்த்திய பழம்
3. கந்தளாய்க் இதனாலும் தான் கட்டப்பட்டது.
4. இறந்தவர்களுக்காக செய்யப்படுவது
5. அரிசிக்குள் கல்லை கலப்பது
6. முடிவு (பாபா படத்தில் பாவிக்கப்பட்ட பிரதான சொல்)
7. மருந்து (குழம்பியுள்ளது)
8. உணவகங்களில் இச்சான்றிதழ் இருக்க வேண்டும் என்கின்றனர் இஸ்லாமியர் -குழம்பியுள்ளது
9. சிப்பிக்குள் முத்துப்போல் சத்துமிக்க பழம்
10. டம்ளருக்கான தமிழ்ச்சொல்
11. குழந்தைகளுக்கே உரித்தான ஓர் வாதம்
12. இக்குழிகளுக்குள்ளேயே இறந்தவர்களின் உடலங்கள் புதைக்கப்பட்டன
13. கம்பர் எழுதிய காவியம்

## மேலிருந்து கீழாக

1. யுத்தத்தின் பின்னர் அனைத்தையும் இழந்து முகாம்களில் வாழும் இவர்
4. பரதநாட்டியத்தில் ஆடப்படுவது
6. இரும்பு வேலை செய்யும் இடம்
8. தெரிந்தே செய்வது
14. [illegible] பெயரின் சுருக்கம்
15. [illegible] இவ்வாறும் அழைக்கலாம்
16. பூ
17. சுட்ட பழம் கேட்டவர்
18. அரசசார்பற்ற நிறுனத்தை .......... தொண்டு நிறுவனம் என அழைக்கலாம் (ஓரெழுத்து இடம்மாறியுள்ளது
19. பாடசாலைகளில் மாணவர் பதிவினை பதியும் புத்தகம்
20. இராசிகளுல் ஒன்று
21. திருகோணமலை ஓர் ........... (மூன்றெழுத்து சொல்) - திரும்பியுள்ளது

## புதிர் 055 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ண் | டீ | 20 ப | ம் | 2 க | ப | ட | ம் |
| 3 த் | தை | பே | வி | 4 உ | டு | ம் | பு | ■ |
| த | ■ | 5 மு | த | லை | 24 பு | ■ | ■ | 18 கு |
| 6 வ | 21 ள் | ளி | 7 தொ | டை | ப் | ப | ம் | 19 கை |
| ரா | ளி | 8 பி | ர | 17 தி | வா | 23 தி | 16 வ | லை |
| 22 ய | 9 ப | டி | ■ | வி | ர் | ங் | த | நா |
| 10 ன் | கூ | யா | ■ | நெ | 11 டி | க | ம் | த |
| ன | ■ | ணை | 12 ச | கு | ணி | ள் | ன | ர் |
| ல் | 13 னி | தா | ரு. | 14 ம | ண் | 15 ல் | யி | உ |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

திருமதி. காளிராசா.எம்
லோவர் வீதி, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்
## “நண்பேண்டா”
### இயக்குனர் ஜெகதீஷின் உதயநிதி ஸ்டாலின், நயன் நடிக்கும்



துரத்தி துரத்தி காதலிக்கும் ஹீரோ, உதயநிதி. அந்த காதலுக்கு பல சமயம் தொந்தரவாகவும் சில சமயம் உதவியாகவும் இருக்கும் ஹீரோவின் நண்பன், சந்தானம். இவர்களின் ரகளையில் அந்த காதல் பாதியில் பிரிய கடைசியில் அந்த காதல் கை கூடியதா என்பது தான் கிளைமாக்ஸ்.

இதில் ஒரு புதுமையாக படத்தில் அனைத்து இடங்களிலும் காமெடி தான் மைய பகுதி. தஞ்சாவூரில் வெட்டியாக சுற்றி தெரியும் உதய். அவரின் அப்பாவின் தொந்தரவால் தன் நண்பனை தேடி திருச்சி செல்கிறார்.

திருச்சி இறங்கியவுடன் நயன்தாராவை பார்க்கிறார், உடனே காதல் பற்றி கொள்கிறது. பிறகு காதல் மயக்கத்தால் உதயநிதி கொடுக்கும் இம்சைகளைத் தாங்கிக் கொண்டு சந்தானமும் அவரது காதலுக்கு ஒரு கட்டத்தில் உதவுகிறார். இடைவேளையின் போது நயன்தாரவுக்கும், உதயநிதி மேல் காதல் வர, அவரிடம் காதலை சொல்லும்முன் தன் கடந்த கால வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை உதயநிதியிடம் சொல்கிறார். அதை கேட்டு உதயநிதி கேலியாக சிரிக்க நயன்தாராவுக்கு கோபம் தலைக்கு மேல் வருகிறது, பிறகு என்ன அந்த காதல் அங்கயே முறிகிறது.

மறுபடியும் அந்த காதலை ஒன்று சேர்க்க உதயநிதி - சந்தானம் போடும் திட்டம், அந்த திட்டத்தினால் அவர்கள் ஜெயிலுக்கு போக கடைசியில் அந்த காதல் வெற்றிபெற்றதா?, இவர்கள் ஜெயிலில் இருந்து விடுதலை ஆனார்களா? என்பது தான் நண்பேண்டா.நடிகர், நடிகைகளின் பங்களிப்பு உதயநிதி நடிப்பை விட வசன உச்சரிப்பில் கொஞ்சம் தேர்ச்சி பெற்று இருக்கிறார்.

நயன்தாரா படத்தின் மிகப்பெரிய ஆறுதல் நயன்தாரா, என்ன அழகு, அவருடைய இயல்பான, எளிமையான தோற்றம், பாடல்களில் அவரின் உடையலங்காரமும், அழகான நடனமும் ரசிகர்களை கவரந்துள்ளது. இப்படம் கத்தி மற்றும் உதயநிதி நடித்த ஒகே ஒகே, இது கதிர்வேலன் காதல் படத்தின் அப்பட்டமான சாயல்.

ஆக எந்தவொரு புதுமையான விடயத்தையும் எதிர்பார்க்காமல் இந்த படத்தை நயனுக்காக பார்க்கலாம்.



## அம்மாவுக்கே 5 கோடியா!?

புலி படத்தில் ஹன்சிகாவின் அம்மாவாக நடிக்கிறார் ஸ்ரீதேவி. இதற்காக அவருக்கு கோடியில் சம்பளம் தரப்படுகிறதாம். இதையடுத்து தெலுங்கு படத்தில் ஹீரோ பிரபாஸின் அம்மா வேடத்தில் நடிக்க ஸ்ரீதேவிக்கு வாய்ப்பு வந்திருக்கிறதாம். கால்ஷீட் கேட்டால் 5 விரலை விரித்துக்காட்டி இவ்வளவு சி தரமுடியுமா என்கிறாராம். அம்மா வேஷத்துக்கு இவ்வளவு சம்பளமா? என்றால் இப்போதும் எனக்கு ரசிகர்கள் குறையவில்லை என சொல்கிறாராம் நடிகை.

**சரவணனின் இயக்கத்தில் வெளியான “வலியவன்” திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## மீண்டும் ஜோதிகா

ஜோதிகா 8 வருடங்கள் கழித்து சினிமாவுக்கு மீண்டும் கொடுத்திருக்கும் படம் 36 வயதினிலே. இப்படத்தின் படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்து சமீபத்தில் ஆடியோ வெளியீட்டு விழாவும் நடந்தது. 2டி என்டர்டெயின்மென்ட் படம் மூலம் சூர்யா இப்படத்தை தயாரிக்க, ரோஜன் ஆன்ட்ரூவ்ஸ் படத்தை இயக்கியுள்ளார். இப்படம் வருகிற மே 15ம் தேதி வெளியாக இருக்கிறது.

## மே 11ல் “மாஸ்”



நடிகர் சூர்யா நடிப்பில் வெற்றி பட இயக்குனர் வெங்கட்பிரபு இயக்கி வரும் படம் மாஸ். இப்படத்தின் அனைத்து படப் பிடிப்புகளும் முடிவடைந்துள்ள நிலையில் படம் மே 11ம் தேதி வெளியாகும் என வெங்கட் பிரபு அதிகாரப்பூர்வமாக தெரிவித்து ள்ளார்.

## சர்ச்சைக்குள் தீபிகா

திருநங்கைகளின் வாழ்வை சித்தரிக்கும் வகையில் தீபிகா படுகோனின் “மை சாய்ஸ்” வீடியோ கறுப்பு வெள்ளை யிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்த சமுகத்தால் எவ்வாறு பாதிக்கப் படுகின்றனர், அவர்கள் படும் அவஸ்தை என்பது பற்றி கூறியுள்ளனர். “ஆணாகவோ, பெண்ணாகவோ, மூன்றாம் பாலினமாகவோ வாழ்வது என்னுடைய தேர்வு, என்னுடைய பாலினத்தையோ, பெயரையோ மாற்றிக் கொள்வதும், ஆணாகவோ பெண்ணாகவோ தோற்றமளி ப்பதும் என்னுடைய தேர்வு” என்று மிக உணர்வுப்பூர்வமாக வீடியோவில் காட்டப்பட்டுள்ளது.

## வேணவே வேணாம்

ஆர்யா தற்போது ஏ.எல்.விஜய் இயக்கும் புதிய படத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறார். இப்படத்தில் நயன்தாராவை நாயகியாக நடிக்க வைக்க கேட்டதற்கு, வேறு யாரை வேணும் என்றாலும் கதாநாயகியாக நடிக்க வைங்க, ஆனால் நயன்மட்டும் வேணாம் என கூறியுள்ளாராம் ஆர்யா.

## எமி வாழ்க



சமீபத்தில் விரும்பத்தக் பட்டியலை ஓர் வெளியிட்டுள்ளது. இ நடிகைகளான நயன் ஸ்ருதிஹாசன் என பின்னுக்கு தள்ளி எமிஜ பிடித்தார். இவரின் நடிப்பி படம் கலவையான விமர்சனங்களை சந்தித்தாலும், விக்ரமைப் போலவே இவரது நடிப்பும், கவர்ச்சியும் அனைவரையும் கவர்ந்தது. இந்த பட்டியலில் ஸ்ருதிஹாசன் 2வது இடத்தையும் சமந்தா 3வது இடத்தையும் பெற்றுள்ளனர்.



## தங்கை கிடைத்துவிட்டார்

அண்ணன், தங்கை பாசத்தை மையமாக கொண்டு உருவாக இருக்கும் படத்தில் அஜித்துக்கு தங்கையாக நடிக்க நாயகி வேட்டை நடந்து வந்தது. அந்த பட்டியலில் நித்யா மேனன். ஸ்ரீதிவ்யா ஆகியோர் இடம்பெற்றனர். ஆனால் இருவரும் நடிக்க மறுத்துள்ள நிலையில், அஜித்துக்கு தங்கையாக இப்படத்தில் லட்சுமி மேனன் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.


## சியான் விக்ரம் - பீனிக்ஸ் பறவை

சினிமா பின்னணியில் இருந்து விக்ரம் வந்தாலும் தன்னை ஒரு நடிகனாக நிலை நிறுத்த அவர் மிகவும் சிரமப்பட்டார். ஆரம்ப காலத்தில் இன்று தமிழகமே தலையில் தூக்கி வைத்து கொண்டாடும் அஜித்திற்கு முதல் படத்தில் டப்பிங் கொடுத்தது விக்ரம் தான். இவரின் நிழல் பாலாவின் பார்வையில் விழ, சேதுவாக விக்ரம் மறுபிறவி எடுத்தார். இப்படத்தில் இவரின் நடிப்பாற்றலை கண்ட கோலிவுட்டே, இப்படி ஒரு நடிகனையா நாம் துரத்தினோம் என்று தலை குனிந்தது. இதை தொடர்ந்து இவர் நடித்த அனைத்து படங்களும் சூப்பர் ஹிட் ஆக, புகழின் உச்சிக்கு சென்றார். எத்தனை தோல்வி வந்து கீழே விழுந்தாலும், பீனிக்ஸ் பறவை போல் மீண்டு எழுந்து வானத்தை நோக்கி பறந்து கொண்டிருக்கும் சியான் விக்ரம் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கு சொல்வதில் சினி உலகம் மற்றும் ரசிகர்கள் மகிழ்ச்சியடைகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் 49 எழுத்தாற்றலை வளர்ப்போமா?



(வி, என், சந்திரகாந்தி)

'வாசிப்பும் கணனிப்பயன்பாடும்' (வாழ்வியல் 45) என்ற தலைப்பிலான கட்டுரையில் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி அழுத்திக் கூறப்பட்டது. இக்கட்டுரை அதன் பயனான 'எழுத்தாற்றல்' பற்றி ஆராய்கின்றது.

'எழுத்தாற்றலை வளர்ப்போம்' எனும் கட்டுரை எப்படி அமைய வேண்டும் என்று சிந்திப்ப தற்கு எடுத்த சில நொடிகளில் 'ஜே.கே என பலராலும் அன்பாக பேசப்பட்ட மாபெரும் எழுத்தாளர் ஜெயகாந்தன் இறந்துவிட்டார் என்ற அதிர்ச்சி செய்தி என்னை எட்டியது. ஞானபீட விருதுபெற்ற ஜெயகாந்தன் ஒரு பிறவி எழுத்தாளர். அவரது எழுத்துக்கள் தமிழகத்திலும், தமிழ் ஈழத்திலும் பல முன்னணி படைப்பாளி களை உருவாக்கியது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இன்னும் கூறப்போனால் அவரது சிறுகதை களாலும் நாவல்களாலும் ஈர்க்கப்பட்ட பலர் இலக்கிய ஆர்வலர்களாக வளர்ச்சியடைந்து ள்ளார்கள். ஜெயகாந்தனின் வாசிப்பின் மீதான ஆர்வம், கொள்கைப்பற்று, சிந்தனாசக்தி இவையே அவரின் படைப்புக்க ளின் வெற்றிக்கான பின்புலம் என்று கூற வேண்டும்.

எழுத்தாற்றல் என்பது பிறவியில் பலருக்கு கைகூடுவதாக இருந்துள்ளது. அதே சமயம் பயிற்சியின் மூலம் சிறந்த படைப்பாளி களாக உருவாகியோரும் அநேகரும் உள்ளனர்.

செல்வம் ஒருவரை பிரபல்யப்படுத்துவதைக் காட்டிலும் படைப்பாற்றல் எவரையும் மேன்மைப்படுத்திவிடும். வாசிப்பு பழக்கம் மட்டும் இருந்துவிட்டால் போதும் 'நாமும் எழுத வேண்டும்' என்ற ஆசை தானாகவே துளிர்விட்டு விருட்சமாகிவிடும்.

அடுத்த கட்டமாக தினமும் சில மணிநேரம் ஏதாவது ஒரு தலைப்பில் எழுத துணிய வேண்டும். இலக்கணம், வசனநடை, பந்தி பிரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். எமது தலைப்புக்கு பொருத்தமான விடயங்கள் எமது மனதில் பொதிந்திருக்கும். அவைபற்றி அலசி ஆராய வேண்டும். எமது தலைப்புக்கு பொருந்தி வரும் வகையில் விடயங்களை வரிசைப் படுத்த வேண்டும். தவிர கட்டுரை சார்பான விடயங்கள் விடுபடக் கூடாது. அது கட்டுரையை பலவீனப்படுத்திவிடும். கட்டுரை பூர்த்தியாகிவிட்டது என்று நீங்கள் கருதினால் இப்போ ஆறுதலாக அதனை படித்துப் பாருங்கள். மாற்றம் செய்யலாம் என்று நீங்கள் கருதும் இடங்களை நிச்சயமாக திருத்துங்கள். அது உங்கள் மனதுக்கு நிறைவாக இருக்கும்!

இனி, உங்கள் கட்டுரையை உங்கள் மீது அதிகம் நம்பிக்கையும் பாசமும் வைத்திருக்கும் நண்பரிடம் காட்டுங்கள். அவர் நிச்சயமாக உங்கள் எழுத்துக்களில் உள்ள சிறப்புக்களை சுட்டிக்காட்டுவார். ஏதாவது சிறு தவறு நேர்ந்திருந்தால் உங்கள் மனம் புண்படாதபடி எடுத்துரைப்பார். அவற்றை திருத்தும் வாய்ப்பு உங்கள் கட்டுரையின் கனதியை மேலும் அதிகரிக்க செய்யும்.

உங்கள் நண்பர் ஏற்றுக்கொள்வது மட்டும் ஒரு போதும் அங்கீகாரமாக இருக்க மாட்டாது. உங்கள் படைப்புக்களுக்கு அச்சேறும் அங்கீகாரம் கிடைக்க வேண்டும்.

உங்கள் ஆக்கம் ஒரு கட்டுரையாகவோ, கவிதையாகவோ, சிறுகதையாகவோ கூட இருக்கலாம். நீங்கள் தெரிவு செய்யும் ஒரு பத்திரிகைக்கோ, சிற்றிதழுக்கோ அனுப்பிப் பாருங்கள். அது பிரசுரமானால் உங்களுக்கு வெற்றி என தெரிந்து கொள்ளலாம். ஆனால் அனேக சந்தர்ப்பங்களில் பல எழுத்தாளர் களுக்கு அப்படி அமைந்ததில்லை. பின்னாட்களில் எழுத்துலக ஜாம்பவான்களாக திகழ்ந்த பல படைப்பாளிகளின் ஆரம்ப கால எழுத்துக்கள் மறுக்கப்பட்டதே சரித்திரம்!

இன்னும் கூட தம்மை எழுத்தாளர்கள் என்று மார்தட்டி பேசிக்கொண்டு திரியும் பல படைப்பாளிகளின் ஆக்கங்கள் தேசியப் பத்திரிகைகளில் பிரசுரமாவதில்லை. அதற்கான காரணம் ஒன்றில் அவர்களது ஆக்கங்களுக்கு அச்சு அங்கீகாரம் கிடைப்ப தில்லை அல்லது எழுத்தாளர்களே தம்மைப பற்றி எழுத்தாளர் சமூகத்தில் உள்ள 'இமேஜ்' கெட்டுவிடக்கூடா தென்பதற்காக புதிதாக எதையும் எழுதுவதில்லை.

இனி பத்திரிகைகள் சஞ்சிகைகள் வேறு, இணையத்தளம் வேறு. இணையத்தளத்தில் எமது சுதந்திரத்திற்கு எதையும் எழுதலாம். எவரையாவது வாழ்த்தலாம். சுயபுராணம் பாடலாம். பெரிய பெரிய தத்துவஞானிகளின் சிந்தனைகளை திரும்ப கூறுவதன் மூலம் நாமும் அந்த கொள்கைப்பற்றுள்ளவர்கள் என்று காட்டி பெருமையடிக்கலாம்! எங்கே ஒரு பத்திரிகைக்கோ சஞ்சிகைக்கோ பாரதியார் பாடல்களை அனுப்பி பாருங்கள். அவை பிரசுரமாகும் எந்த வாய்ப்பும் இல்லை! இணையதளத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியான ஆக்கங்கள் வெளியாவது வேறு.

எனவே இந் நாட்களில் உண்மையான அச்சு அங்கீகாரம் என்பது பத்திரிகை களின் கைகளில்தான் உள்ளது. எமது ஒரு படைப்புக்கு எந்த ஒரு பேராசிரியரின் பாராட்டுரையையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் அது முழு அளவினதான அச்சு அங்கீகாரம் என்று கொள்ள முடியாது.

எனவே எழுத்துலகில் நாம் பிரசுரிக்க வேண்டுமாயின் எமது சுய ஆற்றலை விருத்தி செய்வதொன்றே வழி. இது பற்றி இனி ஆராய்வோம்.

நாம் முதலில் எழுதுவதற்கு உகந்த பொருத்தமான நேரத்தை தெரிவு செய்ய வேண்டும். நாம் கோபமாகவோ, அல்லது சினமாகவே இருக்கும் போது எழுத முற்படக்கூடாது. தலையிடி, நாசித்தடிமன் போன்ற சிறு சிறு வருத்தங்கள் கூட எமது மன ஒருமைப்பாட்டை தகர்க்கக் கூடியன. வீட்டில் தொலைக்காட்சியோ, ரேடியோவோ அதிக சத்தத்துடன் இயங்கிக் கொண்டிருந்தால் அது எழுதுவதற்கு உகந்த சூழலாகாது. எமது சிந்தனையை தடை செய்வதுடன் பொருத்தமான சொற்களை பயன்படுத்து வதையும் அது தடை செய்யும்.

மனம் ஜாலியாக இருக்கும் போது எழுத்தில் உற்சாகம் பிறக்கும். மன அழுத்தம் சிந்தனையை தடை செய்யும். எழுதுவதை அதிக நேரம் எடுத்து சிந்தித்தலும், அதிக நேரம் எடுத்து எழுதுவதும் மனஅழுத்தத்தை (Stress) குறைக்கும். பெரிய கடுமையான சொற்களை பாவிக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் எழுதும் விடயம் சார்ந்த பின்னணி பற்றிய தெளிவை முன்னரே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.



எழுத்துக்கு ஆதாரமானவற்றை சுட்டிக் காட்டலாம். அதற்காக மற்றொரு படைப்பை எமது ஆக்கத்திற்குள் உட்செலுத்தலாகாது. நாம் எழுதும் விடயங்கள் எமது சிந்தனையிலிருந்து பிரசவிக்கப்பட வேண்டும்.

நாம் என்ன கூறுகின்றோம் என்பதையே உலகம் நோக்கும். தத்துவ ஞானிகள் கூறுவன பற்றியும், கவிஞர்கள் கூறுவன பற்றியும் அறிவதற்கு ஏற்கனவே பல நூல்கள் இருக்கின்றன. இந்த விடயத்தில் இந் நாட்களில் பத்திரிகைகள் மிகவும் கண்டிப்புடன் இருப்பது பற்றி நாம் தெளிவுடன் இருக்க வேண்டும்.

செய்தித்தாள்களை தொடர்ச்சியாக வாசிப்பதன் மூலம் எமது எழுத்தை வரையறுத்துக் கொள்ள முடியும். எந்த ஆக்கத்திற்கும் யதார்த்தம் பிரதானமானது. யதார்த்தத்திற்கு புறம்பான விடயங்களை எழுத்துலகம் ஏற்றுக் கொள்ள மாட்டாது!

நாம் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் போது எமக்கு சலிப்பு தோன்றுவது போன்ற உணர்வு ஏற்படக்கூடும். அப்போது நாம் முதலில் செய்ய வேண்டிய காரியம் எழுதுவதை உடன் நிறுத்துவது தான். சிந்தனையில் ஏற்படும் முறிவுதான் சலிப்புக்கு காரணமாக அமைகிறது. நன்றாக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். கவனத்தை வேறு திசையில் திருப்ப வேண்டும். ஓய்வுதான் முக்கியம்.

மனம் ஒரு போதும் சும்மா இருக்க மாட்டாது. எடுத்துக்கொண்ட விடயம் பற்றி சுற்றி சுற்றி சிந்திக்கும். ஒரு சமயம் மனதில் திடீரென்று சாதகமான சிந்தனைகள் தோன்றும் போது நம்பிக்கை ஏற்படும். அப்போது மீண்டும் தொடருங்கள். உங்களால் நிச்சயம் சாதிக்க முடியும்.

எனது நண்பர் ஒருவர் எழுத்தைப்பற்றி எதுவுமே அறியாமல் இருந்தார். ஆனால் நிறையவே வாசிப்பார். அவரது மகளுக்கு பாடசாலை சஞ்சிகை ஒன்றுக்கு சிறுகதை ஆக்கம் ஒன்று தேவைப்பட்டது. மகளின் நிர்ப்பந்தம் காரணமாக அவரும் ஏதோ எழுதிக்கொடுத்தார். மகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் நண்பருக்கு கோபம் ஏற்பட்டது. அதனை பத்திரிகைக்கு அனுப்பினார். அச்சிறுகதை உடனே பிரசுரமானது. அதனால் ஏற்பட்ட நம்பிக்கை அவரை எழுத்துலகில் ஆழமாக கால்பதிக்க வைத்தது. இன்று விருதுகள் பல பெற்ற எழுத்தாளர் ஆக பிரகாசிக்கிறார்.

நம்பிக்கை ஒன்று தான் பிரதானம். முயற்சித்தால் நீங்களும் பெரும் எழுத்தாளனாக முடியும்!

# ஈழத்தின் சோகமும் ஈழத்தமிழரின் அலட்சியமும்

சஞ்சயன் செல்வமாணிக்கம்




அண்மையில் ஒரு நாள் இணையத்தில் மட்டக்களப்பில் உள்ள ஒரு நண்பருடன் உரையாடியோது "இங்கே பல முன்னாள் போராளிகள், காயப்பட்டவர்கள் வாழ்வாதாரம் இன்றி இருக்கிறார்கள், உதவிசெய்ய யாரும் இருந்தால் கூறுங்கள்" என்றார் எனது நண்பர். விபரங்களை அனுப்புங்கள் முயற்சிக்கிறேன் என்றேன். மறுநாளே விபரங்கள் மின்னஞ்சலில் வந்திருந்தன.

பல சோகங்களை பட்டியலிட்டிருந்தது அந்த மின்னஞ்சல். மின்னஞ்சலை வாசித்தும் சற்று நேரம் மனது ஸ்தம்பித்துப்போனது. முன்பும் ஒரு முறை உடல் அவயவங்களை விற்று வாழ்வாதாரத்தை தேடும் போராளிகளைப் பற்றி எழுதியிருந்தேன்.

அண்மையில் முல்லைத்தீவிற்கு சென்றிருந்த நண்பருடன் பேசிக்கொண்டிருந்த போது இங்கு பல சக்கரநாட்காலிகள் தேவை என்றார். அவரும் விபரங்களை அனுப்பியிருந்தார். 18,000 ருபா இருப்பின் ஒரு சக்கரநாட்காலி ஒழுங்கு செய்து கொடுக்கமுடியும் என்கிறார் அவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 2010ம் ஆண்டின் புள்ளிவிபரப்படி ஏறத்தாள 50000 குடும்பங்கள் மாதாந்தம்1000க்கு ரூபாய்க்கு உட்பட்ட வருமானத்தில் வாழ்கிறார்கள் என்றிருந்தது. 1000 ரூபாய் என்பது எவ்வளவு? வெளிநாடுகளில் வாழ்பவர்களின் ஒருநாள் கைச்செலவு கூட இதை விட பல மடங்கு அதிகமாக இருக்கும் அல்லவா?

ஒரு பெரும் தளபதியின் மனைவி ஏழ்மையின் காரணமாக, தயவு செய்து எனது குழந்தைகளையாவது தத்தெடுங்கள் என்று வெளிநாட்டு அமைப்பாளர்களை கேட்ட கதையும் இருக்கிறது. அவர்களுக்குக் கூட சிறு உதவி கூட சென்றடையவில்லை என்பதே உண்மை.

பெரும் பொருளாதார வசதி படைத்த பல அமைப்புக்கள் கூட வாய் மூடி இருப்பது பெரும் சோகம். மேற் கூறியவற்றைப் பற்றி சிந்தனையோடிய போது, எனக்கே என்னில் கோபம் வந்தது. அடுத்ததாக தகவல் அறிந்தவர்கள், போராட்டத்தை முன்னெடுத்த அமைப்புக்கள் என்ற அனைவரின் மீதும் தார்மீகமான கோபம் இருக்கிறது, எனக்கு.

வறட்டுக் கொளரவத்துடன், வறட்டு அரசியலுடன், யதார்த்தம் மறந்து, பதவிகளுக்காகவும், பணத்துக்காகவும் முன்னாள் போராளிகளைத் தானும் கவனிக்காதவர்களை என்னென்று சொல்வது?

மூன்றாவதாக எதுவுமே தெரியாதவர்கள் போல ஊரையும், அதன் வேதனைகளையும் மறந்திருப்பவர்களும் விமர்சிக்கப்படவேண்டியவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை காலம் தான் இப்படியே இருக்கப்போகிறோம். வெளிநாடுகளில் வாழும் குடும்பங்களில் 50 வீதமான குடும்பங்கள் இலங்கையில் உள்ள ஒரு குடும்பத்திற்கு மாதாந்த உதவியாக, அல்லது தொழில் அபிவிருத்தி உதவியாக ஒரு சிறு உதவியினைச் செய்தால் ஏறத்தாள 350,000 குடும்பங்களை முன்னேற்ற முடியதா? நான் ஏதோ யதார்த்தம் உணராமல் கதைப்பதாக நீங்கள் நினைக்கலாம். இல்லவே இல்லை. யுத்தகாலத்தில் புலம் பெயர் மக்களிடையே இருந்த கட்டமைப்புக்கள் எல்லாம் இன்று அவர்களின் நம்பகத்தன்மையை இழந்து, வலுவிழந்துகொண்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாகவே இருக்கிறது. இதற்கான காரணங்கள் என்ன? இவற்றைப் பற்றி திறந்த மனதுடன் எவரும் பேசத் தயாராய் இல்லை.

கடந்த காலங்களை படிப்பினையாகக் கொண்டு முன்நோக்கி நகர வேண்டிய அவசியம் எமக்கு இருக்கிறது. இனியாவது யதார்த்தம் எது? அரசியற் பிரச்சாரம் எது? என்பதை நாம் அறிந்து கொண்டு, சுயவிமர்சனத்துடன் நகரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

வாழ்வாதாரமே இல்லாதிருப்பவனிடம் எதைப் பேசினாலும் அவனது சிந்தனை முழுவதும் அன்றைய உணவினைப் தேடிக்கொள்வதில் மட்டுமே இருக்கும் என்பதை நான் கூற வேண்டிய அவசியமில்லை.

எனவே வெளிநாடுகளில் அரசியலை முன்னெடுப்பவர்கள் அதை முன்னெடுக்கட்டும். ஆனால் மிக மிக முக்கியமாக உதவிகளை முன்னெடுப்பவர்கள், ஒருங்கிணைப்பவர்களின் தேவையும், உழைப்புமே இன்று எமது மக்களுக்கு இன்றியமையாதவை.

நாம் ஒற்றுமையாய் இணைந்து செயற்பட வேண்டிய காலம் இது என்பதை நாம் மறத்தலாகாது.

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

நாட்டு நடப்பு

# சித்தப்பா - அத்தான் ஆகிய கொடுமை (காலத்தின் கேடு)

தவறு செய்பவன் தீர யோசிப்பதில்லை. தீர யோசிப்பவன் தவறு செய்வது குறைவு. எங்கள் மத்தியில் உள்ள பல குறைபாடுகள் தான் எம்மை மேலும் மேலும் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றது. வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் பொருளாதார கஷ்டங்களும், பேராசைகளும், வேறு காரணங்களும் இவ்விதமான தவறுகளுக்கு காரணமாக அமைவதையும் நாம் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும்.

அதேவேளையில் அளவுக்கு அதிகமான பணம் வைத்திருப்பவர்கள் தவறு செய்வதில்லையா? என்ற கேள்வியையும் நாம் மறந்து விடமுடியாது. பணம் அதிகளவில் இருந்தால் சில குறைபாடுகளை அதனால் நிவர்த்தி செய்ய முடியாது. அத்துடன் பேராசை கூட எம்மை விட்டு வைக்காது.

இன்று பண வசதி இல்லாதவர்களை விட அதிகளவு பணம் வைத்திருப்பவர்களே கடும் குற்றங்களுக்கு ஆளாகின்றனர். மேலும் அவர்கள் சட்டத்தின் வலையில் அகப்படுவதில் இருந்து தப்பித்துக் கொள்கின்றனர். சிலர் சட்டத்தையே தமது சட்டைப் பைக்குள் வைத்திருப்பது போல் நடந்து கொள்கின்றார்கள். பேராசையே இதற்குக் காரணம். ஆனால் ஓர் ஏழை தனது இயலாமை காரணமாக யாதும் நடவடிக்கையில் இறங்கி விட்டால் சமூகம் தனது முழு விரல்களையும் அவனுக்கு எதிராக நீட்டிக் கொள்கிறது.

அன்றைய போர்ச்சூழல் காரணமாக தனது சொந்த வசிப்பிடமான வன்னியை விட்டு நிரந்தரமாக குடியிருக்க வாழைச்சேனைக்கு சென்றவரே கதிரவேலு. வாழைச்சேனையில் அவருக்கு சொந்தம் என்று ஒருவருமே இல்லை. எப்படியோ நண்பர் ஒருவரின் உதவியுடன் அங்குள்ள பிரதேச சபையில் அவருக்கு அலுவலக சிற்றூழியர் வேலை கிடைத்தது. அதுவும் அமைய அடிப்படையில் கிடைத்ததால் அவரால் பெரியளவு சம்பளத்தை எதிர்பார்க்க முடியவில்லை.

நான்கு பெண் பிள்ளைகளுக்கும் ஒரு ஆண்பிள்ளைக்கும் பொறுப்பு மிகு தந்தையான அவரால் சொந்த சம்பாதியத்தைக் கொண்டு குடும்பத்தின் நாளாந்த வேலைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும் பாடசாலை கல்வியைக் கூட சரியாக தனது பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்க முடியவில்லை என அவர் தனக்குள் நொந்து கொண்டார்.

சாதாரணமாக அந்தக் குடும்பம் ஓரளவு இயங்க வேண்டுமெனில் அவரின் வருமானத்தை விட வேறு ஏதாவது வழியில் வருமானம் தேவை. அதனால் தனது மனைவி மரகதத்தை சவுதிக்கு பணிப்பெண்ணாக அனுப்ப முடிவு செய்தார். அந்த நேரத்தில் சவுதி போன்ற மத்திய தரை நாட்டுக்குச் செல்ல எவ்விதமான இடையூறும் இருக்கவில்லை. ஏஜென்சிக் காரரும் அதிக பணத்தை எதிர்பார்க்கவில்லை. பலரை பணிப்பெண்களாக இஸ்லாமிய நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தனர். அவரது மனைவியும் இரண்டு வருட கால ஒப்பந்தத்தில் பணிப்பெண்ணாக சென்றார்.

தமிழ்ப் பெண்களை அங்கு வேலைக்குச் சேர்த்துக் கொள்வதில்லை என்பதால் ஒரு இஸ்லாமிய பெண்ணின் பெயரில் போலிக் கடவுச் சீட்டு மூலம் மரகதம் சவுதிக்குச் சென்ற பின் தந்தைக்கு குடும்பப் பொறுப்பு அதிகரித்து விட்டது.

பிள்ளைகளும் வளரத் தொடங்கினர். அவர்களுடன் சேர்ந்து வறுமையும் வளர்ந்தது. மேலும் மரகதம் மாதாமாதம் அனுப்பும் பணம் குடும்பச் செலவை சமாளிக்க போதுமானதாக இருக்கவில்லை. மிக்சர், கடலை, மரவள்ளிப் பொறியல் போன்ற உணவுகளை தயாரித்து சிறு அங்காடி வியாபாரத்தை நடாத்தி வந்தார் கதிரவேலு.

அவற்றை அங்குள்ள கடைகளுக்கு கொண்டு சென்று விற்றாலும் உடனே பணம் கொடுக்க மாட்டார்கள் அந்த பணத்தைப் பெற மனுசன் படும் பாடே பெரும் பாடு. இவ்வியாபாரத்திற்கு தேயையான முன்பணமும், அவ் வியாபாரம் குறித்த அறிவுரையையும் வழங்கியவர் கண்டியிலுள்ள கதிரவேலுவின் தம்பி குகன் தான்.

குகன் வாரத்தின் இறுதி நாட்களில் தனது அண்ணனின் வீட்டிற்கு வந்து செல்வது வழமை. ஓரிரு நாட்கள் தங்கி இருந்து விட்டு போய்விடுவார்.

**– பாலையூற்றான் –**

கதிரவேலுவின் பிள்ளைகள் அனைவரும் சித்தப்பாவான குகன் மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்தனர். அவர் அங்கு தங்கி நிற்கும் நாட்களில் வீடு, களை கட்டி இருக்கும்.

குகன் இன்னும் திருமணம் செய்யவில்லை. அதனால் அவன் உழைக்கும் பணம் அவ்வளவற்றையும் செலவு செய்வான் தனது அண்ணனுக்காக. மேலும் மரகதம் வெளிநாட்டில் இருந்ததால் பிள்ளைகளுக்கு தாய்ப்பாசம் கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் தொலைபேசி வசதி இல்லாமையால் மரகதம் மாதம் ஒரு கடிதம் அனுப்புவாள்.



கதிரவேலுவின் குடும்பம் சற்றுத் தவழும் நிலைக்கு வந்தது. மூத்த மகள் சங்கீதா பெரியவளாகி விட்டாள். அவளுக்கென்று எதையும் சேர்த்து வைக்கவில்லையே என்ற கவலை கதிரவேலுவின் மனதை வாட்டியது. பின்னர் விதி எதை எழுதி உள்ளதோ அதன் படி நடக்கட்டும் என இருந்துவிட்டார் கதிரவேலு. திடீரென ஒரு நாள் அந்த வீட்டில் பெரும் ரகளையாக இருந்தது. தந்தை தலையில் கை வைத்து ஓ வென அழுத்தொடங்கினார். சுற்றி வளைத்த ஊரார் தத்தம் மனதுக்குள் பட்டதை மறைமுகமாக ஊகம் தெரிவித்து வதந்தி கதைத்துக் கொண்டிருந்தனர். சிலர் இதற்கெல்லாம் காரணம் பெற்றோரே என்றனர்.

உடன் எழுந்த கதிரவேலு சந்தியிலுள்ள தொலைபேசி நிலையத்திற்கு சென்று தொலைபேசி மூலம் வீட்டில் நடந்ததை தனது தம்பி குகனிற்கு தெரிவித்தார். அண்ணா! நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேணாம். சங்கீதா வீட்டை விட்டு ஓடி என்னிடம் வந்தது தவறு தான். எல்லாம் தவறாக நடந்து விட்டது. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இங்கு கோவிலில் வைத்து அவளுக்குத் தாலி கட்டி விட்டேன் என பதில் வந்தது மறுமுனையிலிருந்து. தன் மகள் கிடைத்து விட்டாள் என சந்தோசப்படுவதா, இப்படியான தொரு தவறான உறவை தேடிக்கொண்டமை குறித்து கவலைப் படுவதா? அல்லது அவர்கள் மீது கோபப்படுதா என குழம்பிப் போய் அழைப்பைத் துண்டித்து குழப்பத்தில் ஆழ்ந்தது அந்த பெற்றவரின் மனம்.

சித்தப்பா முறையானவரைத் திருமணம் செய்ததால் சங்கீதாவுக்கு குகன் கணவரானார். தம்பி மருமகனாக மாறினார். அக்குடும்பத்தின் உறவுமுறை தடம் புரண்டமைக்கு சங்கீதா, குகனின் திருமணமே காரணமாக இருப்பினும், தெளிவான வெளிப்படையான காரணம் சங்கீதா தனது சித்தப்பாவான குகனுடன் ஏற்படுத்திக் கொண்ட தகாத உறவின் மூலம் ஏற்கனவே தாய்மை அடைந்ததே ஆகும்.

இப்படியும் நடக்கலாம்

## தங்கத்தில் மிதந்த திருமணம்

உலக பணக்கார குடும்பங்களில் ஒன்றான புருனேய் நாட்டு மன்னர், தனது 6வது மகனான அப்துல் மாலிக் என்பவருக்கு திருமணம் நிச்சயத்திருந்தார். இதனை தொடர்ந்து Istana Nural Iman அரண்மனையில், தங்கத்தால் இழைக்கப்பட்ட அரண்மனையின் மையத்தில் நாற்காலி வைக்கப்பட்டிருந்தது. தங்க ஆபரணங்களால் வடிவமைக்கப்பட்ட ஆடையை இளவரசரும் வைரம், வைடூரியம், ரத்தின கற்கல், உள்ளிட்ட விலைமதிப்பற்ற ஆபரண ங்களுடனான ஆடை அணிந்த மணமகளான Haji Bolkiah, அணிந்திருந்தனர். மேலும் அரண்மனையில் 1788 அறைகளும் தங்கத்தால் இழைக்கப்பட்டு விருந்தினர்களுக்கு தங்குவதற்காக வசதி செய்யப்பட்டிருந்தது



## ஃபேஸ்புக்கினால் தப்பிய பெண்





பிலிப்பைன்ஸை சேர்ந்த எபே லூனா என்ற பெண், பாரெய்னில் உள்ள வீடு ஒன்றில் பணிப்பெண்ணாக வேலை பார்த்து வந்துள்ளார். இவர் தனது முதலாளியின் மகனால் பல்வேறு சித்ரவதைகளை அனுபவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அவர் பேஸ்புக்கில் வெளியிட்டுள்ள வீடியோவில் பேசியதாவது, போதைக்கு அடிமையான என் முதலாளியின் மகன், என்னை அடித்து துன்புறுத்துவது மட்டுமின்றி பலமுறை கற்பழித்துள்ளார். என்னை மீட்க உதவி செய்யுங்கள் என கண்ணீர் மல்க பேசியுள்ளார். இதனையடுத்து பிலிப்பைன்ஸ் அரசு, அந்நாட்டு தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு லூனாவை மீட்டதுடன் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளது.

## சாதனை

அரிப்பு வியாதியால்



பிரித்தானியாவில் வேதியியல் பேராசிரியராக பணியாற்றி வரும் Zoe Waller(31) என்பவர் மாணவர்களுக்கு பாடம் எடுப்பதற்கு வெள்ளை அல்லது கரும்பலகை என எதையும் பயன்படுத்தாமல், தனது கையில் உள்ள தோலையே கரும்பலகையாக பயன்படுத்தி வருகிறார்.

வெள்ளை பலகையில் என்ன வரைய வேண்டுமோ அதை, பென்சில் அல்லது பிற கூர்மையான குச்சியை எடுத்து கை தோலில் கீறும்போது, அதே வடிவில் தோலில் வீக்கம் ஏற்பட்டு அது ஒரு வரைபடமாக மாறுகிறது. அவருக்கு அரிக்கும் தடிப்புகள் கொண்ட தோல் வியாதி உள்ளது. இந்த வியாதியால் பாதிக்கப்பட்ட, அவரது எந்த உறுப்பில் உள்ள தோல் மீது கீறினாலும் தடிப்புகள் ஏற்பட்டு சிறிது நேரத்திலேயே [illegible] விடும்.

- சீனாவில் சங் பாங் என்ற சிறுவன் வசித்து வருகிறான். இவனது பெற்றோர் வேலைக்கு சென்ற பின் இவன், தனது கைப்பேசியை சார்ஜ் செய்து கொண்டிருந்தபோது அழைப்பு வந்தது. ஆனால் அவன் சார்ஜர் சுட்சை அணைக்காமால் அப்படியே பேசிக் கொண்டிருந்ததால் திடீரென கைப்பேசி வெடித்து சிதறியது. இதனால் அவனது காதிலிருந்து ரத்தம் கொட்டியதுடன், கன்னத்திலிருந்து சதைகள் கிழிந்து தொங்கின. மேலும் தாடை எலும்பும் நொறுங்கியது. இதுகுறித்து தகவல் அறிந்த சிறுவனின் பெற்றோர் அவனை உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தனர். தற்போது சிறுவனுக்கு தீவிர சிகிச்சையை மருத்துவர்கள் அளித்து வருகின்றனர்.

- துருக்கியை சேர்ந்த Bulent Sonmez (40) என்பவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரது இதயத்துடிப்பு நின்றுபோய் விட்டதால், மருத்துவர்கள் அவரை சிகிச்சைக்காக ஐஸ் பெட்டியில் வைத்துள்ளனர், இதனைத் தொடர்ந்து அவரது இதயம் துடிக்க ஆரம்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து அவருக்கு hypothermia treatment வழங்கப் பட்டது. 24 மணி நேரம் மருத்துவர்கள் முயற்சி செய்து அவரை காப்பாற்றியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை உடைக்க முனைகின்றாரா? - பிரதமர் ரணில்

அரசியல் அலசல்

- www.tamilmirror.lk -

– –கே.சஞ்சயன்– –

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல், விரிவடைந்துவரும் போக்கை உணரமுடிகிறது. வடக்கிலிருந்து படையினரை விலக்கி, உயர் பாதுகாப்பு வலயத்துக்காக அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களில் அவற்றின் உண்மையான உரிமையாளர்களை குடியமர்த்தும் விவகாரத்தில் தொடங்கிய இந்த சர்ச்சை, இப்போது ஒருவரையொருவர் விமர்சிக்கும் மற்றும் ஒருவரையொருவர் புறக்கணிக்கும் நிலைக்கு சென்றுள்ளது. இந்த விவகாரம் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் விவகாரங்களில் ஒன்றாக மாறியுள்ளது. ஏனென்றால், இந்த விரிசல் இலங்கைத் தீவில் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் ஒன்றாக பார்க்கப் படுகிறது. ஊடகங்களை பொறுத்தவரையில் இந்த விவகாரத்தை சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ரணில் விக்கிரமசிங்க என்ற இரண்டு தனி நபர்களுக்கு இடையிலான பிரச்சினையாக பார்ப்பதா அல்லது தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு இனங்களின் சிந்தனைகளுக்கு இடையிலான பிரச்சினை யாக பார்ப்பதா அல்லது முதலமைச்சர் விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என இரண்டு அரசியல் தலைமைத்துவங்களுக்கு இடையிலான பிரச்சினையாக பார்ப்பதா என்று குழம்பிப் போயுள்ளன. கடந்த ஜனவரி மாதம் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க கூட்டரசாங்கம், தனது கவர்ச்சியை இழக்கத் தொடங்கியுள்ள தருணத்தில் இந்த விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய யாழ்ப்பாண பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், அதனை தமிழ் மக்கள் கருத்தில் எடுக்கவில்லை என்று யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் குறிப்பிட்டிரு ந்தார். இதற்கு அடிப்படை காரணம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் புறக்கணிக்கப் பட்டதே. இதனை ஜேர்மனித் தூதுவருட னான சந்திப்பின்போது அவரே குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கில் பயணத்தை மேற்கொண்டு சந்திப்புகள், கலந்துரையாடல்களை நடத்துவது முக்கியமான விடயமாகவே இருந்தது. இருந்தாலும், வடமாகாண சபையையும் அதன் முதலமைச்சரையும் புறக்கணித்துவிட்டு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடந்துகொண்டமையானது, அவரது கடந்த காலம் குறித்து தமிழ் மக்களை சந்தேக கண்ணுடன் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. ஒரு பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனேயே பேச்சு வைத்துக்கொள்வேன் என்று அவர் கூறிக்கொண்டு, வடமாகாண முதலமைச்சரை ஒதுக்கிவைத்தார். இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கான ரணில் விக்கிரமசிங்கவின் சதித்திட்டமாக இருக்கலாம் என்ற பரவலான சந்தேகம் தோன்றியுள்ளது.

2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்து வதில் அப்போதைய ரணில் விக்கிரமசிங்க வின் அரசாங்கம் கணிசமான பங்கை வகித்திருந்தது. அப்போது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதியாக இருந்த வி.முரளிதரன், புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றதுடன், அவர்களின் பெரும் படைப்பிரிவுகளையும் சிதைத்திருந்தார். இதன் விளைவு, விடுதலைப் புலிகளை முள்ளிவாய்க்கால் வரை



துரத்திச் சென்றது. அப்போது, விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு அடைக்கலம் கொடுத்து காப்பாற்றியது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே.

பின் நாட்களில் சஜித் பிரேமதாச போன்ற ஐ.தே.க. தலைவர்கள் பலரும், தாமே விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடைத்து அதை பலவீனப்படுத்திய தாகவும் எனவே, போரின் வெற்றியில் தமக்கும் கணிசமான பங்கு இருப்பதாகவும் மேடைகளில் மார்தட்டியிருந்தனர். விநாயகமூர்த்தி முரளிதரன் விடயத்தில், ஐ.தே.க. நடந்துகொண்ட விதம் கூட, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க விடுதலைப் புலிகள் வியூகம் வகுத்தமைக்கு ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது.


முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை ஒரு குள்ளநரி அரசியல்வாதியாக பார்த்த தமிழ் மக்கள், ரணில் விக்கிரமசிங்கவையும் அதே போன்று பார்க்கும் நிலை இன்று ஏற்பட்டு வருகிறது. அதற்கு அடிப்படை காரணம், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் அவர் ஏற்படுத்திக் கொண்டுள்ள முரண்பாடு.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை மறுத்து வந்தவர்களில் முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன முக்கியமான ஒருவர். அவரது வழியில் வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்கள் விடயத்தில் தவறான அணுகு முறையை கடைப்பிடிக்க முனைவதாக வடமாகாண சபையின் அமர்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டி யிருந்தார். அதனை அவர் குறிப்பிட்டதற்கு காரணம், வடக்கிலிருந்து படை முகாம்களை விலக்கிக்கொள்ளப் போவதில்லை என்ற ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோரின் அறிவிப்புகளே. இதனை சுட்டிக்காட்டிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை, தமிழ்நாட்டின் தந்தித் தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்திருந்த பேட்டியில் பொய்யர் என்று கடுமையாக விமர்சித்திருந்தார். அத்துடன், தாம் வடமாகாணசபையுடன் எந்தத் தொடர்பையும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கமாட்டேன் என்றும் பகிரங்கமாகவே சபதமிட்டார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் வடக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களை வைத்துக்கொள்வேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக வடமாகாணத்துக்கான தனது மூன்று நாள் பயணத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு உரிய அழைப்புக் கொடுக்காமல் புறக்கணித்திருந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஒட்டுமொத்த வடமாகாணசபையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்வுகளை புறக்கணிக்க, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சரவணபவன் போன்றவர்கள் ஒரே மேடையில் பிரதமர் ரணிலுடன் அமர்ந்திருந்தனர். ஆனால், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் அந்த நிகழ்வுகளை புறக்கணித்திருந்தார். இது கூட்டமைப்புக்குள் ஒற்றுமை என்பது கேள்விக்குறியாகி வருகிறதோ என்ற சந்தேகத்தை மட்டும் தமிழ் மக்களுக்குள் எழுப்பவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தந்திரம் பலித்துப் போகுமோ என்ற அச்சத்தையும் அவர்களுக்குள் ஏற்படுத்தி யது. தனது வடக்குக்கான பயணத்தில் வடமாகாண முதலமைச்சரை யும் வடமாகாணசபையையும் ஓரம் கட்டுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாக கொண்டிருந்தார் என்பது வெளிப்படையான விடயமாகியுள்ளது. இந்த நிலையில், கட்சியை வளர்க்க வடக்குக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் நிகழ்வுகளில், தான் பங்கேற்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் உயர் பாதுகாப்பு வலய முகாம்களை படிப்படியாக அகற்றி மக்களை மீளக் குடியேற்றுவதாக அறிவித்தால், அவருடன் கைகோர்க்க தயார் என்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்தார். இத்தோடு இந்த விவகாரம் முடிந்துவிட வில்லை, முடியப்போவதும் இல்லை. ஏனென்றால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வை பொறுத்தவரையில் வடக்கில் தனது கட்சியை காலூன்றவைப்பதற்கு முயற்சிக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாகவும் உறுதியாகவும் ஒன்றுபட்டு நிற்கும் வரைக்கும் அது சாத்தியமாகப் போவதில்லை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவை எற்படுத்தினால், அந்த இடைவெளிக்குள் தாம் நுழைந்து கொள்ளலாம் என்று அவர் கணக்கு போடுவதாகத் தெரிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து, அடுத்த தேர்தலில் ஐ.தே.கட்சியை பலமான நிலைக்கு கொண்டு வருவதற்கு அவர் எத்தகைய வியூகத்தை பயன்படுத்து கிறாரோ, அதேபோன்றதொரு வியூகத்தை சற்று வித்தியாசமான வடிவத்தில் த.தே.கூட்டமைப்புக்கு எதிராகவும் பயன்படுத்திக் கொள்கிறார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி லிருந்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வர னை ஓரங்கட்டுவது அவரது முதற்குறியாக தெரிகிறது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உறுதியான, நியாயமான சில செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த த.தே.கூட்டமைப்பின் தலைவர்கள் சிலரும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தனத்துக்கு பலியாக தொடங்கியுள்ளனர் என்ற பேச்சும் உள்ளது.

எவ்வாறாயினும், இந்த விவகாரம் ரணில் விக்கிரமசிங்க, சி.வி.விக்னேஸ்வரன் என்ற இரண்டு தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல. ஆனால், த.தே.கூட்டமைப்புக்குள் இருக்கும் சிலர், அவ்வாறானதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதன் மூலம் தமது செயலை நியாயப்படுத்த முனைவதாக தெரிகிறது. அதேவேளை, இது இனரீதியான பிளவு, வரலாற்று ரீதியாக தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுவந்த அநீதிகளின் தொடர்ச்சி என்றவாறான விமர்சனங்களும் ஊடகங்களில் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு முன்வைக்கப்படும் நியாயங்கள் தட்டிக்கழிக்கப்பட முடியாதவை என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தமிழரின் அரசியல் பலத்தை சிதைப்பது என்பதே எப்போதும் கொழும்பு அரசின் மைய நோக்கமாக இருந்து வந்திருக்கிறது என்பது கசப்பானதொரு உண்மை. கொழும்பு அரசின் மையமாக விளங்கிய தலைவர்கள் எல்லோருமே இதனையே செய்திருக்கிறார்கள். அந்த வகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைக்க முயற்சிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாகப் புறமொதுக்க முடியாது. இந்தக் கட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடுகள், தமிழ் மக்களிடையே மட்டும் கவனிப்பை ஏற்படுத்தவில்லை.

சர்வதேச சமூகமும் கூட இந்த விவகாரத்தை உன்னிப்பாக அவதானிக் கிறது, உற்று நோக்குகிறது என்பதை தெளிவாக உணரமுடிகிறது. இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து உருவாகியுள்ள புதிய அரசாங்கம் ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லாட்சி உள்ளிட்ட விடயங்களில் முன்னைய அரசாங்கத்தை விடவும் சாதகமானதொரு நிலைமைக்கு நாட்டைக் கொண்டுசெல்லும் என்ற நம்பிக்கை சர்வதேச சமூகத்திடம் நிரம்பியிருக்கிறது. அந்த எதிர்பார்ப்பை பல்வேறு நாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிப்படை யாகவே எடுத்துக் கூறியிருக்கின்றன.

இத்தகைய நிலையில், ஆட்சி மாற்றத்துக்கு பின்னர், வடமாகாண முதலமைச்சருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடு, தமிழ் - சிங்கள இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகளை சிதைத்து விடுவோ என்ற கவலையை சர்வதேச சமூகத்திடம் ஏற்படுத்தியுள்ளது.

அண்மைய நாட்களில் வடமாகாணத்து கள நிலைகளை கண்ட றிவதற்காக பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், சர்வதேச பிரமுகர்கள், இந்த முரண்பாடு குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றனர். ஜேர்மனி, அவுஸ்திரேலிய தூதுவர்கள் யாழ். ஆயரிடம் இது பற்றி விசாரித்தறிந் துள்ளனர். இந்த விவகாரத்தில் யார் பக்கம் நியாயம் உள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக வேறு பல மட்டங்களிலும் அவர்கள் கலந்துரையாடல்களை நடத்தியிருக் கின்றனர்.

ஆட்சி மாற்றத்துக்கு பிந்திய சூழலில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. அந்த சூழல் இந்த முரண்பாட்டினால் சிதைக்கப்பட்டுவிடுமோ என்ற கவலை வெளிநாட்டு இராஜதந்திர மட்டங்களில் ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற புதிய அரசாங்கம் தவறி விட்டது என்று வடமாகாண முதலமைச்சர், அவுஸ்திரேலிய தூதுவரிடம் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினது செயற்பாடுகளின் மீதுள்ள அதிருப்தி கூட அவரை இந்தளவுக்கு விரைவாக இத்தகைய கருத்தை வெளிப்படுத்த தோன்றியிருக்கலாம். தற்போதைய அரசாங்கம், வரையறுக்க ப்பட்ட காலமே பதவியில் இருக்கக் கூடியது என்பதும் வரையறுக்கப்பட்ட எல்லைகளை தாண்டாது என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரி, வடமாகாண முதலமைச்சரும் சரி நன்றாகவே அறிந்திருக்கின்றனர். ஆனாலும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் மீது அதிருப்தியை, அவநம்பிக்கையை வெளிப்படுத்தும் அவசரம் அவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது என்றால், அதற்கு அடிப்படைக் காரணம் அவர்களின் மீது ரணில் விக்கிரமசிங்க கைவைக்க முயன்றதே. எனவே, இந்த முறுகல், தமிழர் அரசியலை ஓரங்கட்டி பழகிப்போன தென்னிலங்கையின் அரசியல் பாரம்பரியத்தின் விளைவு என்பதே சரியான கருத்தாக தெரிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கிலுள்ள தமிழர்களிடம் எப்படி அரசியல் நடத்துவது என்பதை அறியாதவராக இருக்கிறார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதையில் பயணிக்க நினைப்பதே அவர் செய்யும் தவறு. இது அவரையும் அதே படுகுழிக்குள் தள்ளிச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. கூட்டல் விருத்தி ஒன்றின் n ஆம் உறுப்பு $T_n = 2n + 4$ இனால் தரப்பட்டுள்ளது. இவ்விருத்தியின்
   1. முதலுறுப்பு
   2. பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க

02. $12y^2 = 2^2 \times 3 \times y^2$
   $18x = 2 \times 3^2 \times x$
   $36x^2y = 2^2 \times 3^2 \times x^2y$ என்பவற்றிலிருந்து
   1. பொ.ம.சி
   2. பொ.கா.பெ என்பவற்றைக் காண்க.

03. ஒரு விளையாட்டுக் குழவில் இருந்து சில மாணவர்களது இடைநிறை 41கி.கி ஆக இருந்தது. இவர்களுடன் ஒவ்வொருவரும் 51கி.கி நிறையுடைய 3 மாணவர்கள் இணைந்து கொண்டனர். இவர்கள் அனைவரினதும் இடைநிறை 43கி.கி ஆகக் காணப்பட்டது எனின், ஆரம்பத்தில் இருந்த மாணவர்கள் எத்தனை பேர்?

04. கிடையான நிலம் ஒன்றில் ஒரு நிலைக்குத்தான கம்பம் நாட்டப்பட்டுள்ளது கம்பத்தின் அடியிலிருந்து 4.5மீ உயரத்தில் P எனும் புள்ளி உள்ளது. P யையும் நிலத்தில் உள்ள மூன்று புள்ளிகள் A, B, C யையும் இணைக்கும் இழைகளினால் இக் கம்பம் தாங்கப்படுகின்றது. கம்பத்தின் அடியிலிருந்து A, B, C ஆகிய ஒவ்வொரு புள்ளியினதும் தூரங்கள் 5மீ ஆகும்.
   1. இழை AP கிடையுடன் அமைக்கும் கோணத்தைக் காண்க?
   2. ABC ஒரு சமபக்க முக்கோணி எனின், பக்கம் ABஇன் நீளத்தைக் காண்க?

05. ரூ30,000 பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வாங்கியவர் முதலில் ரூ6000 செலுத்தியும் பின்னர் ஒரு தவணைக் கட்டணமாக ரூ6750 ஐ செலுத்தினார். அவர் மீதிப் பணத்தை 14 சம தவணைகளில் செலுத்தினார் எனின்,
   1. அவர் செலுத்திய மொத்த வட்டி என்ன?
   2. வட்டி அறவிடப்பட்ட மாத வட்டி வீதம் என்ன?

## பாடம் : வரலாறு

1. இலங்கை சுதந்திரம் அடைந்த போது பலமாக இருந்த அரசியல் கட்சியானது
   1. ஐக்கிய தேசிய கட்சி   2. மக்கள் விடுதலை முன்னணி
   3. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி   4. இலங்கை தேசிய தொழிலாளர் சங்கம்

2. புராதன இந்தியாவில் இருந்த விஜயநகர பேரரசு பற்றிய கீழ்வரும் கூற்றுக்களுள் சரியானது?
   1 . இந்தியா முழுதும் தனது ஆதிக்கத்தை செலுத்தினார்
   2. தென்னிந்தியாவில் இந்து சமயத்தை பாதுகாத்ததுடன் இஸ்லாம் மதம் பரவுவதையும் தடுத்தனர்.
   3. மௌரிய வம்சத்தவர்களுடன் இணைந்து இந்தியாவுக்கு வெளியேயும் தமது அதிகாரத்தினை செலுத்தினர்.
   4. கலைகளை விருத்தியுற செய்ய இந்தியாவிலுள்ள வல்லுனர்களை தென்கீழ் ஆசிய நாடுகளுக்கு அனுப்பினர்.

3. மகாத்மா காந்தியினை நிர்வாணபக்கிரி என அழைத்த உலகத்தலைவர்களில் ஒருவர்?
   1. மார்டின்லூதர்   2. தலாய்லாமா   3. ஸ்டாலின்   4. வின்சன்ட் சர்ச்சில்

4. எவ்வேத நூலில் ஆரியரின் வருகை பற்றி அறியக்கிடக்கிறது?
   1. இருக்கு   2. யசூர்   3. சாமம்   4. அதர்வம்

5. வலகம்பா மன்னனால் குப்பிகல திஸ்ஸ தேரருக்கு தானமாக வழங்க பூசிக்கப்பட்ட ஆராமை
   1. ஜேத்தவனராமய   2. அபயகிரி   3. ருவன்வெலிசாய   4. ரண்கொத்

6. இந்தியாவின் எவ்வரசன் ஆட்சி செய்த வேளையில் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் இலங்கை மீது படையெடுத்து செல்வங்களை கொள்ளையிட்டுச் சென்றான்
   1. மகாசேனன்   2. தாதுசேனன்   3. மித்தசேனன்   4. 1ம் சேனன்

7. எந்த பொலநறுவை ஆட்சியாளன், துலாபாரம் எனும் தானம் வழங்கும் முறையை ஏற்படுத்தினான்?
   1. 1ம் பராக்கிரமபாகு   2. 2ம் விஜயபாகு   3. 6ம் மகிந்தன்
   4. நிஸ்ஸங்கமல்லன்

## பாடம் : விஞ்ஞானம்

01. தாவரங்களின் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின் ஒரு கட்டத்தைப் பின்வருவனவற்றில் எது குறிக்கின்றது?
   1. வித்திலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   2. கிளையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   3. வேரிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்
   4. இலையிலிருந்து கன்றைப் பெற்றுக்கொள்ளல்

02. அமில ஊடகத்தில் நன்றாகத் தாக்கம் புரியும் நொதியங்கள் எவை?
   1. பெப்சினும் ரெனினும்   2. பெப்சினும் அமைலேசும்
   3. அமைலேசுமும், திருப்சினும்   4. அமைலேசும் இலிப்பேசும்

03. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
   1. அன்னாசி   2. சதைக்கரைச்சான்   3. வல்லாரை   4. வெங்காயம்

04. யூரியா $[CO(NH_2)_2]$ இலுள்ள காபனின் சதவீதத்தை சரியாகக் குறிப்பது எது?
$(C = 12, O = 16, N = 14, H = 1)$
   1. 26.6%   2. 20%   3. 30%   4. 23.3%

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

பாரதியார் சுயசரிதை (புதிய பாடத்திட்டம்)

### பிள்ளைக் காதல்

வினா விடை -

01. இவ்வடிகளின் பொருளை எழுதுக.

ஆழு நெஞ்சத் தாசை யின்றுளதேல்
அதனுடைப் பொருள் நாளை வினைந்திடும்

இன்று நம் அடிமனதில் ஓர் ஆசை தோன்றுமானால் அதன் பெறுபேற்றினை நாம் நாளை காணலாம், எனும் கருத்தையே இப்பாடலடி எடுத்துக் கூறுகின்றது.

02. மகா கவி பாரதியார் (1882 – 1921).

1882 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். தனது 14 வது வயதில் பாரதி என்று போற்றப்பட்டார். இவரது இயற் பெயர் சுப்பிரமணியம் என்பதாகும். தமிழ்க் கவிதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பாரிய பெறுமதி வாய்ந்த மாற்றங்களை புகுத்திய பாரதி நவீன தமிழ்க் கவிதையின் பிதாமகன் என்றும் போற்றப்படுகின்றார். அநீதி அடிமைத்தனம் அறியாமை வறுமை போன்றவற்றை பொசுக்கிடும் வேட்கையினால் உந்தப்பட்ட பாரதி தேசத்தையும் மொழியையும் மானிடத்தையும் இறைவனையும் போற்றியதோடு அமையது இயற்கையழகிலும் ஈடுபட்டு நின்றதையும் அவதானிக்கலாம்.

பாரதியின் சுயசரிதை என்னும் நீண்ட பாடப் பகுதி 49 பாடல்களை கொண்டதாகும். அதில் பிள்ளைக் காதல் என்னும் உபதலைப்பின் கீழ் 05 தொடக்கம் 20 வரையான பாடல்கள் கணப்படுகின்றன. அதில் 9 தொடக்கம் 13 வரையான பாடல் பாடப்பகுதியில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. பாரதியாருக்கு பத்து வயதாக இருக்கும் போது ஒன்பது வயது சிறுமி மீது ஏற்பட்ட மாசில்லாத பிள்ளைக் காதல் இப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: Use your own ideas to complete these sentences. Use the past continuous.

1. The television was on but nobody ..................................
2. Tom burnt his hand while he ..................................
3. The door bell rang while I ..................................
4. Marry fell asleep while she ..................................
5. We saw an accident while we ..................................
6. I saw Sue in town yesterday but she ..................................
7. I was having dinner with ..................................
8. Ann was watching television when the ..................................
9. When Yakshayan arrived We ..................................
10. I waved to her but she ..................................
11. I saw a little kitty ..................................
12. When I in childhoof ..................................

05. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
   1. கம்பமேலணி   2. கனமேலணி
   3. படைகொண்ட மேலணி   4. பிசிர் மேலணி

06. பின்வருவனவற்றில் எது தனியெண்களின் பாரம்பரிய இயல்பாக அமைவதில்லை?
   1. உயரம்   2. நுண்மதி   3. தோலின் நிறம்   4. தசை வளர்ச்சி

07. கழிவுப் பொருள்கள் என்பன உடலின் உயிரசாயனச் செயன்முறைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேவையற்ற பொருள்களாகும். இதற்கேற்ப மனிதனின் உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருளாக அமையாதது?
   1. தோலிலிருந்து வெளியேறும் வியர்வை.
   2. சிறுநீரகங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சிறுநீர்
   3. சுவாசத் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் நீர்
   4. உணவுக் கால்வாயிலிருந்து வெளியேற்றப்படும் மலம்.

09. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
   1. தைத்தேனியம் ஒட்சைட்டு   2. ஈயகுரோமேற்று
   3. குரொமியம் ஒட்சைட்டு   4. காபன்

10. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாக கருதப்படுவன யாவை?
   1. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன   2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
   3. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன   4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 16

01. பின்வரும் தாவர இலைகளில் அளவில் பெரியது
i. வல்லாரை ii. பசளி iii. சேம்பு iv. தோடை

02. பின்வரும் சமயத்தலங்களில் பொலன்நறுவையில் காணப்படும்
I. சீகிரியா ii. கல்விகாரை iii. அம்பக்கை
iv. ருவன்வெளிசாய

03. பூக்கும் தாவரம்?
i. கற்றாளை ii. பன்னம் iii. பாசி iv. மடுப்பனை

04. மின்காந்தத்தின் மூலம் செயற்படும் கருவி எது?
I. தைனமோ ii. திசைக்காட்டி iii. மின்மாணி
iv. கைக்கடிகாரம்

05. மீன்கள் நீந்தும் போது அவை செல்லும் திசையை மாற்றுவதற்கு உதவுவது
i. மீன்பூ ii. குதச்செட்டை iii. மார்புச்செட்டை
iv. வாற்செட்டை

06. இஞ்சி சேர்த்ததேனீரை பருகிய ஒருவர் உண்ணக் கூடாதது
I. வற்றாளை ii. மரவெள்ளி iii. பழப்புளி iv. பாகற்காய்

07. எதிரியைத் தாக்குவதற்கு நகத்தை பயன்படுத்தக்கூடிய பிராணி எது?
i. குதிரை ii. அணில் iii. பூனை iv. நாய்

08. அவசரகால மின் தடங்கல் பற்றிய முறையீட்டைத் தெரிவிப்பதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
i. 1999 ii. 1898 iii. 1987 iv. 1929

09. வாற் பேத்தையின் முதிர்பருவம்
i. வண்ணாத்துப்பூச்சி ii. தவளை iii. ஓணான் iv. பல்லி

10. கொழும்பு, யாழ்ப்பாணநகரங்களை இணைக்கும் வீதி
i. A1 ii. A9 iii. A3 iv. A6

11. தேசப்படங்களில் புகையிரத வீதிகளைக் குறிக்கும் நிறம்
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை iv. நீலம்

12. வாகனங்களை நிறுத்தி வைக்கும் போது ஒளிர வேண்டிய விளக்கு
i. மஞ்சள் ii. சிவப்பு iii. பச்சை iv. நீலம்

**பகுதி 02**


01. தொடர் வாக்கியத்தை தனிவாக்கியங்களாக மாற்றி எழுது
i. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து பாடம் கற்பித்தார்
..............................................................................
..............................................................................
ii. கடும் காற்று வீச மழை பொழிந்தது
..............................................................................
..............................................................................

03. பேச்சு வழக்கு சொற்களை எழுத்து வழக்கில் மாற்றி எழுதுக
I. கலாச்சாரம் ..........................
ii. சவக்காரம் ..........................

04. பழமொழிகளின் கருத்தினை எழுதுக
i. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
..............................................................................
ii. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
..............................................................................

05. தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
i. நீரால் சூழப்பட்ட பெரிய நிலப்பரப்பு
..............................................................
ii. வீண் செலவு செய்பவன்
..............................................................

06. உருவின் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக


______________

______________



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு



குட்டிக்கதை



## நட்புக்குத் துரோகம்

ஓர் அடர்ந்த காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதாவது நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும் இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி



செய்து கொண்டன.

ஒரு நாள் நரி, தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்தற்காக கழுதையின் இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்றதும் சிங்கம் ஒன்று நரியை வழிமறித்தது. சிங்கத்தைக் கண்டு அந்த நரி நடுங்கியபடி எப்படியாவது அதனிடமிருந்து உயிர் தப்ப வழியுண்டா என யோசித்தது.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, மன்னாதி மன்னா! அற்ப பிராணியான என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் சொல்ல முடியும். "என் நண்பனாக, நன்கு கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதனை சிரமமில்லாது நீங்கள் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டை நான் செய்கின்றேன். அந்தக் கழுதை இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்" என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டிற்கு சிங்கமும் ஒப்புக் கொண்டது.

நரி சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத்திற்குச் சென்றது.

நண்பனே இரைதேடச் செல்லலாமா? என கழுதையை அழைத்துக் கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது

உடனே சிங்கம் கழுதை மீது பாய்ந்து அதைக் கொன்றது. தான் தப்பித்தேன் என நினைத்து பெருமூச்சு விட்டது நரி. சற்று நேரத்தில் சிங்கம் நரியின் மீதும் பாய்ந்து பிடித்தது.

அப்போது நரி, "மகாராஜா! எனக்குப் பதிலாகதானே நான் கழுதையை காண்பித்தேன். இப்போது என்னையும் கொல்லப் பார்க்கிறீர்களே" என்றது.

"நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுத்த நீ, நாளை பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம். ஆகவே உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது" எனக் கூறிக் கொண்டு நரியையும் கொன்று வீழ்த்தியது.

- தீய நண்பர்களுடன் சகவாசம் வைத்திருந்தால், உங்களுக்குத்தான் தீமை ஏற்படும் -

## விடுகதைகளும் விடைகளும்

1. கூவி அழைப்பான். கூடி உண்ணுவான். அவன் யார்?

2. கூலி, சேதாரம் இல்லாத நகை. சிறு குழவிகளின் நகை. அது என்ன நகை?

3. மூடிக் கிடந்தவனை முறைப்படி எடுத்தால் பூசியும் குளிக்கலாம். அவன் யார்?


4. மூன்றெழுத்து முனிவரே, முதலெழுத்து அழகரே, மூன்று கோடு முனிவரே முழி முழிக்கும் அழகரே. அவர் யார்?

5. மூன்றெழுத்து கொண்டது பெண். முதலெழுத்தை நீக்கினால் பூ. அது என்ன?

**விடைகள்**
1. காகம்
2. புன்னகை
3. மஞ்சள்
4. அணில்
5. சரோஜா

ம. டிலான்
தரம் - 09,
புனித சூசையப்பர் கல்லூரி

**சிந்திக்க ..**
கலங்கிய நீரில் தெளிவான பிம்பங்களும்
கலங்கிய மனதில் தெளிவான சிந்தனைகளும்
பிறப்பதே இல்லை:



மாணவி - தி.பிரசாளினி
தரம் - 07



பொ. ஹிலன் அன்டீ.
தரம் - 06சீ

## பொது அறிவு - 18

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. இலங்கை மத்திய வங்கியின் முதலாவது ஆளுநர் யார்?
ஜோன் எஸ்டர்

02. கிழக்கு மாகாணத்தில் நெசவுக் கைத்தொழிலுக்கு பிரசித்தி பெற்ற இடம் எது?
மருதமுனை

03. ஐக்கிய நாடுகள் சபையானது தானிய ஆண்டாக பிரகடனப்படுத்திய ஆண்டு எது?
2016 ம் ஆண்டு

04. இந்தியாவின் முதன்மையான விளையாட்டு அலைவரிசை வலையமைப்பு எது?
ஸ்டார் ஸ்போர்ட்ஸ்

05. நொக்கியா ஃபோன் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1992 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பௌர்ணமி நிகழ்வு "மேடை ஒன்று – நிகழ்வு மூன்று"

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மகுடம் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் மாபெரும் கலை இலக்கிய நிகழ்வுமேடை ஒன்று - நிகழ்வு மூன்று பௌர்ணமி கலை நிகழ்வின் விசேட தொடர் அமர்வு -11 எதிர்வரும் சனிக்கிழமை (18.04.2015) மாலை 1.30 அளவில் மட்டக்களப்பிலுள்ள மாநகரசபை நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மகுடம் கலை இலக்கிய வட்டம் பௌர்ணமி தினங்களில் நடாத்திவரும் பௌர்ணமி கலை நிகழ்வின் தொடர் அமர்வின் பதினோரவது விசேட அமர்வாக கிழக்கிலங்கை யில் முதன் முறையாக திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பிரதேச படைப்பாளிகள் கலந்து கொள்ளும் உரையாடல் பொதுவெளி.

எழுத்தாளர் ஜீவகுமாரனின் மூன்று நூல்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இந்நிகழ்வின் போது வரவேற்புரை கவிஞர் வி. மைக்கல் கொலின் (தலைவர்-மகுடம் கலை இலக்கிய வட்டம) அவர்களால் ஆற்றப்பட வுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர் மகுடம் கலை இலக்கிய வட்ட குழுவினர்.




## கும்பாபிஷேக பெருவிழா

- கதிரவன் -

திருகோணமலையில் அமைந்துள்ள கிண்ணியா ஊற்றடி பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக பெரு விழா ஆரம்பமாக திருவருள் கூடியுள்ளது. 20.04.2015 ஆகிய எதிர்வரும் திங்கட்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி எண்ணெய்க்காப்பு நிகழ்வு 21.04.2015 அன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 22.04.2015 (புதன்கிழமை) சுபநேரம் காலை 9.00 மணிக்கு எம்பெருமானுக்கு கும்பாபிஷேக நிகழ்வு நிகழ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திர குருக்கள் தலைமையில் இடம்பெற வுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அனைவரையும் விநாயகப் பெருமானின் திருக்கடாட்சத்தை பெற்றேகுவதற்காக அன்புடன் அழைக்கின்றனர் ஆலய பரிபாலன சபையினர்.



## பசுமாடுகள் வழங்கி வைப்பு



கிழக்குமாகாண விவசாய கால்நடை அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலை சித்தாண்டி ஆகிய பிரதேசங்ளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்களுக்கு பசுமாடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு, வந்தாறுமூலை கால் நடை வைத்திய அதிகாரி காரியாலயத்தில் கால்நடை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது. பிரதம அதிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்குமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம் கலந்துகொண்டார்.

## இலவச புத்தகங்கள் கையளிப்பு

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்துக் குட்பட்ட இலுக்குப்பொத்தானை மலைமகள் வித்தியாலயம், பெருமாவெளி விஸ்ணு வித்தியாலயம், பெரியவட்டவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே இலவசமாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

லண்டனிலுள்ள கனக துர்க்கை ஆலயம் மூலம் பெறப்பட்ட அப்பியாசக் கொப்பிகளை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் வழங்கி வைத்தார்.



## மக்கள் முரசு

# தாய், தந்தையரின் ஆதாரமான குழந்தைகளின் எதிர்காலம்

### தொகுப்பு : தன்யா

பெற்றோரின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவது அவர்கள் ஈன்றெடுத்த பிள்ளைகள் மற்றும் அவர்களின் எதிர்காலமும் தான். ஒரு குழந்தை தாயின் கருவில் உருவாகும் வேளையில் இருந்தே கற்றுக் கொள்ள அல்லது வளர்ச்சியடைய தொடங்குகின்றது.

எனவே தான் கர்ப்பமான தாய்மார் மிக அன்பாகவும் எந்நேரமும் சந்தோசமாகவும், கவலைகளை தாங்கிக் கொண்டும், கடினமான படிப்புக்களை படித்த வண்ணமும், கடினமான வேலைகளை செய்த வண்ணமும், இசை, நடனம் போன்றவற்றில் ஈடுபாட்டுடனும் இருக்க வேண்டும் என்கிறது உளவியல். தாய் தன் கருவிலிருக்கும் குழந்தைக்கு என்னவெல்லாம் கொடுக்கிறாரோ அவை எல்லாம் அக் குழந்தையினிடத்து சேர்கின்றது.

ஓர் குழந்தையை உன்னதமான எதிர்கால சந்ததியினராக வளர்க்கும் பொறுப்பு தாயிடம் மாத்திரமல்ல தந்தை, உற்றார், சுற்றுப்புறச் சூழல் அனைத்திடமும் உண்டு.

மனித வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்களில் பிள்ளைப்பருவம் மிக முக்கியமானது. இங்கு விருத்தி என்ற எண்ணக் கரு முன்னேற்றகரமான மாற்றங்களைக் குறித்து நிற்கின்றது. எல்லா மாற்றங்களையும் விருத்தியாகக் கொள்ளவும் முடியாது. உளவியல் ரீதியாக விருத்தி பற்றி நோக்கும்போது உடல், அறிவு, நடத்தை, ஆளுமை மாற்றங்கள் பிறப்பிலிருந்து தொடர்ச்சியாக நிகழ்கின்ற மையை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

19 ஆம் நூற்றாண்டிலிருந்தே மனித நடத்தை பற்றிய விஞ்ஞான ரீதியான உளவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளை நடத்திய உளவியலாளர்களால் மனித இயல்புகள், பிள்ளையின் விருத்தி பற்றிய முழு விளக்கத்தையும் பெற முயலவில்லை.

நடத்தை பற்றிய சில நோக்குகளில் மட்டும் ஆர்வம் கொண்ட வெவ்வேறு பிரிவுகளை அவர்கள் அமைத்தார்கள். அவர்களுடைய ஆய்வு நோக்கங்கள், முறைகள் வெவ்வேறாக இருந்தன. மேலும் இவர்களது ஆய்வுகள், தரவுகள் மென்மேலும் அதிகரிக்கச் செய்தனவே ஒழிய தொடர்ச்சியான முறையில் விருத்தியின் வடிவங்களை வழங்குவ்தற்கு ஒன்றிணைக்கப்பட வில்லை.

#### ஆய்வு முறைகளில் அவதானம்

பிள்ளை பற்றிய ஆய்வுகளுக்கும் பெற்றோர் வைத்திருக்கும் பிள்ளைகளின் வாழ்க்கைக் குறிப்புகள், இயற்கையான ஆற்றல்கள், ஆர்வங்கள், சமூகவிருத்தி, விளையாட்டுக்கள், பழக்கவழக்கங்கள், பேச்சு, உடல் வளர்ச்சிகள், மனவெழுச்சி நிலைகள் முக்கியமானவை யாகவுள்ளன.

இவற்றின் மாற்றங்களை அவதானிப்பு முறையைப் பயன்படுத்தி முழுமையாக அறிய முடியும். பிள்ளை விருத்தி ஆய்வுகளில் இன்று அவதானம் ஓர் ஆய்வு முறையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

இந்த ஆய்வுகளின் பேறுகள் மூலம் பிள்ளைகளின் விருத்திக் கோலங்கள், நியமங்கள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கற்றல் தொடர்பான விடயங்கள் அவர்களது பிறழ்வுகளுக்கான காரணங்கள், அவர்களுக்கு வழங்க வேண்டிய ஆலோசனை வழிகாட்டல் செயல்முறைகளை அறிந்து கொள்ளலாம்.

இதன் மூலமாக அவர்களை சிறந்த எதிர்காலப் பிரஜைகளாக்கலாம். மேற்குறிப்பிட்ட ஆய்வுகளினூடாக பிள்ளை விருத்தி பற்றிய கொள்கைகள் உருவாகியமை பற்றி இனிக் கவனிப்பது பொருத்தமாக இருக்கும்.

#### சூழல்சார் கல்விக் கொள்கை


சூழல் சார் அல்லது கற்றல் கொள்கைகள் பிள்ளை விருத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. கருத்தரிப்பு தொடக்கம் குழந்தை பிறந்து வளர்ந்து மரணிக்கும் வரையில் உயிர் இனங்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக, சமூக, உள உவகங்களின் ஒட்டு மொத்தமே சூழல் ஆகம்.

ஓர் அனுபவம் மிக்க ஆசிரியர் அல்லது வழிகாட்டிகள் இக் கொள்கைகளை இணைத்துக் கொள்ளுமிடத்துப் பிள்ளைகளை விளங்கிக் கொள்ளவும், அவர்களுக்குக் கற்பிக்கவும் வழிகாட்டவும் பெற்றோருக்கு ஆலோசனை கூறவும் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்து நிலைகளில் பணிபுரிய முடியும். பல்வேறு கொள்கைகள் இருப்பதனால் அவை ஒன்றை ஒன்று முழுமைப்படுத்தவும் உதவுகின்றன. பிழையான வழிகாட்டுதல் களை ஒரு போதும் பிள்ளைக்கு வழங்கிவிடக் கூடாது பின்னர் அவர்களை நேர் செய்து சிரமமாகிவிடும்

குழந்தைகள் கார்ட்டூன் படங்கள், கார்ட்டூன் சேனல்களை ரசித்து பார்ப்பார்கள். இவ்வாறு கார்ட்டூன் பார்ப்பது அவர்களுக்கு பிடித்தமான விடயமாக இருந்தாலும், இதனால் பல விளைவுகளை சந்திக்க கூடும்.

பள்ளியில் இருந்து வீடு திரும்பியவுடன், கொஞ்ச நேரம் பொழுதுபோக்கிற்காக பார்த்தால் அதில் தவறு கிடையாது, ஆனால் விடுமுறை கிடைத்தால் தங்களது நேரங்களை முழுக்க முழுக்க கார்ட்டூன் பார்ப்பதிலேயே செலவிடுவதை பெற்றோர்கள் கண்டிக்க வேண்டும்.

கார்ட்டூன் பார்க்கும் குழந்தைகளின் கற்பனைத்திறன் பாதிக்கப்படுகிறது என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலும்...

தொடர்பாக தமது நிலைப்பாட்டைக் கட்சியின் தலைவர் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வடக்கு கிழக்கில் தனித்துப் போட்டியிடவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளை வைத்து தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

ஏனெனில் இலங்கை அரசாங்கத்தினால் அதிகாரங்கள் பங்கிடப்பட்டாலும் அதனை மீண்டும் அரசாங்கம் கைப்பற்றக்கூடும்.

இலங்கையில் தமிழர், சிங்களவர்களுக்கென இரண்டு தேசங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன், தமிழருக்கென்று தனியான தேசம் அமைந்து சமஷ்டி முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் இலக்கு. அப்போதுதான் தமிழர்கள் சுயநிர்ணயத்துடன் இந்த நாட்டில் வாழ முடியும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இதனையே முன்னிறுத்தி எங்களுடைய நகர்வுகள் இருக்கும்.

இது எங்களுடைய இலக்கு மாத்திரமல்ல, ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்தின் நிலைப்பாடாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வர்த்தமானி அறிவி....

கடந்த அரசினால் பொருளாதார ஊக்குவிப்பு வலயத்திற்காக தனியாருக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்று அவற்றை மக்களிடம் கையளிப்பதற்கான அறிவிப்பாகவே இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

மீள்குடியேற்ற அமைச்சரால் வழங்கப்படட உறுதி மொழிக்க அமைவாக மக்களை மீளக்குடியேற்றுவதற்கு இன்னும் 12 நாட்களே இருக்கின்ற நிலையில் வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

## கிழக்கில் ஆட்சியை..

உருவாகியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் நீண்ட இழுபறிக்குப் பின்னர் தீர்வு காணப்பட்ட கிழக்கு மாகாண சபை ஆட்சி குறித்தும் அவர் இதன்போது கருத்து வெளியிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிரிவினைவாதம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே ஆட்சியமைக்கும் வாய்ப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு விட்டுக் கொடுத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் அண்மையில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் மூவர் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானதையோ, ஒரு ஊடகவியலாளர் கைதானதையோ சுமந்திரன் கருத்திற்கொண்டதாகத் தெரியவில்லை.

## கிழக்கில்...

கைதுகள் தொடரும் பட்சத்தில் கடந்த அரசாங்கத்திற்கு புகட்டிய பாடத்தை புதிய அரசாங்கத்திற்கு புகட்டுவதற்கு மக்கள் தயங்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மக்கள் தொடர்ந்தும் நிச்சயமற்ற தன்மையுடனேயே வாழ்ந்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின் பத்தாண்டு கால ஆட்சியின் போது தமிழ் மக்கள் பெரும் துயரங்களை எதிர்நோக்க நேரிட்டதாகக் குறிப்பிட்டுள்ள அவர், புதிய அரசாங்கமும் தமிழ் மக்களர்களின் பிரச்சினைகளை உதாசீனம் செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

## கிழக்கின் பல்கலை

கல்வி ராசாங்க அமைச்சர் வடக்கிலும் கிழக்கிலும் பயணங்களை மேற்கொண்ட போது கிழக்கு மற்றும் வடக்கின் பல்கலைக்கழகங்களிலுள்ள மலையக மாணவர்கள் எதிர்கொள்ளும் பல குறைகள் அமைச்சருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் மிக முக்கியமான குறைபாடாக மாணவர்களின் போக்குவரத்து வசதிகள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்தே கிழக்கிலும் வடக்கிலும் பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

## ஊற்றங்கரை ...

தெரிவித்த பரிபாலன சபையினர் தற்போது சிறிய அளவில் கோவலாக உருவாக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

கும்பாபிசேகக் கிரியைகள் எதிர்வரும் 20ம் திகதி ஆரம்பமாகும் எனவும் எண்ணெய்க்காப்பு 21ம் திகதி நடைபெறும் எனவும் கும்பாபிசேகம் 22ம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை நிகழும் என்றும் தெரிவித்தனர்.

அதேவேளை நாளை 19ம் திகதி காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ள சிரமதானப் பணிகளில் அனைவரையும் கலந்துகொள்ளும்படி பரிபாலனசபையினரும், மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பத்து நாட்களுக்குள்...

இடம் பெற்றது.

இதன் போது சம்பந்தன் அவர்கள் ஜனாதிபதியின் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலணியுடன் தாம் பேசியதாகவும் அப்பேச்சுக்களில் நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதிகளின் உண்மையை கண்டறிந்து அவ்வாறான நிலை மீண்டும் ஒரு போதும் ஏற்படாத வண்ணம் நிலையான தீர்வு ஒன்றினை அடைய சனாதிபதி செயலணி முயற்சிக்கின்றது என்றும் மக்களுடைய காணி, காணாமல் போனோர் மற்றும் விதவைகள் பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினை வாழ்வாதாரப் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பாக உண்மையான தரவுகளை சேகரித்து இந்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து எமக்கான நீயாயமான தீர்வுகளை ஏற்படுத்த முயற்சிப்போம். இதற்காக இன்றிலிருந்து 10 தினங்களில் இவ்வாறான விடயங்களை ஆராய்ந்து தரவுகளுடன் ஆவணப்படுத்தி வழங்கி இந்த சந்தர்ப்பத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்

## நகரசபை....

நகரசபைத் தலைவரின் உறவினர்கள் தொழிலாளிகள் தரத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் தொழிலாளிகள் தரத்தில் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் நகரசபையினுள் காரியாலயக் காரிய சேவர்களாளகவும் முகாமைத்துவ உதவியாளர்களாகவும் பணிபுரிகின்றனர் என்றும் இந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சேவைமூப்பு அடிப்படைகளோ அல்லது சேவைக்காலமோ கருத்திற் கொள்ளப்படாது நியமனங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தொடரும் குற்றச்சாட்டுக்களில் கடந்த 01ம் திகதி நான்கு வருடங்களாகச் சேவையாற்றிய ஒருவரை நிறுத்திவிட்டு அப்பதவிக்கும் உறவினரொருவரை மாற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு முழுமையான விசாரணையொன்றை நடாத்தக் கோரியே மாகாண முதலமைச்சரின் காரியாலயத்திற்கு முன்புறமாக அடையாள வேலைநிறுத்தமொன்றை முன்னெடுக்கவிருப்பதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கம் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## தமிழ் மக்கள்...

இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், "எமது மக்களின் நன்மையிலும் தீமையிலும், வாழ்க்கையிலும் மரணத்தறுவாயிலும் பக்கத்தில் நின்று, இறுக்கமான ஒரு காலத்தின் போதும் எம்மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வந்துள்ளார். இனிவருங்காலத்தில் இறுக்கம் தளர்ந்த நிலையில் ஆனால் குழப்பம் மிகுந்த சூழலில் அடுத்த கட்டமாக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒரு பொதுவான அரசியல் முடிவுக்குவர உதவ வேண்டிய நிலையில் உள்ளார்.

ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் புலம்பெயர் தமிழ் பேசும் மக்கள், உள்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இனிவருங்காலத்தில் எப்பேர்ப்பட்ட ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அறிந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டங்களால்...

நடவடிக்கையும் ஊடகங்கள் ஊடாக வரும் போது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தலைமறைவாவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றதல்லவா எனக் குறிப்பிட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் திருகோணமலை அணியிடம் தெரிவித்ததாக அச்சங்கத்தின் பத்திரிகை அறிவிப்பு தெரிவிக்கின்றது.

(அச்சுதன்)

## இனத்திற்காய்ப்...

எல்லாம் முடிந்ததென்று முற்றுப்புள்ளி வைக்க
நினைத்த எம் கைகளை பிடித்து எழ வைத்த
இன்னொரு போராளி - ஆண்டகை

அற்புதங்கள் செய்த அடம்பனையும் ஆட்காட்டி
வெளியையும் சுமக்கும் மன்னார்
அதே நிமிர்வுடன் ஆயரை தந்தது தமிழருக்கு.
அன்றைக்கும் இன்றைக்கும் எதிரிக்கு சிம்ம
சொப்பனங்களை தந்தது மன்னார்.
வெண் சிறுத்தைகளையும் விடுதலை
வரலாற்றில் காணவேண்டியது கால ஒழுங்கு.
பங்கு தந்தைகள் பலியெடுக்கப்பட்டதும்
கிளிபாதர் கிளைமோரில் கிழித்தெறியப்பட்டதும்
சென்பீற்றர் தேவாலயத்திலும்
வவுனிக்குள பதியிலும் குருதிபாய்ந்ததும்
நினைவுகளில் எழும்போது....
வெள்ளை உடுத்து குருவாகும்
கொள்கை வாதிகளின் நெஞ்சில் - கொஞ்ச
நெருப்பும் சேர்ந்துதான் குருப்பட்டம் தரிக்கும்.
இயேசு என்ற போராளி யுகங்களை கடக்கிறான்
அவன் கடக்கும் போதெல்லாம் தோன்றும்
ஒளிக்கீற்றில் ஒன்று இராயப்புயோசப்.

மன்னாரில் இருந்தும் மாவிலாற்றில் இருந்தும்
தொடங்கிய எங்கள் இறுதி நாட்களில்
இயேசுபோலவே எல்லாரும்
முள்முடிதரித்திருந்தார்கள்
தள்ளாடினார்கள்.... சித்திரவதைப்பட்டார்கள்
குருதி சிந்தினார்கள்.... உயிர்பிரிந்தார்கள்.
உயிர்ப்பு நிகழ்ந்ததா? - ஆம் மேதகு ஆண்டகை
இராயப்பு யோசப்பு வடிவிலும்!
எல்லா ஞாயிறுகளும் உயிர்த்த
ஞாயிறுகளாகவும் இருந்தன.
எங்கள் தவக்காலங்கள் முடியவில்லை
நண்பர்களே!
அகலத்திறந்த குரலால் ஐக்கிய நாடுகள் சபை
வரை விரிந்து நிற்கும் இராயப்பு யோசேப்பின்
விசுவருபம்
ஆங்கோர் அகன்ற பாத்திரத்தில் தமிழர்களின்
இதயத்தை ஏந்திநிற்கின்றது.
தர்மத்துக்கான நிமிர்ந்த நடையில் தளர்வுகள்
வராது! காலமே ஆயரின் அருகில் இரு
ஆண்டகை கூட எதிரிகளை பொறுத்தவரை
பயங்கரவாதிதான் - ஆச்சரியப்படத்
தேவையில்லை.
ஆயருக்கு வெள்ளை வான்
ஆயத்தப் படுத்தியிருந்தாலும்
அவருக்கொரு பூஸா கட்டி காத்திருந்தாலும்
ஆண்டகைக்கும் சில இருட்டறைகள்
கனவு கண்டிருந்தாலும்
எதுவும் முடியவில்லை
தர்மத்தில் வடிவில் அவர் இருக்கின்றார்.
தளராத் தமிழனாய் அவர் பேசுகின்றார்.
முள்ளிவாய்க்காலின் மொழி
ஆயரில் நாவில் எழும்போது
மறுத்துரைக்காமல் கேட்கிறது மானுடநீதி
பண்டிவிரிச்சான் கானகம் வரையும் வத்திக்கான்
வந்துபோகின்றது.
அகதியான மாதாவின் அனுபவங்களை
அடிநெஞ்சின் குளறல்களை கண்டு
போயிருக்கின்றார் பாப்பரசர்.
இத்தாலி பக்கத்தில் இருக்கின்றது இப்பொழுது.
ஜெனிவா மடுவீதியில் இறங்குகின்றது.
தமிழரின் பைபிள் ஆகிறார் இராயப்புயோசப்பு.

சோர்ந்து போகிறவனுக்கெல்லாம்
ஒரு சிறிய ஆலோசனை சொல்ல
நினைக்கின்றேன்
வாடா!
எழுபத்தைந்து வயதில் ஒரு விடுதலைத்தேக்கு
ஒன்று விளைந்து கிடக்கின்றது மன்னாரில்
தரிசித்துவா - தளர்வு போகும்.

ஏற்றமிகு மனிதர்கள் எம்மோடு இருக்கும்போது
மாற்றங்கள் வரும் நம்புவோமாக!
திருவிழாக்கள் பெருநாள்கள் என்று மட்டும்
அடையாளப்படும் ஆலயங்கள்
தெருவிலிறங்கி இன்னல்கள் துன்பங்கள் கண்டு
குமுறும் இதயங்களின் அடையாளமாகவும்
மாறவேண்டும் எம் மனக்குமுறல்.
இராயப்புயோசப்புவின் அகன்ற
எண்ணங்களின் உறைவிடமாக மாறுதல்
வீழ்ந்த எம்மினத்தின் பேரொளியாய் ஆகும்.
வாழ்க! ஆண்டகை இராயப்பு யோசேப்பின்
வல்லமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆன்மீக சூழல் அற்றுப் போகும் முஸ்லீம் வீடுகள்



கடந்தவார தொடர்ச்சி .. ..

ஒருவருக்கொருவர் சேவை செய்யும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் வாழ்வில் சலிப்புத்தட்டும் மனஅழுத்தம் ஒன்றே வாழ்வாக மாறிவிடும். வெளிநாடுகளில் வேலை பார்க்கும் பலரின் நிலை இதுதான்.

சிலருக்கோ, ஊரறிய இவள் இன்னாரின் மனைவி, இவன் இன்னாரின் கணவன் ஆனால் நிஜத்தில், மறைவான வாழ்வில் வேறொரு நிலை. கள்ளத்தொடர்ப் கருவையே சந்தேகிக்க வைக்கும் மகா கொடுமை. இத்தனைக்கும் ஆணி வேர் ஒருவரின் தேவையை இன்னொருவர் புரிந்துகொள்ளாமையே.

தன் கணவன் தன் மேல் அன்பு வைத்திருக்கிறாரா? தன்னை அவருக்கு பிடிக்குமா? தன்னால் அவருக்கு நிம்மதி கிடைத்திருக்கிறதா? என்ற கேள்விகள் எழாத மனைவியர்கள் இல்லை. இதே கேள்விகள் கணவன்மார்களிடமும் காணத்தான் செய்கின்றது. கேள்விக்கான பதிலை அறிந்து கொள்வதற்கான வழிகள் தெரியாமல், தடுமாறி நிற்கின்றனர் தம்பதிகள். இருவரும் தங்களுக்காக நேரம் ஒதுக்கிகொண்டால் மாத்திரமே இதற்கான வழி பிறக்கும் கணவன் வரும்போது மனைவி அடுப்படியில்



இல்லாமல் இருக்க வேண்டும். வீட்டுக்கு வரும் கணவன் வெளிப்பிரச்சனைகளை வெளியிலேயே விட்டுவிட்டு வரவேண்டும். அது இயலவில்லையெனில் மனைவியிடம் அத் தருணமே பகிர்ந்துவிட்டு, அதிலிருந்து வெளியே வர வேண்டும். இருவரும் தங்களிருவருக்காகவும் ஒதுக்கிக்கொண்ட நேரத்தில் செல்.ீ.போனை தொடக்கூடாது.

இதுபோன்ற சில முயற்சிகளை தங்கள் வாழ்வின் வளத்திற்காக மேற்கொண்டாலே போதும், ஒருவர், ஒருவரைப் பற்றி புரிந்து கொள்வதற்கான வழி கிடைத்துவிடும். வாழ்க்கைப் பயணமும் இறையருளால் இனிமையாகத் தொடரும் இன்ஷா அல்லாஹ்.

முற்றும் .. ..

– இம்தியாஸ் ஸலபி –



# வத்தல் குழம்பு (வாழைகாய்)

**தேவையான பொருட்கள்**

நாட்டு வாழைக்காய் - 5, கடலைப்பருப்பு - 150 கிராம், மஞ்சள் தூள் - 1 தே.கரண்டி, சீரகப்பொடி - 2 தே.கரண்டி, தேங்காய் மூடி - 1 சிறியது, சின்ன வெங்காயம் - 4, மிளகாய் வத்தல் - 5, கடுகுஉளுந்து - தேவையான அளவு, கருவேப்பிலை - தேவையான அளவு, சின்ன வெங்காயம் - 6, எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

கடலைப்பருப்பை இரண்டு மணிநேரத்திற்கு முன்பே ஊறவைத்துக்கொள்ளவும். வாழைக்காயை தோல் சீவி பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். பின் ஊறவைத்த கடலைப்பருப்பில் மஞ்சள்தூள், சீரகப்பொடியுடன் வெங்காயத்தை தட்டிப் போட்டு வேகவைக்கவும். (முக்கால் வேக்காடு வேகவைத்தால் போதும்). வெந்த கடலைப்பருப்பில் பொடியாக நறுக்கி வைத்த வாழைக்காய், உப்பு சேர்த்து 15 நிமிடம் வேகவைக்க வேண்டும். பின்னர் தேங்காய்



துறுவலை வழுவழுவென்று அரைக்காமல் கரகரவென்று அரைத்து சேர்க்கவும். அதன் பிறகு தாச்சியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு கடுகுஉளுந்து, மிளகாய்வத்தல், கருவேப்பிலை, வெங்காயம் சேர்த்து தாளிக்கவும்.

வத்தல்குழம்பு தயார்.

# முக சருமத்தை மிளிர வைக்க . . .

**சூரியனில் இருக்கும் யூ.வி.கதிர் முகத்தில் படுவதால் தான் தோல் பாதிக்கப்பட்டு கருமை நிறமாகிறது. இதைத் தடுக்க**



**அழகு குறிப்பு**

- கடல்பாசி, சந்தன எண்ணெய், பன்னீர் மூன்றையும் சில துளிகள் கலந்து தடவினால் தோல் அழகு பெறும்.
- பாலுடன் எலுமிச்சை சாறு கலந்து, அதனுடன் சிறிதளவு சர்க்கரையை சேர்த்து, முகத்தில் பூசவும். அரைமணி நேரம் கழித்து, வெந்நீரில் கழுவினால் முகம் பளபளக்கும்.
- கசகசாவை ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.
- பப்பாளிச் சாற்றை முகத்தில் தடவினால், வியர்குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.
- கொத்துமல்லி இலையை அரைத்து பூசினால் முகம் வசீகரமாக மாறும்.
- எல்லா வித பழங்களும் முகத்திற்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனே சுத்தமடைந்து பளபளப்பாய் காட்சி தரும்.
- தக்காளி சாறு தடவி வந்தால் சருமத்தை மிருதுவாக்கி ஒளிரச் செய்யும்.
- கசகசாவை மூன்று அல்லது நான்கு ஸ்பூன் எடுத்து அரைத்து வடித்த கஞ்சி அல்லது தயிரில் போட்டுக் கலக்கி உடம்பில் தேய்த்துக் குளித்துவர, சரும அரிப்பு, உடல் வெப்பம் போன்ற தொல்லைகள் தீரும்.





# மருத்துவம்

## நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிகள்

பல்வேறு உபாதைகளுக்கு மனிதனின் உடல்கள் ஆளாகும்போது மருத்துவத்தை நாடிச் செல்கின்றோம். இந்த மருத்துவமும் மனிதர்களை நோய்களிலிருந்து காப்பாற்றி ஆரோக்கிய வாழ்க்கையை வழங்குகிறது.

அந்த வகையில் சில பயனுள்ள மருத்து குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. வெந்தயம், சுண்டைக்காய் வத்தல், மிளகு தலா 50 கிராம் எடுத்து வறுத்துப் பொடி செய்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் எடை குறையும்.
2. முழு நெல்லிக்காய் 4, பச்சை மிளகாய் 2, வெல்லம் சிறிதளவு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்துச் சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளுக்கு தீர்வு காணலாம்.
3. வெற்றிலையுடன் மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டைப் புண் மற்றும் இருமல் குணமாகும்.
4. வில்வ பழத்தின் தோலை சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல் சுத்தம் ஆகும்.
5. முருங்கைக் கீரை சாற்றில் தேன் மற்றும் சுண்ணாம்பைக் குழைத்து தொண்டையில் தடவிக் கொண்டால் இருமல் சரியாகும்.


# மூட்டுவலிக்கு நிவாரணமாகும் பயிற்சிகள்

முழங்கால் மூட்டுக்கு அதிக அழுத்தம் கொடுப்பதே மூட்டுவலிக்கு காரணமாகும். இதனை எளிதான உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம் குறைக்கலாம்.



**Leg Extension**

முதலில் நாற்காலியில் அமர்ந்து கொள்ள வேண்டும், பின்னர் ஒவ்வொரு காலையும் பொறுமையாக நீட்டி 10 முதல் 15 நிமிடங்கள் அப்படியே வைத்திருந்து மடக்கவும். இதே போன்று 5-7 முறை செய்யவும், தொடர்ந்து செய்து வந்தால் ஒரு மாதத்தில் வித்தியாசத்தினை காணலாம்.



**Sit- Ups**

கால்களை அகட்டி, கைகளை முன்நோக்கி நீட்டி, நாற்காலியில் உட்கார்வது போல செய்ய வேண்டும். சில நொடிகள் இதேநிலையில் இருந்துவிட்டு, பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும். இது போல் 15 முதல் 20 முறை செய்ய வேண்டும்.



**Lying and Leg Raising**

தரையில் மல்லாக்கப்படுத்துக் கொண்டு வலது காலை மேல் நோக்கி உயர்த்தி 20 நொடிகள் வரை அப்படியே வைக்கவும், பின்னர் பழைய நிலைக்கு திரும்பவும். இதையே இடது காலுக்கு செய்ய வேண்டும், இதுபோல் 5-7 முறை செய்யவும்.

**Leg Curl**

தரையில் குப்புறப் படுத்துக்கொண்டு முழங்காலை பின் நோக்கி மடக்கி பின்பு நீட்ட வேண்டும். அடுத்த காலுக்கும் இந்த பயிற்சியை செய்யவும், இவ்வாறு இந்த பயிற்சியை 5 முதல் 10 நிமிடம் செய்ய வேண்டும்.



# இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** :மனதில் நம்பிக்கை, தைரியம் வளரும். கண்களில் மலர்ச்சி உண்டாகும். வாகன பயன்பாடு அதிகரிக்கும்.



**ரிஷபம்** : இடம் அறிந்து பேசுவது நல்லது. அதிக விலையுள்ள பொருட்களை பாதுகாக்கவும். வரும் சிரமத்தை சரிசெய்வீர்கள்.



**மிதுனம்** : சுயகௌரவம் பாதுகாக்குமாறு செயல்படுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம்பெறும். அரசு உதவி கிடைத்து, மனதில் நம்பிக்கை வளரும்.



**கடகம்** : வாழ்வில் முன்னேற, அதிர்ஷ்டகரமான வாய்ப்பு வரும். நல்ல முயற்சி, முழு அளவில் வெற்றியை தரும்.



**சிம்மம்**: பிறர் மீதுள்ள அதிருப்தியை வெளிப்படுத்த வேண்டாம். குடும்பத்திற்கான பணத்தேவை அதிகரிக்கும்.



**கன்னி** : கால்நடை வளர்ப்பில் லாபம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர் அதிக பாசம் கொள்வர். வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு.



**துலாம்** :சமூகத்தில் பெற்ற நற்பெயரை கவனத்தில் கொண்டு செயல்படுவீர்கள். பேசுவதில் நிதானம், சில நன்மையை தரும்.



**விருச்சிகம்** : உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். நற்செயல் புரிந்து நன்மதிப்பு, பெறுவீர்கள். இடையூறு விலகி, புதிய பாதையில் நடை போடுவீர்கள்.



**தனுசு** : நிகழ்வுகளின் போக்கு உணர்ந்து, பொறுமையுடன் செயல்படுவது நல்லது. பணச்செலவு அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுடன் மனக்கிலேசம் ஏற்படும். ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.



**மகரம்** : ஆன்மிக நம்பிக்கை வளரும். உடன்பிறந்தவர் கூடுதல் அன்பு, பாசம் கொள்வர். குடும்பத்தின் தேவையை தாராள பணச்செலவில் பூர்த்தி செய்வீர்கள்.



**கும்பம்** : புதிய திட்டம் நிறைவேறும். சமூகத்தில் அந்தஸ்து பெருகும். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். மனதில் நிம்மதி உண்டாகும்.



**மீனம்** :நற்குணம் உள்ளவர்களின் உதவி, கிடைக்கும். பணியில் முழுமனதுடன் ஈடுபடுவீர்கள். அதிக பயன் தராத பொருளை, நிர்பந்தத்தில் வாங்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்


## கிரிக்கட் சுற்றுப்போட்டி

தமிழ், சிங்கள புதுவருடத்தை யொட்டி அம்பாறை மாவட்ட சிவில் பிரஜைகள் அமைப்பு ஏற்பாடு செய்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி, கடந்த வியாழக்கிழமை அக்கரைப்பற்று இராணுவ முகாம் மைதானத்தில் இடம்பெற்றது. அமைப்பின் தலைவர் அன்வர் நெளசாத் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் அட்டாளைச் சேனை லக்கி விளையாட்டுக் கழகமும் அக்கரைப்பற்று ஜீனியஸ் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றின. முதலில் துடுப்பெடுத்தாடிய லக்கி அணியினர் 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றனர். வெற்றி பெறுவதற்கு 71 ஓட்டங்களைப் பெறத்துடுப்பெடுத்தாடிய ஜீனியஸ் அணியினர் 8 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். மேலதிக 26 ஓட்டங்களினால் லக்கி அணியினர் வெற்றி பெற்றனர்.

## ஈஸ்ட் ஹில் முனபள்ளி இல்ல விளையாட்டுப் போட்டி

– தன்யா –







மும்மொழிகளிலும் நடாத்தப்படும் ஈஸ்ட் ஹில் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை (11.04.2015) அன்று புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. டொம், ஜெரி எனும் இரு இல்லங்களைக் கொண்ட இப்பாடசாலையின் பிரதம அதிதிகளாக புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் என்.நதீர் அவர்களும், சிங்கள மத்திய மகா வித்தியாலயத்தினைச் சேர்ந்த மாணவி வீ.திஸ்ஸங்கி அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இப்போட்டியின் போது திரு.மயூரன் அவர்களும், திரு.வினோதன் அவர்களும் நடுவர்களாக கடமையாற்றினார்கள்.

438 புள்ளிகளைப் பெற்ற டொம் இல்லம் இரண்டாம் இடத்தினைப் பெற்றதோடு, 508 புள்ளிகளைப் பெற்ற ஜெரி இல்லம் இம்முறை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டியில் பெற்றோருக்கான போட்டிகளும் இடம்பெற்றன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. திரு.நேசன் அவர்களால் சென்ட். ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவியும் பெற்றுக் கொடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# விளையாட்டு முரசு

## கலைவாணி முன்பள்ளி – விளையாட்டுப் போட்டி





திருகோணமலை கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை மாலை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதன் போது நிகழ்வின் முதன்மை அதிதியான திருகோணமலை நகர சபைத் தலைவர் க.செல்வராஜா உட்பட ஏனைய அதிதிகள் மாணவ மணிகளால் வரவேற்கப்பட்டனர்.

முன்பள்ளியின் பிரதம ஆசிரியர் செல்வி.ந.ரோகினி தேவியின் தலைமையில் குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகிய இல்லங்களுக் கிடையில் இப் போட்டி இடம் பெற்றது. அத்துடன் சிறார்களின் உடற் பயிற்சி கண்காட்சியும் இடம்பெற்றது.



– சேனையூர் நிரூபர் –

## குச்சவெளி கோட்ட வி.போட்டி

குச்சவெளி கோட்டம் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி 09.04.2015 அன்று நிலாவெளி பொது மைதானத்தில் நடைபெற்றது. 21 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு கொண்டார்கள். நிலாவெளி அல் பக்தா முஸ்லிம் மகா வித்தியாலயம் சம்பியன் நிலையினையும், முகமதியா முஸ்லிம் வித்தியாயலயம் இரண்டாம் நிலையினையும் பெற்றுக் கொண்டன. சேவைக்கால பயிற்சி ஆசிரியர் ஆலோசகர் செல்வி.வி.வியாகராஜா இப்போட்டிகளை ஏற்பாடு செய்து ஒழுங்கமைத்திருந்தார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு உதவிச் செயலாளர் எம்,கெ.எம்.மன்சூர் பிரதம அதிதியாகவும், திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரன் கௌரவ விருந்தினராகவும் குச்சவெளிக் கோட்டப் பணிப்பாளர் திரு.செல்வநாயகமும் கலந்துகொண்டனர்.

– சேனையூர் நிரூபர் –



## நடிகையின் சலுகை



ரஷ்யாவில் பிரிமியர் லீக் சம்பியன் கால்பந்து போட்டிகள் நடைபெற்று வருகிறது. இது குறித்து ரஷ்யாவின் ஆபாச சினிமா நடிகை அலினா ஏரிமென்கோ பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்தபோது, ஆபாச நடிகைகளுக்கு கால்பந்து பிடிக்கும். ஏன் என்றால் அதில் அழகான சிறுவர்கள் விளையாடுகிறார்கள். நல்ல கண்கள் மற்றும் அமைதியான சுபாவம் கொண்ட முன்கள வீரர் அலெக்ஸாண்டர் கோக்ரினுக்கு 10 மதிப்பெண்கள் கொடுக்கலாம். லீக் போட்டிகளில் அலெக்ஸாண்டர் கோக்ரின் 5 கோல்கள் அடித்தால், போட்டி முடிந்த பிறகு அவருடன் 16 மணி நேரம் செக்ஸ் மரதன் நடத்த உறுதியளிப்பதாக கூறியுள்ளார்.

## பயிற்றுவிப்பாளராக – கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக உள்ள டங்கன் பிளட்சரின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில், புதிய பயிற்சியாளராக கங்குலி நியமிக்கப்படுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த இரண்டு நாட்களுக்கு முன் இது தொடர்பாக கங்குலிக்கும், பி.சி.சி.ஐ. தலைவராக உள்ள ஜக்மோகன் டால்மியாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றதாக கூறப்படுகிறது.

கங்குலி இந்திய அணியின் தலைவராக இருந்தபோது, பல போட்டிகளில் முத்திரை பதித்து பல வெற்றிகளை தேடித்தந்தமை குறிப்பிடத்தக்கது.

## அணியின் புதிய தலைவர்



பிலிப்பைன்சில் இடம்பெறவுள்ள ஆசிய பிராந்திய றகர் போட்டித் தொடருக்கு இலங்கை அணியின் தலைவராக கண்டி அணியின் பிரபல வீரர் பாசில் மரீஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர் வரும் 6ஆம் திகதி பிலிப்பைனில் இப்போட்டிகள் இடம்பெற உள்ளன. சுமார் 25,000 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடிய புலகான் விளையாட்டரங்கில் இப்போட்டிகள் இடம்பெற உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## இனி உதவிகள் வழங்கப்படாது

International Cricket Council

இலங்கை கிரிக்கெட்டில் மேற் கொள்ளப்படும் அரச தலையீடு களை பரிசீலிக்க சர்வதேச கிரிக் கெட் கவுன்சில் தீர்மானித்துள்ளது. அதேநேரம் திருப்தியடையக்கூடிய தீர்வு கிடைக்கும் வரை இலங்கை கிரிக்கெட்டிற்கு வழங்கப்படும் நிதி உதவியை தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் பணிப்பாளர்கள் சபை கூடியபோது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## நொக்கவுட் தொடர்

இங்கிலாந்தின் நொக்அவுட் போட்டித்தொடரான எப்ஏயில் 1:0 என்ற கணக்கில் பிளக்பேர்ன் அணியை தோற்கடித்து லிவர்பூல் அணி அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் பிலிப்பி கொத்தின்கோ பெற்ற ஒரேயொரு கோலின் மூலமே லிவர்பூல் அணி வெற்றிபெற்றது. லிவர்பூல் அணி அரையிறுதியில் வரும் ஏப்ரல் 19ஆம் திகதி ஆஸ்டன் வில்லாவை சந்திக்கவுள்ளது.

## மனம் திறக்கும் கோஹ்லி



உலகக் கிண்ண தொடரின் அரை இறுதிப் போட்டியில் விராத் கோலி மோசமாக துடுபாடியமைக்கு விமர்சித்தமை தொடர்பில் மனம் திறக்கும் கோலி, "தனது தோல்விக்கு தனது தனிப்பட்ட வாழ்வையும் தனது காதலி அனுஷ்கா ஷர்மாவை விமர்சித்ததும் தனக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என கூறியுள்ளார். கடந்த ஐந்து வருடங்களாக இந்திய அணிக்காக சிறப்பாக விளையாடி ஓட்டங்களை குவித்து வருகின்றேன். ஒரு போட்டியில் தோல்வியடைந்தமைக்கு இந்தளவுக்கு விமர்சனம் செய்தமை மிகப் பெரியளவில் எனக்கு அதிருப்தியை வழங்கியுள்ளது. இவற்றை என்னால் தடுக்க ஏலாது. ஆனால் வலிக்கிறது" என மேலும் அவர் கூறியுள்ளார்.

## ஆசியத் தொடர் இருபதுக்கு - 20




1984 ஆம் ஆண்டு முதல் 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டியாக இடம்பெற்று வந்த ஆசியக் கிண்ணப்போட்டி அடுத்தவருடம் முதல் இருபதுக்கு-20 போட்டித் தொடராக இடம்பெறவுள்ளதாக ஆசிய சம்மேளனம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஆசிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கலைக்கப்பட்டு பொறுப்புகள் அனைத்தும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் ஆசிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முதன்மை அதிகாரி சைட் அஸ்ரபுல் அக் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஆட்சியை விட்டுக் கொடுத்தோம்

## சுமந்திரன் தெரிவிப்பு




கிழக்கின் மாகாண சபை ஆட்சியைத் தாம் விட்டுக் கொடுத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சர்வதேசப் பிரசாரகர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருப்பதாக ஐ.பி.சி தமிழ் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சுமந்திரன் இத்தகவலை வெளியிட்டுள்ளதாக அச் செய்தி தொடர்கின்றது.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஸ்ரீலங்காவில் குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் சுதந்திரமான பணியாற்றக் கூடிய சூழ்நிலை

## "தமிழ் மக்கள் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்"

## சி.வி.வி. தெரிவிப்பு



புலம்பெயர், உள்நாட்டு தமிழ் பேசும் மக்கள், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பின் தலைமைத்துவத்தின் கீழ் இணைந்து எப்பேர்ப்பட்ட ஒரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதை அறிந்து வெளியிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பின் 75ஆவது அகவைப் பூர்த்தி நிகழ்வு மன்னார் ஆயரின் வாசஸ்தலத்தில் வியாழக்கிழமை (16) நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆயர் 17

## பத்து நாட்களுக்குள் மக்களின் பிரச்சனைகளைப் பட்டியலிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணி உருவாக்கம்

சனாதிபதியின் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலணியிடம் திருகோணமலையில் நீண்டகாலம் பல பிரச்சினைகளுடன் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தரவுகளுடன் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை வலியுறுத்தி கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்கள் , கட்சிகளின் முக்கியஸ்தர்கள் ஆகியோருக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை 17

## கிழக்கு மாகாண அபிவிருத்திக் குழுத்தலைவராக முதலமைச்சர் ஹாபிஸ்



கிழக்கின் மூன்று மாவட்டங்களுக்குமான அபிவிருத்திக் குழுவின் தலைவராக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனம் தொடர்பில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், இக் கடமையினை நான் சரியாகச் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி திறுவியுள்ளோம்


ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

## ஊற்றங்கரைப் பிள்ளையார் கும்பாபிசேகம்



பழம்பெரும் தமிழ்க் கிராமமான கிண்ணியாவில் ஆதித் தமிழக் குடிகள் வாழ்ந்ததை ஆதாரப் படுத்தும் ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவில் கும்பாபிசேகம் எதிர்வரும் 22.04.2015ம் திகதி நிகழ விருப்பதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்றில் தம்பலகாமத்திலிருந்து சுமார் முப்பத்தியிரண்டு கிலோமீற்றர்கள் தொலைவில் முதன் முதலில் குடியமர்ந்த வி.காசிநாதர் என்பவரால் ஊற்றடி என்ற இடத்தில் முன்னரே அழிந்து போன கிராமமான "தீநகரி" என்ற கிராமத்திலிருந்து கொண்டுவரப் பட்ட பிள்ளையார் விக்கிரகத்தை கொண்டு உருவாக்கப்பட்ட கோவில் இக் கோவில் எனத் 17

## ஆர்ப்பாட்டங்களால் நன்மைகள் உண்டா?

### கிழக்கின் ஆளுனர் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரிடம் கேள்வி

திருகோணமலை மாவட்டத்தில் கடத்தப்பட்டோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் கிழக்கு மாகாண ஆளுனர் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த 10.04.2015 மாலை 3.00 மணியளவில் ஆளுனரைச் சந்தித்திருந்தனர்..

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் ஓர் அரச அதிகாரி காணாமல் ஆக்கப்பட்டோரின் குறைகளைக் கேட்டறிந்த முதற் சந்தர்ப்பம் இதுதான் எனத் தெரிவித்துள்ள சங்கத்தினர் கடந்த காலங்களில் இருந்த இறுக்கமான அல்லது ஆபத்தான அரசியல் சூழ்நிலையின் நிமிர்த்தம் எமது பிள்ளைகளைக் கடத்தியவர்களை அடையாளம் தெரிந்திருந்தும் நாம் இனந்தெரியாதவர்கள் என பல இடங்களிலும் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் எனவும் தற்போது உண்மையினைக் கதைக்கக் கூடிய அரசியல் சூழ்நிலை இருப்பதால் எமது பிள்ளைகளை கடத்தியவர்களை அடையாளம் காட்டத் தயாராக உள்ளோம் எனவும் சங்கத்தினர் ஆளுனரிடம் தெரிவித்துள்ளனர்.

எமது பிள்ளைகள் இருக்கிறார்களா அல்லது இல்லையா என்பதை கூறுங்கள் என்பதுடன் எமது உறவுகளின் வீடுகளுக்கு இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினர் தொலைபேசி ஊடாகவும், நேரடியாகவும் வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்துகிறார்கள் அதனை உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்துள்ள ஆளுனர் உறவுகளைக் கடத்தியவர்களை அடையாளம் காட்ட முடியுமா எனக் கேட்டதுடன் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள் எடுக்கிறீர்களே இதனால் ஏதாவது நன்மைகள் உங்களுக்கு கிடைத்திருக்கின்றனவா என விசாரித்துள்ளார்.

மேலும் உங்கள் உறவுகள் உள்ளனர் அல்லது இல்லை என்றால் நீங்கள் எதனை அரசிடம் எதிர்ப்பார்பீர்கள் என வினவிய அவர் நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org